# தன்னை அறியும் தத்துவங்கள்



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தன்னை அறியும் தத்துவங்கள் |
| விளக்க ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | தத்துவங்கள் |
| முதற்பதிப்பு | : | 2019 |
| பக்கங்கள் | : | 194 |
| தாள் | : | A5 (5.83" X 8.27") |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அகவிழிப்பு |

# தன்னை அறியும் தத்துவங்கள்

ப்ரக்ஞன்

ஸ்ரீ குருப்யோ நம:

# என்னுரை

**"தன்னை அறிய தனக்கொரு கேடில்லை"** - திருமந்திரத்தில் மகான் திருமூலர் ஒவ்வொரு ஜீவனும் தனக்கு கிடைத்த இந்த மனித தேகத்தைக் கொண்டு, தன்னுள் இருக்கின்ற அந்த அழியா ஆற்றலை, ஆனந்த ஊற்றை, ஆத்ம தத்துவத்தை தனக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக அறிவான ஆறாவது ஆறிவைக் கொண்டு அறிந்து கொள்ள வேண்டும் என்கின்றார்.

இல்லையெனில் இந்த மனிதப் பிறவி கிடைத்தும், அதை வீணாக்கிய பாவமும் சேர்ந்துக் கொண்டு, மீண்டும், பல சுழற்சிகளுக்கு உட்பட்டு இந்த மனித தேகம் கிடைக்க எத்தனை நூறு ஆண்டுகள் ஆகும் என்று கால தேவனிடம்தான் கணக்கைக் கேட்க வேண்டும்.

இந்த தத்துவ ஞானத்தை அடைந்த மெய் ஞானிகள் மீண்டும் பிறவா பெரு நிலை அடைந்து, என்றென்றும், அழியாப் புகழுடன், அந்த சச்சிதானந்த ரூபமாகவே நிலைத்திருக்கின்றார்கள்.

அவர்களது தொண்டு, மூன்று தேகங்களில் முக்கியமான காரண தேகத்தினை கண்டறிந்து, அதைக் கடவுளிடமே

கரைக்கின்ற கைவல்யத்தை நமக்கு உபதேசித்து, அதன் வாயிலாக பல எண்ணற்ற ஜீவன்களை கடைத்தேற்ற காரணமாகவும் இருந்திருக் கின்றார்கள்.

அவர்களின் அரிய பொக்கிஷங்களில் ஒன்று தான் இந்த “**தன்னை அறியும் தத்துவங்கள்**” என்ற தலையாய நூல்.

இந்த நூலின் வாயிலாக அந்த பரமாத்மாவை அறிந்துக் கொள்ள இந்த ஸ்தூல தேகம் எப்படிப் பயன் படப் போகின்றது என்பதை, இந்த தேகத்தின் மிக முக்கிய விசயமாக, அனைத்தையும் அறியும் அறிவு என்ற ஒன்றைக் கண்டு, அந்த அறிவை கொண்டு, அழியாத பேரறிவை அறியும் அற்புதமான ஆராய்ச்சிகளாக இந்த நூல் அமைந்துள்ளது.

இதைப் படிக்க சிறிது, பொறுமையும், சகிப்புத் தன்மையும் இருந்தால் மட்டுமே, இதில் கூறப்பட்டுள்ள விசயங்களை அறிந்து, அறிவால் உயர்ந்து, என்றும் நிலையான ஆனந்தத்தை அடைய முடியும்.

இன்றைய இளைய சமுதாயம் எளிய தமிழில் கற்று பயனடையும் வகையில் இந்த “**தன்னை அறியும் தத்துவங்கள்**” என்ற இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

வேத சாஸ்திரத்தின் பிற்பகுதியான “**வேதாந்தம்**” மனிதனை மகத்தானவனாக மாற்றக் கூடிய வல்லமை கொண்டதினால், இத்தகைய வேதாந்தப் பிரகரணங் களைக்

# தன்னை அறியும் தத்துவங்கள்

கற்றறிய விழையும் சாதகர்கள், அடிப்படை வேதாந்தத் தத்துவங்களை எளிய தமிழில் அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற உயர் நோக்கத்தில் இந்த நூல் எழுதப்படுகின்றது.

இங்கு பட்டியலிடும் தத்துவங்களுக்கான விளக்கங் களைத் தேடிக் கற்றறியும் போது, சாதகனுக்கான அடிப்படை அறிவு கட்டமைக்கப்பட்டு விடுகின்றது.

இந்த நூலின் வாயிலாக நாம் எதைக் கற்க விரும்பினாலும், கற்கின்ற விசயங்களை சுக, துக்கங் களாக அனுபவிக்கக்கூடிய மனம் என்ற ஒன்றும், அந்த அனுபவத்திற்கு இருப்பிடமான மனம் தங்குவதற்கு இந்த உடல் என்ற ஒன்றும், இந்த இரண்டையும் இயக்க வைக்க, இவைகளை இயக்கக்கூடிய இயக்குனராக பரமா(ஆ)த்மா என்ற ஒன்றும் ஆக, இந்த மூன்று முக்கிய விசயங்களைப் பற்றியே விரிவாக இந்த நூல் எடுத்துக்கூற உள்ளது.

நம்முடைய மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், ஞானேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள், பஞ்ச பிராணன்கள் (பிராண பஞ்சகம்), ஸ்தூல தேகம், சூக்ஷம தேகம், காரண தேகம், ஜாக்ரத அவஸ்தை, ஸ்வப்ன அவஸ்தை, ஸுஷுப்தி அவஸ்தை (ஆகிய அவஸ்தாத் திரையங்கள்), விசுவன், தைஜஸன், பிராக்ஞன் (ஆகிய அபிமானித் திரையங்கள்), விராட், ஹிரண்யகர்ப்பன், ஈசுவரன் (ஆகிய சமஷ்டி சரீரத் திரயம்), சிருஷ்டி, ஸ்திதி, லயம் (ஆகிய சமஷ்டி அவத்தாத் திரையம்), வைசுவானரன், தைஜஸன், ஈசுவரன் (ஆகிய சமஷ்டி அபிமானித்திரயம்), துவம் பதத்தின் லக்ஷியார்த்தம்,

# தன்னை அறியும் தத்துவங்கள்

தத் பதத்தின் லக்ஷியார்த்தம் ஆகிய தத்துவங்களை விளக்கினால் மட்டுமே, இந்த நூல் முழுமையடையும்.

இந்தத் தத்துவங்களையும் கூட, ஒரு ஒழுங்கு வரிசையில் விளங்கிக் கொள்ள முற்படுவோம்.

முதலில் நம் அனுபவங்கள், அனுபவிக்கப்படும் விஷயங்கள், விஷயங்களை உள்வாங்கும் புலன்கள், உள்வாங்கப்பட்ட விஷயங்களைப் பகுத்துரைக்கும் அந்தக்கரணங்கள், அந்தக்கரணங்களால் ஏவப்பெறும் புலன்கள் என்று வரிசைப்படுத்தி இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நூலை நன்கு, ஆழ்ந்து ஒரு முறைக்கு, பல முறையாகப் படித்து புரிந்து கொள்பவர்கள் நிச்சயமாக வேதாந்தத்தின் மற்ற நூல்களை எளிதாகப் புரிந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்**

# தன்னை அறியும் தத்துவங்கள்

## <u>பிரபஞ்சத் தத்துவம்</u>

இறைவன் படைக்கும் முன் இந்த பிரபஞ்சம் பெயர் உருவமற்று சுத்த வெளியாய், நிர்குணமாய், சின்மாத்திரப் பரப்பிரம்மமாக இருந்தது.

அதிலிருந்து பிரமையினால் கானல் நீர் தோன்றுவது போல் மூலப் பிரகிருதி என்னும் மாயை முதன் முதலில் பரப்பிரம்மத்திடம் இருந்து தோன்றியது.

அந்த மூலப்பிரக்ருதியிடமிருந்து வெண்மை, சிவப்பு மற்றும் கறுப்பு என்ற மூன்று வர்ணங்களுடன் கூடிய மூன்று சக்திகள் உருவாயிற்று.

இதில் வெண்மை நிறமே மாயா சக்தி, சிவப்பு நிறமே அவித்தியா சக்தி, மற்றும் கறுப்பு நிறமே ஆவரண, விக்ஷேப சக்தி எனப்படும்.

இந்த மாயா சக்தி சத்துவ குணம் பிரதானமாகக் கொண்டுள்ளதால், அதில் உண்டாகிய பிரதி பிம்பமே **"ஈஸ்வரன்"** என்று சொல்லப்படுகின்றது.

அந்த ஈஸ்வரனே ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழிலை செய்யக்கூடிய பிரமன், விஷ்ணு மற்றும் மஹேஸ்வரன் என்ற மூவரும் ஆவார்கள்.

பிரம்மத்திலிருந்து முதலில் தோன்றிய மாயையிலிருந்து அவித்தையும் (அஞ்ஞானம்), அவித்தையிலிருந்து அஹங்காரம் என்னும் ஆவரண, விக்ஷேப சக்தியும், அதிலிருந்து சப்த (ஒலி), ஸ்பரிச (உணர்சி), ரூப (தோற்றம்), ரச (நீர்), கந்த (மணம்) எனும் ஐந்து **"தன்மாத்திரைகள்"** உண்டாகின.

இதிலிருந்து, சூட்சுமமாக (கண்ணிற்குத்தெரியாத) மண், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் என்ற பஞ்ச பூதங்கள் தோன்றின.

மாயையினால் தோன்றிய பிரபஞ்சமும், மாயா சரீரமும் தோன்றி மறைந்து, தோன்றி மறைந்து ஜீவன்களை பிறப்பு, இறப்புகளுக்கு ஆளாக்கிக் கொண்டே வரும்.

முடிவாக பிரளய காலத்தில் எல்லாம் அழிவுறும். அதாவது, அனைத்து நதிகளும், கடல் நீரிலேயே உண்டாகி முடிவில் கடலிலேயே கலந்து விடுவது போன்று, புழு, பூச்சி முதற்கொண்டு, படைக்கும் பிரம்மா வரை எந்த பரப்பிரம்மத் திடமிருந்து உண்டாயினவோ, அந்தப் பரப்பிரம்மத்திலேயே ஒன்று கலந்து ஏகமாய் ஐக்கியமாகிவிடும்.

## நம்முடைய உடல்

மனித உடலானது அவரவர் கையினால் எட்டு சாண் அளவு நீலமும், நான்கு சாண் அளவு பருமனும், 96 விரற்கடைப் பிரமாணமும் உள்ளதாகும். இந்த மனித உடம்பில் 96 தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன.

## உடலின் தத்துவங்கள் 96

உடலின் வாசல்கள் 9, ஆன்மதத்துவங்கள் 24, தாதுக்கள் 7, கோசங்கள் 5, குணங்கள் 3, மலங்கள் 3, பிணிகள் அல்லது வியாதிகள் 3, ராகங்கள் அல்லது

விகாரங்கள் 8, ஆதாரங்கள் 6, மண்டலங்கள் 3, நாடிகள் 10, வாயுக்கள் 10, அவத்தைகள் 5, என மொத்தம் 96 தத்துவங்கள் ஆகும்.

## உடலின் வாசல்கள் ஒன்பது

கண்கள் 2, செவிகள் 2, மூக்குத்துவாரங்கள் 2, வாய் 1, குறி (குய்யம் எனப்படும் ஆண் அல்லது பெண் கருவாய்) 1, மலவாய் (குதம்) 1 என வாசல்கள் ஒன்பது ஆகும்.

## ஆன்ம தத்துவங்கள் 24

பூதங்கள் 5, ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, தன்மாத்திரைகள் 5, அந்தக்கரணங்கள் 4 என மொத்தம் 24 ஆகும்.

## பூதங்கள் ஐந்து

1. பிருத்வி (பூமி), 2. அப்பு (ஜலம்), 3. தேயு (அக்னி), 4. வாயு (காற்று), 5. ஆகாயம் (விசும்பு) என பஞ்ச பூதங்கள் ஆகும்.

## ஐந்து பூதங்களால் உடல் உண்டாதல்

ஸ்தூல (கண்ணிற்கு தெரிகின்ற) மண், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் என்ற ஐந்து பூதங்களும் உண்டாகி, பூதங்கள் ஐந்தில் ஒவ்வொரு பூதத்திலிருந்து இரண்டு பூதங்களாகப் பிரிந்து, அவைகளில் பிரிந்த இரண்டு விதமான பஞ்ச பூதங்களில் ஒன்று அனைத்தும் சேர்ந்து சமஸ்டி, (ஒன்றாகவும்) யாகவும், மற்றொன்று வியஸ்டி (தனித்தனியாக) யாகவும் என ஐந்து பூதங்களும் தோன்றின.

இதில், ஐந்து பூதங்களும் ஒன்றேயான சமஸ்டி பஞ்ச பூதங்கள் **“பிரபஞ்சம்”** ஆயிற்று.

இரண்டாவதகாக பிரிந்த ஐந்து பூதங்களும் தனித்தனியாக அப்படியே வியஸ்டியாக உள்ள அந்த பஞ்ச பூதங்கள் **“இருபத்தைந்து தத்துவங்களாக”** உண்டாயிற்று.

அது எப்படியென்றால்,

இதுப்போல, பஞ்சபூதங்களையும் சமஸ்டி, வியஸ்டி பாகங்களாகச் செய்து ஒரு பூதத்துடன் மற்றொரு பூதம் சேர்ந்த போது இருபத்தைந்து தத்துவங்களாக ஜீவர்களுக்கு உடல் கிடைக்கின்றது.

இந்த உடலானது சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் மற்றும் கந்தம் ஆகிய விஷயங்களை உள்வாங்கும் கருவிகளைக் குறித்து சற்றே ஆராய்வோம்.

சப்தத்தை காது வழியாகவும், ஸ்பரிசத்தை மேல் தோல் வழியாகவும், ரூபத்தை கண் (கள்) வழியாகவும், ரசத்தை நாக்கு வழியாகவும், கந்தத்தை மூக்கு வழியாகவும் நாம் உள்வாங்குகின்றோம்.

காது, தோல், கண், நாக்கு மற்றும் மூக்கு ஆகியன, நம் உடலின் உறுப்புகள் என்று அறிவோம்.

நம் உடலுக்கு வெளியே இருக்கும் விஷயங்களை உள்வாங்க உதவும் இந்தக் கருவிகள், மற்றும் விஷயங்களை உள்வாங்கும் அவற்றின் திறன் ஆகியன ஒருங்கே **‘இந்திரியங்கள்’** என்று அழைக்கப்படுகின்றன.

இவைகள் விஷயங்கள் குறித்த ஞானத்தை உள்வாங்கும் கருவிகளாதலால் ஞான இந்திரியங்கள் அல்லது **‘ஞானேந்திரியங்கள்’** என்றும் உடலுக்கு வெளியிலிருக்கும் விஷயங்களை உள்வாங்குதலால் புறக்கரணங்கள் அல்லது புறக்கருவிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

உண்மையில் காது, தோல், கண், நாக்கு மற்றும் மூக்கு ஆகியன வெறும் உடல் உறுப்புகளே. அவைகள் **"கோளகங்கள்"** என்றும் அழைக்கப்படுகின்றன.

கோளகங்கள், இந்திரியங்களின் கருவிகளே யன்றி, அவையே இந்திரியங்கள் ஆகா.

நாம் இந்திரியம் எனக்குறிப்பிடுவது, அந்தக் கோளகங்கள் மற்றும், அவற்றின் இயல்பான, விஷயங்களை, உள்வாங்கிப் பகுத்தறியும் திறனும் உட்பட்ட ஒரு தொகுப்பையே ஆகும்.

நம் காதுகள், சப்தத்தை உள்வாங்கி அறிய உதவுகின்றன. தோல் ஸ்பரிசத்தையும், கண்கள் ரூபத்தையும், நாக்கு ரஸத்தையும், மூக்கு கந்தத்தையும் உள்வாங்கி அறிய உதவுகின்றன.

விஷயங்கள் குறித்த அறிவை நமக்குத் தருவதால், இந்த ஐந்து கருவிகளும் அறிவுக் கருவிகள் அல்லது ஞானேந்திரியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இதற்குப் ப்ரமாணமாக *தத்வ போதம்*, *'ச்ரோத்ரம் த்வக் சக்ஷு: ரஸனா க்ராணம் இதி பஞ்ச ஞானேந்த்ரியாணி'* என்றும், *விவேக சூடாமணி, 'புத்தீந்த்ரியாணி ச்ரவணம் த்வகக்ஷி க்ராணஞ் ச ஜிஹ்வா விஷயாவ போதனாத் /'* என்றும் அறிவிக்கின்றன.

சப்தம் என்ற விஷயத்திற்கும், காது என்ற கருவிக்கும் பொதுவான அடிப்படை ஒன்று இருக்க வேண்டுமே?

அதே போல, ஸ்பரிசத்திற்கும் தோலுக்கும், ரூபத்திற்கும் கண்ணுக்கும், ரஸத்திற்கும் நாக்குக்கும், கந்தத்திற்கும் மூக்குக்கும் பொதுவான அடிப்படைகள் உள்ளனவா?

*'விஷயங்களில் வெளிப்படுதலும், இந்திரியங்களில் உள் வாங்கப்படுவதும் குணங்களின் தொழில், குணங்களே குணங்களில் ப்ரவ்ருத்திக்கின்றன'* என்பதை பகவத்கீதை 'குணா குணேஷு வர்தந்தே' என்றது.

சப்தம் என்ற விஷயத்தில் வெளிப்படுவதும், காது என்ற இந்திரியத்தால் உள்வாங்கப்படுவதும் ஒரே குணமே. ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய விஷயங்களில் வெளிப்படுவனவும், முறையே தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய இந்திரியங்களில் உள்வாங்கப்படுவனவும் அவ்வாறே.

## தன்னை அறியும் தத்துவங்கள்

ஒலிவாங்கியில் சப்தம் மின் அதிர்வாக மாற்றப் படுவதையும், ஒலிபெருக்கியில் மின் அதிர்வுகள் சப்தமாக மாற்றப்படுவதையும் நமக்கு பௌதிகம் விளக்குகின்றது.

அது செயல் சார்ந்த விளக்கம். இங்கு நாம் அறிய முயல்வது 'குணங்கள்' சார்ந்த விளக்கம்.

சப்தம் என்ற விஷயத்திற்கு எந்த ஒரு ஆதார குணம் அடிப்படையாக இருக்கின்றதோ, அந்த ஆதார குணமே காது என்ற கருவிக்கும் அடிப்படையாக இருக்கின்றது. மற்ற விஷயங்களுக்கும் கருவிகளுக்குமான தொடர்பும் அவ்வாறே. இந்த குணங்களை மேலும் விரிவாக ஆராய்வோம்.

உயிருள்ள, உயிரற்ற சகல வஸ்துக்களும் என்ன வேதிப்பொருள்களால் ஆனவை என்றும், அவற்றின் ஆதார மூலக்கூறான அணுவையும், அணுவின் உட்கூறுகளையும் பௌதிகமும் வேதியியலும் ஆய்ந்து வகைப்படுத்தி வைத்திருப்பது அறிவோம்.

சாஸ்திரங்கள் இவற்றை ஐந்து வேறு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டே பகுக்கின்றன. பிரபஞ்சம் முழுவதையும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலம் ஆகிய ஐந்து தத்துவங்களால் வகைப்படுத்தலாம்.

இவ்வைந்தும் ஐந்து ஆதாரத் தத்துவங்கள் என்னும் பொருள்பட **"பஞ்ச பூதங்கள்"** என்று அழைக்கப்படுகின்றன.

ஆகாசம், ஆகாயம் அல்லது வெளி எனப்படுவது முதற்கூறு. (இதில் நாம் காணும் ஆகாயமும் அடங்கும் எனினும்), பிரபஞ்சம் முழுதும் பரவியிருக்கும் வெளியையே நாம் இங்கு ஆகாசத் தத்துவமாகக் குறிப்பிடுகின்றோம்.

இரண்டாம் கூறு வாயு தத்துவம் ஆகும். காற்று, வளி அல்லது வாயு தத்துவமாக குறிப்பிடப்படுவது நில்லாது இயங்கும் வாயு நிலையையே.

நெருப்பு, அக்னி அல்லது தீ என்று குறிப்பிடப்படுவது வெப்ப சக்தியான மூன்றாம் கூறு

திரவத் தன்மையை நாம் நீர் என்று குறிப்பிடுகின்றோம். இவை தவிர்த்த தாதுக்கள் எல்லாவற்றின் திடத்தன்மையை ஒருங்கே நிலம், மண் அல்லது ப்ருத்வி என்னும் ஐந்தாம் கூறாக அறிகிறோம். இவை ஐந்தையும் ஒருங்கே **'பஞ்ச மஹாபூதங்கள்'** அல்லது பஞ்ச பூதங்கள் என்று அழைப்போம்.

இவற்றில் நிலத்திற்கு கந்தம் என்ற குணமும், நீருக்கு ரஸம் என்ற குணமும், நெருப்புக்கு ரூபம் என்ற குணமும், காற்றுக்கு ஸ்பரிசம் என்ற குணமும், ஆகாசத்திற்கு சப்தம் என்ற குணமும் ப்ரதான குணங்களாகின்றன. எவ்வாறு என விரிவாய்ப் பார்ப்போம்.

வெளி என்னும் ஆகாசம், சப்தம் உருவாக ஆதாரமாக மட்டுமின்றி சப்தத்தை கடத்தும், அல்லது தாங்கும் குணம் கொண்டதாக அறியப்படுகின்றது. ஆகாசத்தின் ஆதார குணத்தினின்றே சப்தம் என்ற விஷயம் விளைகின்றது.

சப்தத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **'சப்த தன்மாத்திரை'** என்று அழைப்போம்.

இன்னும் எளிமையாகப் புரிந்து கொள்ள, ஆகாசத்துக்கு சப்தம் என்ற ஒரு குணம் இருப்பதாகக் கருதலாம்.

(சப்தமானது, அணுக்களின், மூலக்கூறுகளின் அதிர்வு களினால் உருவாகும், சக்திப் பரிணாம மாற்றமே. அதிர்வுகளே சப்தமாக வெளிப்படுகின்றன. அதிர்வுகள் காற்றிலும், நீரிலும், நிலத்திலும் உள்ள மூலக்கூறுகளிலேயே நிகழ்கின்றன. சப்தம் ஓரிடம் விட்டு மற்றோரிடம், அதிர்வலைகளாகவே கடத்தப் படுகின்றது.

இதுவும் காற்றையோ, நீரையோ, நிலத்தையோ ஊடகமாகக் கொண்டே நிகழ முடியும். வெளி அல்லது ஆகாசம், இவை யாவற்றிற்கும் இடமளித்து சப்தம் விளைவதற்கும், கடத்தப்படுதற்கும் ஆதாரமாகின்றதா?)

காற்று நம் மேல் வீசும் போது நம்மால் காற்றை ஸ்பரிசிக்கும் படி, காற்றுக்கு பருத்தன்மை உள்ளது. இந்த ஆதார குணத்திலிருந்தே ஸ்பரிசம் அல்லது **'தொடு உணர்ச்சி'** என்ற விஷயம் விளைகின்றது.

ஸ்பரிசத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **'ஸ்பரிச தன்மாத்திரை'** என்று அழைப்போம்.

காற்று சப்தத்தை விளைக்கவும், தாங்கவும், கடத்தவும் செய்கின்றதே? அதனால், அதனுள் சப்த தன்மாத்திரையும் இருக்க வேண்டுமே. ஆக காற்றுக்கு ஸ்பரிசம் மற்றும் சப்தம் ஆகிய இரண்டு குணங்கள் இருப்பதாகக் கருதலாம்.

ஆகாசத்துக்கும் வாயுவிற்கும் நாம் கண்டு உணரும் படியாக உருவம் இல்லை. ஆனால் நெருப்பை நாம் காணும் வகையில், நெருப்பிற்கு ஒளி மற்றும் வடிவம் அடங்கிய உருவம் இருக்கின்றது.

நம் கண்ணுக்குப் புலப்படும் வண்ணம் நெருப்பில் விளங்கும் இந்த ஆதார குணத்திலிருந்தே ரூபம் என்ற விஷயம் விளைகின்றது. ரூபத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **'ரூப தன்மாத்திரை'** என்று அழைப்போம்.

நெருப்பை ஸ்பரிசிக்க முடிவதால், நெருப்பில் ஸ்பரிச தன் மாத்திரையும், அது சப்தத்தை விளைத்துத் தாங்கிக் கடத்துவதால், நெருப்பில் சப்த தன்மாத்திரையும் உள்ளன.

ஆக நெருப்பிற்கு ரூபம், ஸ்பரிசம் மற்றும் சப்தம் ஆகிய மூன்று குணங்கள் இருப்பதாகக் கருதலாம். (நெருப்பு, தீயின் ரூபமாய், ஜுவாலைகளாய் வெளிப்படும் அக்னி மட்டுமல்ல, தீயின் உஷ்ணத் தன்மையையும் சேர்த்தே நாம் நெருப்பென்றோம்).

ஆகாசம், வாயு மற்றும் நெருப்பு ஆகியனவற்றிற்கு ருசி உணரும் வகையான திட அல்லது திரவத்தன்மைகள் இல்லை. ஆனால் திரவ நிலையில் உள்ள நீருக்கு நமக்கு ருசி அறிவிக்கும் வகையிலான பருத்தன்மை உள்ளது. நீர் எல்லாச் சுவைகளுக்கும் ஆதாரமாக உள்ளது. சுவைகளைத் தாங்குகின்றது. சுவைகளைக் கடத்துகின்றது.

நீரின் இந்த ஆதார குணத்திலிருந்தே சுவை அல்லது ருசி அல்லது ரஸம் என்னும் விஷயம் விளைகின்றது. ரஸத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **'ரஸ தன்மாத்திரை'** என்று அழைப்போம்.

நீரானது, நிறம் மற்றும் வடிவம் (மாறிக்கொண்டே இருந்தாலும்) தாங்குவதுடன், ஒளியையும் தாங்கி, கடத்தி, பிரதிபலிப்பதால், நம் கண்களால் காணத் தக்கதாக இருக்கின்றது.

ஸ்பரிசிக்கத் தக்க பருத்தன்மையுடன் விளங்குகின்றது. சப்தத்தை விளைக்கின்றது, தாங்குகின்றது, கடத்துகின்றது. ஆகவே நீரில் ரூப, ஸ்பரிச, சப்த தன்மாத்திரைகள் உள்ளன. ஆக நீருக்கு ரஸம், ரூபம், ஸ்பரிசம் மற்றும் சப்தம் ஆகிய நான்கு குணங்கள் இருப்பதாகக் கருதலாம்.

ப்ருத்வி அல்லது நிலம் என்பது திடமான எல்லாத் தாதுக்களின் தொகுப்பேயாகும். நிலத்தின் தனித்தன்மையாக நாம் அறியும் குணம், மணம் அல்லது நாற்றம் எனப்படும் கந்தம் ஆகும்.

நிலமானது, நாம் முகர்ந்து மணமறியும் வகையில் கந்தம் என்னும் ஆதார குணத்தை உடையது. நிலத்தின் இந்த

ஆதார குணத்திலிருந்தே கந்தம் என்ற விஷயம் விளைகின்றது. கந்தத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **'கந்த தன்மாத்திரை'** என்று அழைக்கலாம்.

நிலம், ரஸமுடையதாகவும், ரூபமுடையதாகவும், உள்ளது. ஸ்பரிசிக்க முடிவதாகவும் உள்ளது. சப்தத்துக்கும் ஆதாரமாக விளங்குகின்றது. எனவே நிலத்தில் ரஸ, ரூப, ஸ்பரிச, சப்த தன்மாத்திரைகள் உள்ளன. ஆக நிலத்திற்கு **கந்தம், ரஸம், ரூபம், ஸ்பரிசம்** மற்றும் **சப்தம்** ஆகிய ஐந்து குணங்கள் இருப்பதாகக் கருதலாம்.

மேற்செல்லும் முன் சில வினாக்கள் எழுகின்றன. ஆகாசம் சப்தத்திற்கு ஆதாரமாக இருப்பதாகப் பார்த்தோம். தான் அதிர்வதன் காரணமாக சப்தத்தைக் கடத்த உதவும் மூலக்கூறுகள் ஏதுமில்லாத வெற்றிடங்கள் பிரபஞ்சத்தில் உள்ளனவே? வெளி எப்படி சப்தத்திற்கு ஆதாரமாக விளங்க முடியும்? காற்றையாவது ஆதாரமாகக் கொண்டு தானே சப்தம் கடத்தப்பட வேண்டும்? காற்று கடத்தும் சப்தத்திற்கு **'வெளி'** இடம் தருவதால், வெளி அல்லது ஆகாசம், சப்தத்திற்கு ஆதாரமாக விளங்குகின்றதோ?

இறுகும் போது திடமாகவோ, திரவமாகவோ வடிவெடுக்கும் மூலக்கூறுகள் சேர்ந்ததுதானே வாயு?

அந்த மூலக்கூறுகளின் உரசலைத்தானே ஸ்பரிசிக் கின்றோம்? அவையின்றி காற்றுக்கேது ஸ்பரிச தன்மாத்திரை?

இதே மூலக்கூறுகள், தனித்தோ, சேர்ந்தோ நீரிலும் நிலத்திலும் இருப்பவை தானே?

நீரின் சுவை என்று நாம் அறிவது நீரில் கலந்திருக்கும் (நிலத்தின் அம்சமான) தாதுக்களால் விளைவது தானே?
நீரின் ரஸ தன்மாத்திரை என்பது என்ன?

நமக்கு இப்போது விடை தெரியாத இந்த வினாக்களை புறம் தள்ளிவிட்டு, தன்மாத்திரைகளை ஏற்றுக் கொண்டு மேலும் ஆராய்வோம்.

'*சப்தஸ்பர்ச ரூபரஸ கந்த்தா: ப்ருத்வீகுணா:*' என்றது *சரீரகோபநிஷத்து*. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் மற்றும் கந்தம் ஆகியன பூமி தத்துவத்தின், நிலத்தின் குணங்கள் என்று பொருள்.

அதுவே, '*சப்தஸ்பர்ச ரூபரஸாச்சாபாம்குணா:*' என்று சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் ஆகியனவற்றை ஜல தத்துவத்தின், '*ஆபஸ்*' அல்லது நீரின் குணமாக உரைக்கின்றது. மேலும், '*சப்தஸ்பர்ச ரூபாண்யக்னிகுணா:*'

என்ற, சப்தம், ஸ்பரிசம் மற்றும் ரூபம் ஆகியனவே அக்னி தத்துவத்தின் அல்லது நெருப்பின் குணம் என்றும் உரைக்கின்றது.

'***சப்தஸ்பர்சாவிதி வாயுகுணௌ***' – இது *சரீரகோபநிஷத்து* மூலம். சப்தம் மற்றும் ஸ்பரிசம் ஆகியன, வாயு தத்துவத்தின் அல்லது காற்றின் குணங்கள் என்பது பொருள். சப்தம் ஒன்றே ஆகாசத்தின் குணம், '***சப்த ஏக ஆகாசஸ்ய***' என்றதுவும் அதுவே.

ஔவையார் தம் குறளில் இதையே தொகுத்து 'நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே யுலவை யிரண்டொன்று விண்' என்றார்.

நிலத்துக்கு ஐந்து குணங்களும், நீருக்கு கந்தம் தவிர்த்து நான்கு குணங்களும், நெருப்புக்கு கந்தம், ரஸம் தவிர்த்து மூன்று குணங்களும், காற்றுக்கு ஸ்பரிசம், சப்தம் ஆகிய இரண்டு குணங்களும், விண்ணுக்கு சப்தம் என்ற ஒரே குணமும் தர்மங்கள் என்பது பொருள்.

பக்தி வேதாந்தச் சித்தனான மாணிக்க வாசகப் பெருமானார், தம் போற்றித் திருவகவல் எனும் நூலில்,

'பாரிடை யைந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி' என்றதும் ஒப்பு நோக்கத்தக்கது.

சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தமாகிய விஷயங்களுக்கும், ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருத்வியாகிய பூதங்களுக்கும் உள்ள தொடர்பை குறித்த சில வேதாந்த நூல் விளக்கங்களைக் காண்போம்.

அருணந்தி சிவாச்சாரியார், தம் **சிவஞான சுபக்கம்** என்னும் நூலில்,

'நல்செவி துவக்கு கண் நா நாசி ஐந்தினையும் நல்லோர்
புத்தி இந்திரியம் என்று புகன்றனர் இவை தமக்குச்
சத்தம் நல்பரிச ரூப இரத கந்தங்கள் ஐந்தும்
வைத்தனர் விடயமாக அடைவினின் மருவும் என்றே'

என்று தொகுத்தளிக்கின்றார்.

தண்டறை சுப்பராய ஆச்சாரியர் தனது அகம் புற ஆராய்ச்சி விளக்கம் என்னும் நூலில் ஐந்து வித சப்தங்களையும்,

நான்கு வித ஸ்பரிசங்களையும், மூன்று வித ரூபங்களையும், இரண்டு வித சுவைகளையும், ஒரு கந்தத்தையும் விவரிக்கின்றார்.

சப்தமாகிய குணம், ஆகாயத்தில் '**வறும்**' என்றும், வாயுவில் '**சலசல**' என்றும், அக்னியில் '**பகபக**' என்றும், நீரில் '**புளபுள**' என்றும் நிலத்தில் '**கடகட**' என்றும் விளைகின்றது.

ஸ்பரிசமான குணம் ஆகாசத்தில் இல்லை. வாயுவில் மிருது ஸ்பரிசம், அக்னியில் உஷ்ண ஸ்பரிசம், நீரில் சீதள (குளிர்ந்த) ஸ்பரிசம், நிலத்தில் கடின ஸ்பரிசம் ஆகியன விளங்குகின்றன.

ஆகாசத்திற்கும் வாயுவிற்கும் ரூபம் இல்லை. அக்னிக்கு சிகப்பு நிற ரூபமும், நீருக்கு வெண்மை நிற ரூபமும், நிலத்திற்கு பல நிற ரூபமும் உள்ளன. நீருக்கு மதுர (இனிய) சுவையும், நிலத்திற்கு பலவகைச் சுவையும் உள்ளன. கந்தம் நிலத்தின் தனித்தன்மை என்றும் விளக்குகின்றார்.

இந்த நூலுக்கு காலத்தால் முற்பட்ட **'பஞ்சதசீ'** என்னும் வேதாந்த நூல் தரும் விளக்கத்தையும் காணலாம்.

ஆகாயத்தில் எதிரொலியாகிய சப்தமும், காற்றில் **வீஸீ** என்ற சப்தமும், நெருப்பில் **புகுபுகு** என்ற சப்தமும், நீரில் **புலுபுலு** என்னும் சப்தமும், பூமியில் **கடகடா** என்னும் சப்தமும் வெளிப்படுகின்றன.

காற்றில் குளிர்ச்சியோ வெப்பமோ இல்லாத ஸ்பரிசமும், நெருப்பில் உஷ்ணமாயிருக்கும் ஸ்பரிசமும், நீரில் குளிர்ந்த ஸ்பரிசமும், நிலத்தில் கடினமாயிருக்கும் ஸ்பரிசமும் ஏற்படுகின்றன.

நெருப்பு ப்ரகாச ரூபமாகவும், நீர் வெளுப்பு ரூபமாகவும், நிலம் பல ரூபங்களின் தொகுப்பாகவும் விளங்குகின்றன. நீரில் தித்திப்பு ரஸமும், நிலத்தில் அறுசுவைகளான ரஸமும் அடங்கி இருக்கின்றன. நிலத்தில் சுகந்தம் மற்றும் துர்கந்தம் ஆகிய கந்தங்கள் உள்ளதாகவும் 'பஞ்சதசீ' உரைக்கின்றது.

பிரம்ம ஞானம் பூதங்களின் இயல்புகளை விரித்து ரைக்கின்றது. ப்ருத்விக்கு உரத்துத் தறிக்கும் குணமும், கடினமான தன்மையும், பொன் போன்ற நிறமும் இயல்புகளாம்.

நீருக்கு உஷ்ணத்தை தணித்து, குளிர்வித்து பதம் செய்யும் குணமும், நெகிழும் தன்மையும், வெண்மை நிறமும்

இயல்புகளாம். நெருப்புக்கு சுட்டெரிக்கும் குணமும், உலர்த்தும் தன்மையும், செம்மை நிறமும் இயல்புகளாம்.

காற்றுக்கு அசைந்து திரட்டி வீசும் குணமும், நிறைக்கும் தன்மையும், விம்மும் தொழிலும், கறுப்பு நிறமும் இயல்புகளாம், ஆகாசத்திற்கு இடம் கொடுக்கும் குணமும், நிற்கும் தன்மையும், போக்கும் தொழிலும், புகை நிறமும் இயல்புகளாம்.

இதுவரைக் கண்டனவற்றைத் தொகுப்போம்.

**செவி, மெய், கண், நா, நாசி** ஆகியன ஐந்தும் ஞானேந்திரியங்கள்.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் ஆகியன ஐந்தும் அனுபவத்திற்கான விஷயங்கள்.

செவிக்கும், சப்தத்திற்கும் பொதுவான ஆதார குணம் சப்த தன்மாத்திரை ஆகும். சப்த தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு ஆகாசம்.

மெய்யிற்கும் ஸ்பரிசத்திற்கும் பொதுவான ஆதார குணம் ஸ்பரிச தன்மாத்திரை ஆகும். ஸ்பரிச தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு வாயு.

கண்ணிற்கும் ரூபத்திற்கும் பொதுவான ஆதார குணம் ரூப தன்மாத்திரை ஆகும். ரூப தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு அக்னி.

நாவிற்கும் ரஸத்திற்கும் பொதுவான ஆதார குணம் ரஸ தன்மாத்திரை ஆகும். ரஸ தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு ஜலம்.

நாசிக்கும் கந்தத்திற்கும் பொதுவான ஆதார குணம் கந்த தன்மாத்திரை ஆகும். கந்த தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு ப்ருத்வி.

ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருத்வி ஆகியன பஞ்ச பூதங்கள்.

தன்மாத்திரைகளை சற்றே விளக்குவோம்.

சப்தம், விஷயம். காது, கருவி, சப்தமாக விளைவதும், காதால் உள்வாங்கப்படுவதும் சப்த தன்மாத்திரை என்ற நுண்ணிய குணத்தின் விளைவு. விளையும் சப்தத்திற்கு ஆதாரமாக இருக்கும் சப்த தன்மாத்திரையே காது என்னும் கருவிக்கும் ஆதாரமாக இருக்கின்றது.

காது என்ற கருவி திடமான வஸ்து. சப்தம் என்னும் விஷயம் அதைவிட நுண்ணியது. சப்த தன்மாத்திரை அதை விட நுண்ணியது. சர்க்கரையில் இனிப்பு போல அது ஒரு தனிப்பண்பு.

ஒவ்வொரு தன்மாத்திரையுமே இவ்வாறு தனிப் பண்புகளே. இந்த பண்புகள் அல்லது குணங்கள் விஷயமாகவோ கருவியாகவோ விளைவது எவ்வாறு?

தன்மாத்திரைகள் இலங்கும் நிலையை குறித்து வேதாந்த நூல்கள் என்ன கூறுகின்றன?

பஞ்ச பூதங்களின் ஆதார குணங்களாகிய இந்த தன்மாத்திரைகள், தனித்தனியே, சுத்தமான, கலப்பற்ற தெளிந்த நிலையிலும் விளங்குகின்றன. ஒன்றோடு ஒன்று கலந்துபட்ட நிலையிலும் விளங்குகின்றன.

அந்தக் கலப்பு ஒரு ருதத்துடன் நிகழ்கின்றது. 'ருதம்' என்றால் ஒருவகையான இயற்கை ஒழுங்கு. நான்கு பங்கு ஆகாசத்தில், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர், ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு காற்றில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு நெருப்பு, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன. நான்கு பங்கு நெருப்பில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நீரில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன. நான்கு பங்கு நிலத்தில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நீர் ஆகியனவே சேர்கின்றன.

இவ்வாறு எந்த ஒரு பூதத்தின் நான்கு நிரைகளுடன், மற்ற நான்கு பூதங்களின் ஓரோர் நிரை சேர்வதை பஞ்சீகரணம் அல்லது பஞ்சீகிருதம் என்று அழைக்கலாம். பஞ்சீகரணம் என்றால் ஐந்து பொருட்களின் சேர்க்கை என்பதை நினைவில் கொள்வோம்.

சுத்தமான நிலையில் உள்ள பூதங்கள் நுண்ணிய, புலப்படாத சூக்ஷும நிலையில் விளங்குகின்றன. பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்கள் புலன்களால் அறியப்படும் வண்ணம் பருவாக, ஸ்தூலமாக விளங்குகின்றன.

இதைப் புரிந்து கொள்ள ப்ருத்வி ஆகிய நிலம் என்னும் பூதத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். நிலம் பல்வேறு தாதுக்களால் ஆனது. அதை நாம் தொட்டுணர முடிகின்றது. அதன் மணத்தை முகர முடிகின்றது.

அதன் உருவத்தை, நிறத்தைக் காண முடிகின்றது. அதன் சுவையை ருசிக்க முடிகின்றது. அது கடத்தும் சப்தத்தை கேட்கவும் முடிகின்றது. இது அந்த பூதத்தின் ஸ்தூல நிலை.

ஸ்தூலமாக நாம் அறியும் நிலத்துக்கு இருக்கும் நுண்ணிய இயல்புகள் அதன் சூக்ஷும நிலை. கேட்கும் போது சப்தமாக, தொடும் போது ஸ்பரிசமாக, காணும் போது ரூபமாக, ருசிக்கும் போது ரஸமாக, முகரும் போது கந்தமாக விளையும் அதன் பண்புகள் அதன் சூக்ஷும நிலை. இந்தப் பண்புகள், பகுத்துப் பார்க்க முடியாத, பிரித்து உணர முடியாத நுண்ணிய குணங்கள்.

பஞ்சீகரணம் செய்யப்படாத சுத்தமான நிலையில் இருக்கும் ப்ருத்வி ஆகிய பூதத்தால் ஆனது இந்த சூக்ஷும நிலை. பஞ்சீகரணத்தால் கலந்துபட்ட நிலையில் உள்ள ப்ருத்வி ஆகிய பூதத்தால் ஆனதே நாம் உணரும் நிலம். நிலத்தின் பௌதீக நிலையே ஸ்தூல நிலை.

நிலத்தின் இயல்புகளின் ஆதார குணத்தொகுப்பே அதன் சூக்ஷும நிலை. தெளிந்த, கலப்பற்ற, சுத்தமான நிலையில் குணங்களுக்கு ஒரு இருப்பு இருக்கின்றது. அதை சூக்ஷும நிலை என்று அழைக்கிறோம்.

அந்த குணங்கள் பஞ்சீகரணப்பட்டதும், அவை பௌதீகமாக பருநிலை அடைந்து, ஸ்தூல பூதங்களாக வடிவெடுக்கின்றன. அந்த ஸ்தூல பூதங்களால் ஆனவையே நாம் ப்ரபஞ்சமெங்கும் காணும் யாவும்.

பஞ்ச பூதங்களின் இந்த தத்துவங்கள் உருவான விதம் பற்றி வேதாந்த நூல்கள் என்ன கூறுகின்றன?

நிலத்தை விட நீர் நுண்ணியது, நீரை விட நெருப்பும், நெருப்பை விட காற்றும், காற்றை விட ஆகாசமும் நுண்ணியன. நுண்ணிய தத்துவங்களினின்றே, அவற்றினும் பருவான தத்துவங்கள் உருவாகின்றன.

ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாகின.

*'தஸ்மாத்வா ஏதஸ்மா-தாத்மன ஆகாச: ஸம்பூத: | ஆகாசாத் வாயு: | வாயோ - ரக்னி: | அக்னே - ராப: | அத்ப்ப்ய: ப்ருதிவீ |'* என்றது *தைத்திரீய உபநிஷத்து*.

'***தத: ஆகாச: ஸம்பூத:***' என்றது தத்வபோதம்.

அதாவது, அதனிடமிருந்து ஆகாசம் தோன்றியது என்றும் அந்த ஆகாசத்திலிருந்து மற்ற பூதங்கள் உண்டாயின என்றும் பொருள்.

'**அதனிடமிருந்து**' சப்த தன்மாத்திரை தோன்றியது.

சப்த தன்மாத்திரையிலிருந்து ஆகாச தத்துவமும், ஸ்பரிச தன்மாத்திரையும் தோன்றின. ஸ்பரிச தன்மாத்திரை யிலிருந்து வாயு தத்துவமும், ரூப தன்மாத்திரையும் தோன்றின.

ரூப தன்மாத்திரையிலிருந்து அக்னி தத்துவமும், ரஸ தன்மாத்திரையும் தோன்றின.

ரஸ தன்மாத்திரையிலிருந்து ஜல தத்துவமும் கந்த தன்மாத்திரையும் தோன்றின.

கந்த தன்மாத்திரையிலிருந்து ப்ருத்வி தத்துவம் தோன்றியது.

இதுவே தோற்றத்தின் வரிசைக் கிரமம். இந்த ஐந்து பூதங்களாலேயே பிரபஞ்சமும், உலகமும், **'நாம்'** உட்பட எல்லா வஸ்துக்களும் உருவாகின என்பது வேதாந்தத்தின் பார்வை.

நாம் அறிந்த எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும், அவற்றை, இந்த பஞ்ச பூதங்களின் தொகுப்பாகவே வகைப்படுத்த முடியும்.

நாமும் இந்த பஞ்ச பூதங்களின் சேர்க்கையா?

பஞ்ச பூதங்களின் நுண்ணிய குணங்களாகிய தன்மாத்திரைகள், பஞ்சீகரணம் ஆன நிலையில், பருவான, ஸ்தூல நிலையில் விளங்குகின்றன. அவை, நம் உடலுக்கும் ஆதாரமாக, அடிப்படையாக, மூலப்பொருட்களாக ஆகின்றன.

*'ப்ரஸ்பராம்சைர் - மிலிதானி பூத்வா ஸ்தூலானி ச ஸ்தூல - சரீர ஹேத்வ:'* என்றது *விவேக சூடாமணி.*

பஞ்ச பூதங்கள், ஸ்தூலமாக நிலையடைந்து, நம் உடலுக்கு, ஸ்தூல தேகத்திற்கு ஆதாரமாகின்றன என்பது

விளக்கம். அதாவது நம் உடல், பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனதே.

நமக்கு, நாம் காணும் இந்த பௌதீக உடல் மட்டுமன்றி, இதனோடு இயைந்து கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய உடலும் இருக்கின்றது. அந்த நுண்ணிய அல்லது சூக்ஷுமமான உடல், பஞ்சீகரணம் செய்யப்படாத நிலையில் உள்ள பஞ்ச பூதங்களால் ஆனது என்றும் கூறுகின்றது.

*விவேக சூடாமணி. 'நபோ நபஸ்வத்தஹனாம்பு - பூமய: சூக்ஷ்மாணி பூதானி பவந்தி'* – என்றது மூலம்.

நம் உடலில் பஞ்ச பூதங்களின் இருப்பு எங்கு உள்ளது?

நம் உடல் ஆக்ரமித்துள்ள இடம் **'வெளி'** யாகும். சுவாசமும் பிராணனும், **'காற்று'** உடலின் தணியாத வெப்பம், **'நெருப்பு'** திரவப்பகுதி, **'நீர்'** திடப்பகுதி, **'நிலம்'** ஆகின்றன.
சரீரம் ஐந்து பூதங்களாலும் ஆனது, **'பஞ்சாத்மகம்'** என்றது *கர்ப்போபநிஷத்து*.

அவைகள் யாவை?

ப்ருத்வி (நிலம்), அப்பு (நீர்), தேயு (நெருப்பு), வாயு (காற்று), ஆகாசம் (வெளி) ஆகியவையே பஞ்ச மூலங்கள் என்னும் பொருள்பட, ***'ப்ருதிவ்யாபஸ்தேஜோ – வாயு – ராகாசமிதி |*** என்றது *கர்ப்போபநிஷத்து*.

நம் தேகத்தில் எது நிலம்?
எது நீர், எது நெருப்பு, எது காற்று?
எந்தப் பகுதி ஆகாயம்?

எது கடினப் பகுதியோ, அது ப்ருத்வி எனப்படும் நிலம் சார்ந்த தாதுக்களால் ஆனது. எது திரவப் பகுதியோ, அது நீர். எது தணியாத வெப்பமோ, அது நெருப்பு. எது உள்ளும் வெளியும், போக்கும் வரத்துமாகச் சலிக்கின்றதோ, அது காற்று. எது இடமளித்ததோ, அது வெளி.

இதன் மூலம் - *'தத்ர யத் கடினம் ஸா ப்ருதிவீ யத் த்ரவம் தா ஆப: யதுஷ்ணம் தத்தேஜ: யத்ஸஞ்சரதி ஸ வாயு: யத்ஸுஷிரம் ததாகாச - மித்யுச்யதே |'.*

நம் தேகத்தின் அங்கங்களாய், செயல்களாய், இயல்புகளாய் நாம் அறிந்த தத்துவங்களை, ஐந்து தத்துவங்கள் கொண்ட ஐந்து தொகுப்புகளாகத் தொகுத்து, அவற்றில் ஒவ்வொரு தத்துவத்திலும் ஆதாரமான பூதச்சேர்க்கைகளை விவரிக்கின்றது *சிவப்பிரகாசக் கட்டளை*.

இது வரை நாம் அறிந்தனவற்றைக் கொண்டு இவை யாவையும் நாம் விளங்கிக் கொள்ள முடியாதெனினும், இவற்றை தெரிந்து வைத்துக் கொள்வோம்.

வேறு புதிய விஷயங்களை அறியும் போது பொருத்திப் பார்க்கலாம்.

முதலில் **பிருத்வி தத்துவம்** அல்லது மண்.

மண்ணில் மண்ணாய் இருப்பது எலும்பாகின்றது. மண்ணில் நீர் சேர்வது மாமிசமாகவும், மண்ணில் தீ சேர்வது தோலாகவும், மண்ணில் காற்று சேர்வது நரம்பு மண்டலமாகவும், மண்ணில் ஆகாயத்தின் சேர்க்கை முடியாகவும் விளைகின்றன.

எலும்பில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், மண்ணின் சூக்ஷும தத்துவங்களும் மட்டுமே இருப்பதாகக் கொள்ளலாம்.

மாமிசத்தில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், நீரின் சூக்ஷும குணங்களும் உள்ளன. தோலில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், நெருப்பின் சூக்ஷும குணங்களும் உள்ளன. நரம்பு மண்டலத்தில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், காற்றின் சூக்ஷும குணங்களும் உள்ளன. முடியில் மண்ணின் ஸ்தூல

குணங்களும், ஆகாசத்தின் சூக்ஷும குணங்களும் உள்ளன என்று பொருள் கொள்ளலாம்.

அடுத்து, **ஜல தத்துவம்:**

நீரில் நீரின் இருப்பு சிறுநீராகவும், நீரில் மண்ணின் சேர்க்கை உமிழ்நீராகவும், நீரில் தீ சேர்வது வியர்வை யாகவும், நீரில் காற்றின் சேர்க்கை இரத்தமாகவும், நீரில் ஆகாசத்தின் சேர்க்கை சுக்கிலம்/சுரோணிதம் ஆகிய விந்துவாகவும் விளைகின்றன.

நெருப்பில் நெருப்பாக இருப்பது தூக்கமாகவும், நெருப்பில் மண்ணின் சேர்க்கை பசியாகவும், நெருப்பில் நீரின் சேர்க்கை தாகமாகவும், நெருப்பில் காற்றின் சேர்க்கை அசதியாகவும், நெருப்பில் ஆகாயத்தின் சேர்க்கை உடலுறவாகவும் விளைகின்றன.

காற்றில் காற்றாக இருப்பது ஓட்டம் என்னும் தொழிலாகவும், காற்றில் மண் சேர்வது படுத்தல் என்னும் தொழிலாகவும், காற்றில் நீர் சேர்வது நடத்தல் என்னும் தொழிலாகவும், காற்றில் நெருப்பு சேர்வது இருத்தல் என்னும் தொழிலாகவும், காற்றில் ஆகாசம் சேர்வது குதித்தல் அல்லது தாண்டுதல் என்னும் தொழிலாகவும் விளைகின்றன.

ஆகாசத்தில் ஆகாசம் மோகம் என்னும் குணமாகவும், ஆகாசத்தில் மண் இராகம் என்னும் குணமாகவும், ஆகாயத்தில் நீர் துவேஷம் என்னும் குணமாகவும் ஆகாசத்தில் நெருப்பு பயம் என்னும் குணமாகவும், ஆகாயத்தில் காற்று நாணம் என்னும் குணமாகவும் விளைகின்றன.

*'தத்ர ப்ருதிவீ தாரணே ஆப: பிண்டீகரணே தேஜ: ப்ரகாசனே வாயுர்வ்யூஹனே ஆகாசமவகாச – ப்ரதானே |'* என்ற **கர்ப்போபநிஷத்து** மூலத்திற்கு, பின்வருமாறு உரை செய்துள்ளனர் சான்றோர்கள்.

பிருத்வி தாங்குவது. நீர் பிண்டமாக்குவது. நெருப்பு ப்ரகாசப்படுத்துவது. வாயு கூட்டத்தை இயக்குவது. ஆகாசம் அவகாசமளிப்பது.

சரீரம் முழுதும் பஞ்ச பூதங்களால் ஆனது என்றாலும், பஞ்ச பூதங்களின் குணவிருத்தியான விஷயங்கள் நமக்கு எளிதில் புலனாவதால், விஷயங்களை நமக்கு உள்வாங்கி அறிவிக்கும் புலன்களை, இந்திரியங்களை மீண்டும் தொகுத்தறிவோம்.

காது, ஸ்தூலம். சப்தம் நுண்மையானது. காது என்பது கருவி. கேட்டல் என்பது காரியம். கிரஹிக்கப்படும் சப்தம் என்பது அதனால் விளையும் அறிவு. காது அல்லது செவி, ஆகாசத்தின் அம்சம். அது ஆகாசத்தின் அம்சமான விஷயங்களை கேட்டவாறே இருக்கின்றது.

நாம் கேட்கும் சப்தங்கள் பத்து அங்கங்களாக வகைப் படுத்தப்படுகின்றன.

ஷட்ஜம், ருஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் ஆகிய ஏழு ஒலிகளும், இஷ்டம், அனிஷ்டம் மற்றும் ப்ரணிதானம் ஆகிய மூன்று குணங்களும், சப்தத்தின் பத்து அங்கங்களாகின்றன.

அதே போல், தோல் என்பது பௌதிக உடல். தொடு உணர்வு, அது உணர்த்தும் அறிவு. இங்கு தோல் கருவி. தொடல் என்பது காரியம். தொடு உணர்வு, தொடலால் விளையும் அறிவு. தோல் காற்றின் அம்சம். அது ஸ்பரிசத்தால் உணரும் குளிர்ச்சி, வெப்பம், மிருதுத் தன்மை, கடினத் தன்மை ஆகிய விஷயங்களை உணர்ந்தவாறே இருக்கும்.

கண், ஸ்தூல உடலின் ஒரு உறுப்பு. பார்வை அதன் காரியம். காட்சி, ஞானம் அல்லது அறிவு. கண் நெருப்பின்

அம்சமாதலால், அது வெண்மை, கருமை, சிவப்பு, பச்சை, நீலம், மிச்ரம் (எல்லா நிறங்களும் கலந்த நிறம்) ஆகிய நிறங்களை உள்வாங்கும்.

நீளம், குட்டை, பருமன், மெலிவு போன்ற பரிமாணங் களையும் உள்வாங்கும். இந்த பத்து ரூபங்களும் கண்வழி நாம் அறியும் ஞானம்.

நாக்கு என்னும் உறுப்பு நீரின் அம்சமாக ரஸம் என்னும் ஞானத்தை உள்வாங்கித் தருகின்றது. உப்பு, புளிப்பு, கசப்பு, இனிப்பு, காரம் மற்றும் துவர்ப்பு ஆகிய அறுசுவைகளையும் அது உள்வாங்கியவாறே இருக்கின்றது.

மூக்கு என்னும் உறுப்பு, நிலத்தின் அம்சமாக நறுமணம் மற்றும் துர்கந்தம் ஆகியனவற்றை முகரலால் உள்வாங்கி யவாறே இருக்கின்றது.

இந்த கருவிகளுக்கு ஒரோர் ஆதார தேவதைகளை வேதாந்தம் வரிசைப்படுத்துகின்றது.

செவியாகிய காது, எல்லா திசைகளினின்றும் சப்தத்தை உள்வாங்குவதாலும், செவிப்புலனுக்கு ஆதாரமான ஆகாசம்

திசைகளால் அறியப்படுதலாலும், செவிக்கு திசைகள் ஆதார தேவதைகளாக அறிவிக்கப்படுகின்றன.

தோலாகிய த்வக், காற்றின் குணமாகிய ஸ்பரிசத்தை உள்வாங்குவதால், காற்றை புருஷ வடிவில் உருவகப்படுத்தி, தோலுக்கு வாயு ஆதார தேவதையாக அறிவிக்கப்படுகின்றது.

பஞ்சபூதங்களை நுண்மை அடிப்படையில் ஆகாசத்திற்கும், காற்றிற்கும் அடுத்து நெருப்பு என வரிசைப்படுத்தினோம்.

நெருப்பே பஞ்ச பூதங்களில் புலன்களுக்குத் தெரியும் வண்ணம் ரூபம் கொள்ளும் முதல் பூதம். சூரியன், கண்ணால் நம்மால் காணத்தக்க பிரம்மாண்டமான நெருப்பு பந்தாகின்றது.

கண்ணிற்கு சூரியன் ஆதார தேவதையாக அறிவிக்கப்படுகின்றது.

நாக்கு நீரின் அம்சமான ரஸத்தை உள்வாங்குவதால், நாக்குக்கு வருணன் ஆதார தேவதையாக அறிவிக்கப் படுகின்றது. (வருணன் மழைக் கடவுளாக, நீருக்கு ஆதாரமாக அறியப்படுகின்றார்).

மூக்கு, நிலத்தின், தாதுக்களின் அம்சமான கந்தத்தை உள்வாங்குதலால், மூக்குக்கு அச்வினி தேவர்கள் ஆதார தேவதைகளாக அறிவிக்கப்பட்டனர். (தாதுக்களின் மருத்துவ குணம் அறிந்து, பிரயோகிக்கும் தேவலோக மருத்துவர்களே அச்வினி தேவர்கள்).

(நம் ஆய்வில் தெய்வங்களும், தேவர்களும் இருக்கின்றார்களா என ஆய்ந்தறியும் முன், தெய்வம் என்ற தத்துவத்தையோ, தேவர்களையோ நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. திசை தேவதைகள், வாயு பகவான், சூரிய பகவான், வருண பகவான், அச்வினி தேவர்கள் என இந்த அதி தேவதைகள் தேவர்களாக புராணங்களிலும், இதிகாசங்களிலும் அறியப்பட்டாலும், நாம் இவற்றை, குணங்களின் உச்ச உருவகமாகவே ஏற்று மேற் செல்வோம்).

புலன்களால் உள்வாங்கி உணரப்படும் சுவை (ரஸம்), ஒளி (ரூபம்), ஊறு (ஸ்பரிசம்), ஓசை (சப்தம்) மற்றும் நாற்றம் (கந்தம்) ஆகிய ஐந்து இந்திரிய விருத்திகளை ஆராய்ந்து, அவற்றின் உண்மைப் பண்புகளை அறிந்து கொள்பவர்களே, உலகின் இயல்பு நிலை அறிந்தவராவார் என்றார் திருவள்ளுவப் பெருமகனார்.

*'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு'* - இது திருக்குறள் மூலம்.

இதுவரை நாம் கண்டனவற்றை, ஆழ்ந்து கவனித்தால் புலப்படும் உண்மை என்ன?

இந்திரியங்களின் ஆதாரமும் குணங்களே. விஷயங்களின் ஆதாரமும் குணங்களே.

அதாவது, விஷயங்களின் குணங்களே இந்திரியங்களில் பிரவர்த்திக்கின்றன அல்லது விருத்தியாகின்றன.

இதையே **'குணங்கள், குணங்களில் பிரவர்த்திக்கின்றன'** என்ற பகவத் கீதை வாக்கியமாக, *'குணா குணேஷு வர்தந்தே'* என்று முன்னரே கண்டோம்.

காது என்ற கருவியில் உள்ள செவிப்பறையிலிருந்து நரம்புகளே அதிர்வுகளை மூளைக்கு எடுத்துச் செல்கின்றன?

சருமத்தின் உணர்வுகள், நரம்புகள்வழியே மூளைக்கு உணர்த்தப்படுகின்றனவே?

கண்ணின் விழித்திரையிலிருந்தும், நாவின் சுவை அரும்புகளினின்றும், மூக்கின் நுகர்ச்சி முனைகளினின்றும் நரம்புகளே விஷயங்களை மூளைக்குக் கடத்தி அறிவிக்கின்றன?

இந்திரியங்களாய் நாம் இதுவரை கண்டன யாவும், கருவிகள் மட்டுமன்று. அந்தக் கருவிகளின் விஷய மறிந்து உரைக்கும் முழுத்திறனுமேயாம்.

காது, செவிப்பறை, நரம்பு மண்டலங்கள் மற்றும் மூளையின் (சப்தம் அறியும், சப்தத்தை பகுக்கும், சப்தங்களை விளங்கிக்கொள்ளும்) அம்சங்களையும் சேர்த்தே நாம் காது என்னும் இந்திரியமாகக் குறிப்பிடுகின்றோம்.

மற்ற இந்திரியங்களுக்கும் அவ்வாறே. விஷயங்களை உள்வாங்கும் திறன் சார்ந்து உலகில் உள்ள உயிரினங்களை நாம் ஓரறிவு, ஈரறிவு அடங்கிய உயிர்களாய் பகுக்கின்றோம். ஸ்பரிசிக்கும் திறன் மட்டுமே உள்ள தாவரங்கள் ஓரறிவு உயிர்களாகவும், ஸ்பரிசம் மற்றும் சுவை ஆகிய திறன்கள் மட்டுமே உள்ள புழு, மீன், சங்கு போன்றவை ஈரறிவு கொண்ட உயிர்களாகவும் அறியப்படுகின்றன.

# தன்னை அறியும் தத்துவங்கள்

ஸ்பரிசம், சுவை, கந்தம் ஆகிய மூன்று திறன்கள் கொண்ட எறும்பு, கரையான் போன்றவை மூன்றறிவு உயிர்களாகவும், இத்திறன்களுடன் கண்டறியும் திறனும் கொண்ட பாம்பு, வண்டு வகைகள் நான்கறிவு உயிர்களாகவும் அறியப்படுகின்றன.

ஏனைய பறவை, மிருக இனங்களுக்கு, ஐந்து திறன்களும் உள்ளன. அவை ஐந்தறிவு உயிர்களாய் அறியப் படுகின்றன.

ஆறறிவு உயிர்களாக அழைக்கப்படும் நமக்கு, இவை தவிர்த்து, ஆறாவது அறிவாக ஏதேனும் இருக்கின்றதா?

பஞ்ச பூதங்களையும், ஐந்து ஞான (விஷய)ங்களையும், ஐந்து ஞான இந்திரியங்களையும் சேர்த்து பதினைந்து தத்துவங்களை இதுகாறும் ஆய்ந்தறிந்தோம்.

ஞான இந்திரியங்கள் தம் சுய முயற்சி ஏதுமற்ற நிலையிலும், விஷயங்களை எப்போதும் உள்வாங்கியவாறே இருக்கின்றன என்று பார்த்தோம்.

நாம் செய்யும் செயல்கள், ஆற்றும் காரியங்கள் அங்ஙனம் சுய முயற்சி ஏதுமின்றி விளைகின்றனவா?

அனிச்சை செயல்கள் என நாம் அறிந்த சிலவற்றைத் தவிர, நாம் ஆற்றும் மற்ற காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் பின், நம் முயற்சி என்று ஒரு ஆதார சக்தி இருக்கவே செய்கின்றது.

நம் காரியங்கள் யாவும் (பேச்சு உட்பட), எங்கோ எண்ணங்களாக உருவாகி, பேச்சாகவோ, செயலாகவோ வடிவெடுக்கின்றனவா?

இந்த ஆராய்ச்சிக்குள் போகும் முன், நாம் நம் உடலால் ஆற்றும் காரியங்களையும், அவற்றுக்கான கருவிகளையும், நம் உடலுள் உள்ள உப உறுப்புகளின் செயல்பாடுகளுக்கான ஆதார சக்தியையும் புரிந்து கொள்வோம்.

நாம், நம் உடலால் ஆற்றும் காரியங்களை வேதாந்தம் ஐந்து வேறுபட்ட தொகுப்புகளுக்குள் அடக்குகின்றது.

எண்ணங்களை வார்த்தைகளாய் வெளிப்படுத்தும் பேசுதல் அல்லது பேச்சு ஒரு **‘காரியம்’** அல்லது செயல். ஓரிடம் விட்டு மற்றோரிடம் செல்லும் ஓட்டம், நடை, தாண்டுதல், **‘இயக்கம்’** என்னும் செயல்.

பொருள்களை எடுத்தல், கையாளுதல், வைத்தல் ஆகியன **‘கையாளுதல்’** என்னும் செயல். (குறியால்) இன்பம்

அனுபவித்தல், **‘துய்த்தல்’** என்னும் செயல். உடலினுள் சேரும் கழிவுகளை வெளியேற்றுதல், **‘கழித்தல்’** என்னும் செயல்.

எந்த உறுப்புகளின் துணைகொண்டு நாம் இந்தக் காரியங்களை ஆற்றுகின்றோம்?

வாய்க்குத் தொழில் பேச்சு. கைகளுக்குத் தொழில் கையாளுதல். கால்களுக்குத் தொழில் இயக்கம். குறி அல்லது கருவாய்க்குத் தொழில் இன்பம் துய்த்தல். மலத்துவாரம் அல்லது எருவாய்க்குத் தொழில் கழிவுகளை வெளியேற்றுதல்.

வாய், கைகள், கால்கள், கருவாய் (ஆண்/பெண் குறிகள்) மற்றும் எருவாய் (மல/ஜலத் துவாரங்கள்) ஆகிய ஐந்தும் செயலாற்றுவதால் செயற்கருவிகள் என்று அழைக்கப் படுகின்றன.

இவையே கர்மம் புரியும் இந்திரியங்களாதலால் கர்மேந்த்ரியங்கள் ஆகின்றன என்று பொருள்பட, *'வாக்பாணி - பாதா - குத - மப்யுபஸ்த: கர்மேந்த்ரியாணி ப்ரவணேன கர்மஸு'* என்றது *விவேக சூடாமணி.*

பேச்சுக் கருவியை நாம் வாய் என்று குறிப்பிட்டாலும், பேச்சுக்கு ஆதாரமாக விளங்கும் உறுப்புகள், உப உறுப்புகளின் தொகுப்பை இனி நாம் '**வாக்கு**' என்றே அழைப்போம்.

தமிழ் வேதாந்த நூலான சிவஞான சித்தியார் – சுபக்கம் என்னும் நூலில், அருணந்தி சிவாச்சாரியார் இதே கருத்தை உரைக்கின்றார்.

'வாக்கோடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்தும்
நீக்கினர் முன்னே கன்மேந்திரியங்கள் என நினைத்தே
ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்க ஆனந்தம்
ஊக்கமார் ஐந்தும் ஐந்தின் தொழிலென ஓதினாரே'
என்பது மூலம்.

வாக்கு, கால்கள், கைகள், எருவாய், கருவாய் ஆகிய ஐந்தும் கர்ம இந்திரியங்கள். முறையே பேசுதல் (வசனம்), நடத்தல் (கமனம்), கையாளுதல் (தானம்), கழித்தல் (விசர்க்கம்), மகிழ்தல் (ஆனந்தம்) ஆகியன அவற்றின் தொழில்கள் என்பது பொருள்.

ஞானேந்திரியங்களைப் போன்றே, கர்மேந்திரியங் களுக்கும் ஆதார தேவதைகள் உள்ளனவா?

**'வாக்கு'** அல்லது வாய்க்கு அக்னியும், கைகளுக்கு இந்திரனும், கால்களுக்கு விஷ்ணுவும், எருவாய்க்கு யமனும், கருவாய்க்கு பிரம்மனும் ஆதார தேவதைகள் என்றது வேதாந்தம்.

எண்ணம் ஆற்றல் கொண்டு வார்த்தைகளாய் வெளிப்படுவதால், ஆற்றல் வெளிப்பாட்டின் உருவகமான அக்னிவாக்கிற்கும், வலிமையின் உருவகமான இந்திரன் கைகளுக்கும், இயக்கம் அல்லது கமனத்தின் உருவகமான விஷ்ணு கால்களுக்கும், சேரும் கழிவை வெளியேற்றல் தருமமாதலால், தருமத்தின் உருவகமான யமன் எருவாய்க்கும், கருவுறுதலே படைப்பின் ஆதாரமாதலால், கருவாய்க்கு படைப்பின் உருவகமான பிரம்மனும் ஆதார தேவதகளாகின்றனரோ?

மேலும் ஆய்வில் விளக்கங்கள் கிடைத்தால் விளங்கிக் கொள்வோம். அதுவரை, இவற்றை அனுமானித்து மேற் செல்வோம்.

பஞ்ச பூதங்களையும், ஐந்து ஞானங்களையும், ஐந்து ஞான இந்திரியங்களையும், ஐந்து கர்மங்களையும், ஐந்து கர்மேந்திரியங்களையும் கண்டோம்.

வேதாந்தம், நம் தேகத்தைப் பற்றி நமக்கு ஒரு தனிப்பார்வையை உருவாக்க முற்படுகின்றது.

அறிவியல் ஆய்வைப் போல எல்லாவற்றையும் விளக்கவோ, எல்லா பௌதீக வேதியியல் பண்புகளை விரித்துரைக்கவோ முற்படாது, சில அடிப்படைகளிலேயே உடலைக் குறித்து ஒரு தனிப்பார்வையை உருவாக்க விழைகின்றது வேதாந்தம்.

நாமோ இதனினும் பகுக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட அறிவியல் ஆய்வுகளை அறிந்த்வர்கள்.

வேதாந்த ஆய்வுக்கான கட்டமைப்பும், அறிவியல் ஆய்வுக்கான கட்டமைப்பும் வேறுவேறானவை.

அறிவியல் பார்வையில் வேதாந்தத்தை அணுகுதல் சரியான வழிமுறையாகத் தெரியவில்லை எனினும், அறிவி யலால் நாமறிந்தனவற்றிற்கு முரண்படாத வரை, இந்தக் கருத்துகளை ஏற்று மேற்செல்வது நம் எண்ணமாகட்டும்.

அறிவியலால் விளக்க முடியாத, அறிவியல் விளக்க முற்படாத கருத்துக்களை வேதாந்தம், அல்லது தர்க்கத்தின் அடிப்படையில் விளக்கினால் ஏற்றுக் கொள்வோம்.

இனி, நம் தேகத்தை, பல்வேறு தத்துவங்கள் சார்ந்து, வேதாந்தம் வகைப்படுத்துவதைக் காணலாம்.

நம் சரீரம், ஆறுவிதமான ரஸங்களால் உருவாகும் ஏழு வேறுபட்ட தாதுக்கள் அடங்கியது என்றும் உரைக்கின்றது கர்ப்போபநிஷத்து.

கரு வளர்ந்து உருவாகும் காலத்தில், நம் உடலில் திரவ வடிவில் இருக்கும் பஞ்சீகரணமான பஞ்ச பூதங்கள், ஆறு வேறுபட்ட பரிமாண மாற்றங்களை அடைகின்றன.

ரஸவடிவில் இருக்கும் அவற்றிலிருந்து இரத்தமும், இரத்தத்திலிருந்து மாமிசமும் (தசைகளும்), மாமிசத்திலிருந்து கொழுப்பும், கொழுப்புகளிலிருந்து நரம்புகளும், நரம்புகளிலிருந்து எலும்புகளும், எலும்புகளிலிருந்து ஊண் அல்லது மஜ்ஜையும், ஊணிலிருந்து சுக்கிலம்/சுரோணிதம் அல்லது விந்துவும் உண்டாகின்றன.

*'பரஸ்பரம் சௌம்ய – குணத்வாத் ஷட்விதோ ரஸோ – ரஸோச்சோணிதம் – சோணிதான் மாம்ஸம் – மாம்ஸான் மேதோ – மேத்ஸ: ஸ்நாயவ: – ஸ்நாயுப்ப்யோ அஸ்த்தீனி – அஸ்த்திப்ப்யோ மஜ்ஜா – மஜ்ஜாத: சுக்ரம்'* என்றது *கர்ப்போபநிஷத்து*.

நம் பௌதிக உடல், இவ்வாறு மஜ்ஜையும், மஜ்ஜையைச் சுற்றி எலும்பும், எலும்பினிடையே நரம்புகளும், நரம்பைப் பற்றியவாறு தசைகளும், தசைகளினிடை கொழுப்பும், யாவற்றையும் போர்த்து தோலும், நாளங்கள் தோறும் இரத்தமும் ஆக விளங்குகின்றது. இதை நாம் ஸ்தூல உடல் என்று அழைக்கிறோம்.

இந்த ஸ்தூல உடல், உணவுமயமான உறை என்னும் பொருள்பட, "அன்னமய கோசம்" என்றும் அழைக்கப் படுகின்றது.

உணவாகும் தாதுக்களினின்று தோன்றி, உணவினால் வளர்ந்து, மண்ணுக்கு உணவாவதால் இந்தப் பெயரா?

அன்னம் என்பது வடமொழிச்சொல்.

*'அத்யதேஸ் அத்தி ச பூதானி | தஸ்மாதன்னம் ததுச்யத் இதி |'* என்றது *தைத்திரீய உபநிஷத்து*.

அதுவே, உட்கொள்ளப்படுகின்றது. அதுவே, உட்கொள் கின்றது. ஆகவே **அன்னம்** என அழைக்கப்படுகின்றது என்று பொருள்.

அன்னம் இங்கு நிலம் அல்லது ப்ருதிவி தத்துவத்தின் ஒட்டுமொத்த வ்ருத்திகளையும் குறிப்பிடுகின்றது. நம் உடலின் மூலமாக எந்த தாதுக்கள் உள்ளனவோ, அதே தாதுக்கள்தாம் நாம் புசிக்கும் உணவுக்கும் ஆதாரமாகவும் உள்ளன.

நாம் இறந்தபின், நம்மை உண்ணப் போகும் நிலத்திற்கும், அதே தாதுக்கள் ஆதாரமாகின்றன. நாமும் அந்தத் தாதுக்களாகவே சிதைவோம். அன்னமே படைப்புக்கு ஆதாரமாக இருக்கின்றது.

அன்னத்திலிருந்தே உயிர்களிடத்து விந்து உருவாகின்றது. அதிலிருந்தே எல்லா உயிரினங்களும் உண்டாகின்றன என்னும் பொருள்பட, '*அன்னம் வை ப்ரஜாபதிஸ்ததோ ஹ வை தத்ரேதஸ் தஸ்மாதிமா: ப்ரஜா: ப்ரஜாயந்த இதி* என்றது *பிரச்ன உபநிஷத்து*.

'*அன்ன ரஸேனைவ பூத்வா அன்னரஸேனைவ வ்ருத்திம் ப்ராப்ய அன்னரூப ப்ருதிவ்யாம் யத்விலீயதே ததன்னமய கோச:*' – *தத்வபோதம்*.

ஆணுக்கு சுக்கிலமும், பெண்ணுக்கு சோணிதமும் அன்னத்தினாலேயே உண்டாகின்றன. கருத்தரித்த பின், தாய் உண்ணும் அன்னத்தின் ரஸத்தால் சிசு வளர்கின்றது. பிறந்த

பின் அன்னத்தினாலேயே வ்ருத்தியடையும் இந்த உடல், மாண்ட பின் அன்னாதாரமான மண்ணிலேயே ஒடுங்கி, சிதைந்து அழிந்துபட்டு அன்னமாகின்றது என்பது பொருள்.

***தைத்திரீய உபநிஷத்து*** என்னும் நூலுக்கு விளக்கம் எழுதிய சுவாமி ஆசுதோஷானந்தர், அன்னம் என்ற வடமொழிச்சொல்லை, **'அத்'** என்னும் மூலச்சொல்லின் ஆதாரத்தில் விளக்குகின்றார்.

உண்ணுதல் என்பது மூலத்தின் பொருள். உண்ணப்படுவதாலும், உண்பதாலும் அன்னம் என்று அழைக்கப்படுகின்றது எனினும், *'எது உட்கொள்ளப்படு கின்றதோ, எது உட்கொள்ளவும் செய்கின்றதோ* - **‘அது அன்னம்'** என்றே பொருள் கொள்ளலாம்.

*தைத்திரீய உபநிஷத்து*, நம் தேகத்தின் இயல்பு நிலை உரைக்கையில், *'அன்னாத் புருஷ: | ஸவா ஏஷ புருஷோ அன்னரஸமய:'* என்றது.

அன்னத்திலிருந்து மனிதன் உண்டாகின்றான். அப்படித் தோன்றிய இந்த மனிதன், அன்னரஸ மயமானவன் என்பது பொருள்.

'*அன்னாத்வை ப்ரஜா: ப்ரஜாயந்தே | யா: காச்ச ப்ருத்வீ ச்ரிதா: | அதோ அன்னேனைவ ஜீவந்தி | அதைந - தபியந்த் - யந்தத: |*' - இதுவும் *தைத்திரீய உபநிஷத்து*.

மக்கள் யாவரும் அன்னத்திலிருந்தே உண்டா கின்றனர். அன்னத்தினாலேயே உயிர் வாழ்கின்றனர். இறுதியில் அதுவாகவே முடிகின்றனர் என்பது பொருள்.

அன்னமயமான இந்த உடல் இயங்குவதற்கு ஏதேனும் ஒரு ஆதார சக்தி வேண்டுமே! அது எந்த சக்தி என்று ஆராய்வோம்.

அந்த ஆராய்ச்சிக்கு, பஞ்ச பூதங்களின் '**குணங்கள்**' பற்றி ஒரு சிறிய அறிமுகம் தேவைப்படுகின்றது.

ஒவ்வொரு பூதத்திற்கும் மூன்று வேறுபட்ட குணங்கள் இருக்கின்றன.

அவைகள்,

ஸாத்வீக அல்லது ஸத்வ குணம், ராக்ஷஸ அல்லது ரஜஸ் குணம், தாமச அல்லது தமஸ் குணம் என்று பெயரிடப் பட்டுள்ளன. பின்னால் இந்த குணங்கள் சார்ந்த ஆய்வை

விரிவாகச் செய்யப் போகின்றோமாதலால், இப்போது சிறிய அறிமுகங்கள் மட்டுமே.

பஞ்ச பூதங்களின் ஓரோர் ஆதார குணத்திற்கும், ஒரு ஸாத்வீக அம்சமும், ஒரு ராக்ஷஸ அம்சமும், ஒரு தாமஸ அம்சமும் இருக்கின்றன. பஞ்ச பூதங்களின் ஸாத்வீக அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு விளைந்தனவே ஞான இந்த்ரியங்கள். காது என்னும் கருவிக்கு ஆதாரமாக விளங்குவது, ஆகாசம் என்னும் பூதத்தின் ஸாத்வீக அம்சமே.

தோல் என்னும் கருவிக்கு, வாயுவின் ஸாத்வீக அம்சமும், கண் என்னும் கருவிக்கு அக்னியின் ஸாத்வீக அம்சமும், நாக்கு என்னும் கருவிக்கு ஜலத்தின் ஸாத்வீக அம்சமும், மூக்கு என்னும் கருவிக்கு ப்ருதிவியின் ஸாத்வீக அம்சமும் ஆதாரங்கள்.

ஆகாசம் என்பது ஒரு பூத தத்துவம். சப்தம் என்னும் விஷயத்திற்கு ஆகாசத்தின் சப்த தன்மாத்திரை ஆதாரமாக விளங்குகின்றது. சப்தம் விளைத்தலும், கடத்தலும், தாங்கலும் ஆகிய காரியங்களுக்கு அது ஆதாரமாக இருக்கின்றது.

காது என்பது ஒரு கருவி. சப்த அதிர்வுகளை உள்வாங்கி அளித்தல் அதன் இயல்பு. ஆகாசத்தின் ஆதார

குணத்திற்கு (ஸாத்வீக, ராக்ஷஸ, தாமஸ என்னும்) மூன்று அம்சங்கள் (நுண் குணங்கள்) உள்ளன.

அவற்றுள் ஆகாசத்தின் ஸாத்வீகப் பண்பிலிருந்து, அம்சத்திலிருந்து, இயல்பிலிருந்து, குணத்திலிருந்து காது என்னும் கருவி விளைந்தது என அறிவோம். இதேபோல் மற்ற அறிவுக் கருவிகளுக்கும் அந்தந்த பூதங்களின் ஸாத்வீக அம்சங்களே ஆதாரங்கள்.

ஞானேந்திரியங்களைப்போலவே, கர்மேந்திரியங் களும் பூத குணங்களின் ஏதேனும் ஒரு அம்சத்தை ஆதாரமாகக் கொண்டு விளைந்தனவா?

பேசும் கருவியான வாய் அல்லது வாக்கு, ஆகாசத்தின் ராக்ஷஸ அம்சத்திலிருந்து தோன்றியது. வாயுவின் ராக்ஷஸ அம்சத்திலிருந்து காற்றின் தொழில்களான நிற்றல், நடத்தல் ஆகியன புரியும் கால்களும், நெருப்பின் ராக்ஷஸ அம்சத்தி லிருந்து எடுத்தல், கொடுத்தல், வாங்குதல் ஆகியன புரியும் கைகளும், நீரின் ராக்ஷஸ அம்சத்திலிருந்து கழித்தல் புரியும் எருவாயும், நிலத்தின் ராக்ஷஸ அம்சத்திலிருந்து துய்க்கும் கருவாயும் தோன்றின.

இந்திரியங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பூதத்தின், தனிப்பட்ட குணங்களின், தனித்த ஸாத்வீக அம்சத்தில் இருந்தோ, தனித்த ராக்ஷஸ அம்சத்தில் இருந்தோ தோன்றியவை.

அதாவது, ஞானேந்திரியங்களுக்கும், கர்மேந்திரி யங்களுக்கும், ஏதோவொரு பூதத்தின் ஒரு தனித்த குணம் மட்டுமே ஆதாரமாக விளங்குவதைக் கண்டோம்.

பூதங்களின் ராக்ஷஸ அம்சங்கள் தனித்தனியே ஒரோர் தொழிற் கருவிகளுக்கு ஆதாரமாக விளங்குவது போல, இந்த ராக்ஷஸ அம்சங்களின் மொத்தத் தொகுப்பில் இருந்து விளைவதே அடுத்து நாம் காண இருக்கும் பிராணன்.

தொகுப்பு என்றால்?

வேதாந்தப் பார்வையில், '**சமஷ்டி, வியஷ்டி**' எனும் தத்துவங்களை அறிமுகப்படுத்திக் கொள்வோம்.

ஒரு தோப்பு சமஷ்டி என்றும், ஒரு தனி மரம் வியஷ்டி என்றும் உதாரணப்படுத்தலாம்.

சமஷ்டி என்றால், **'ஒட்டுமொத்தமான** அல்லது **ஒருங்கிணைந்த நிலையில் உள்ள'** என்றும், வியஷ்டி என்றால், **'தனியே** அல்லது **தனித்த நிலையில் உள்ள'** என்றும் பொருள் கொள்ளலாம்.

ஒவ்வொரு பூதத்தின் ஒவ்வொரு தனித்த அம்சமும் வியஷ்டி. எல்லா பூதங்களின், ஒரேவிதமான தனித்த அம்சங்களின் தொகுப்பு சமஷ்டி. எல்லா பூதங்களின் எல்லா அம்சங்களின் தொகுப்பும் சமஷ்டி.

பஞ்ச பூதங்களின், எல்லா ஆதார குணங்களின், ராக்ஷஸ அம்சங்களின் தொகுப்பாகிய சமஷ்டி தத்துவத்தில் இருந்து தோன்றினவையே பிராணன்கள்.

பிராணன் என்றால்?

பிராணன் என்பது காற்றின் போக்கு – வரவு, நுழைதல் – வெளியேறுதல், இயக்கம் – தங்குதல் ஆகியன உள்ளிட்டப் பண்புகளே.

காற்று, உடலின் பல்வேறு இடங்களில் நிலைபெற்று, வேறு வேறு செயல்கள் நடக்க ஆதாரமாக இருக்கின்றது.

இதுவரை நாம் கண்ட ஞான, கர்ம இந்திரியங்களும், இவை தவிர்த்து, உடல் முழுதும் உள்ள பல்வேறு உப உறுப்புகளும் செயல்பட ஆதாரமாக இருப்பதும் காற்றின் இந்த இயக்கமே. அது வேறு வேறு இடங்களில் நிலைபெற்று, வேறு வேறு செயல்களுக்கு ஆதாரமாக இருப்பதால், பலவேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

விரிவாகப் பார்ப்போம்.

நம் உடலின் ஒவ்வொரு அவயத்திலும் பிராணன் எனப்படும் காற்று நிலைகொண்டுள்ளது. நம் உடலில் காற்றின் போக்கும் வரவும் இருப்பதாலேயே அவயங்கள் செயல்படுகின்றன. எந்த அவயத்தை விட்டேனும் காற்று தத்துவம் நீங்கினால், அந்த அவயம் செயலற்றுப் போய்விடுகின்றது. அன்னமய கோசமான நம் ஸ்தூல உடலுக்கு, பிராணன் ஆதார சக்தியாகவும், கிரியா சக்தியாகவும் விளங்குகின்றது.

நாம் சுவாசமாக அறியும், நாசியின் வழியே உள்ளிழுத்து, வெளியே விடப்படும் இயக்கத்தில், காற்று **'பிராணன்'** என்று அழைக்கப்படுகின்றது.

மல நீக்கம் செய்யும் இயக்கத்தில், காற்று **'அபானன்'** என்று அழைக்கப்படுகின்றது.

இதை '***பாயூபஸ்தே அபானம்***' என்று *ப்ரச்ன உபநிஷத்து* குறிப்பிடுகின்றது.

என்றாலும் கூட, நாசியால் உள்ளிழுக்கும் இயக்கத்தில், காற்றை 'பிராணன்' என்றும், நாசியால் வெளிவிடப்படும் இயக்கத்தில், காற்றை 'அபானன்' என்றும் அழைக்கப்படுவது வழக்கமாக உள்ளது.

இரத்த ஓட்டம் என்னும் இயக்கத்தில், காற்று **'வியானன்'** என்று அழைக்கப்படுகின்றது.

கண்ணீர் சிந்துதல், வாந்தியெடுத்தல் போன்ற இயக்கங்களில், காற்று **'உதானன்'** என்று அழைக்கப்படுகின்றது.

மரண வேளையில், உயிர் வெளியேற ஆதாரமாக இருப்பதும் உதானனே.

ஜீரணத்துக்கு ஆதாரமான காற்று, **'சமானன்'** என்று அழைக்கப்படுகின்றது. இது உணவை ஜீரணிப்பது, உணவு

இரத்தத்துடன் சேரும்வண்ணம், அதை ரஸமாக மாற்றுவது ஆகிய இயக்கங்களுக்கு ஆதாரமாய் இருக்கின்றது.

இதை, '*மத்யே து ஸமான: ஏஷ ஹ்யேதத்துமன்னம் ஸமம் நயதி*' என்றது *ப்ரச்ன உபநிஷத்து*.

உடலின் நடுப்பகுதியில் செயல்படும் சமானன், அர்ப்பிக்கப்பட்ட உணவை, மற்ற பாகங்களுக்கு சமமாகக் கொண்டு செல்கின்றது என்பது பொருள்.

உள்மூச்சு, வெளிமூச்சு, கொட்டாவி, தும்மல் முதலியனவும் இந்தப் பிராணன்களின் செயலேயாகும் என்னும் பொருள்பட '*உச்ச்வாஸ – நி:ச்வாஸ – விஜ்ரும்பண – க்ஷுத்ப்ரஸயந்தனாத்யுத்– க்ரமணாதிகா: க்ரியா: | ப்ராணாதி கர்மாணி வதந்தி தஜ்ஜ்ஞா: ப்ராணஸ்ய தர்மவசனாபிபாஸே ||* – என்றது *விவேக சூடாமணி*.

**'அசனாபிபாஸே'** என்றதால் பசி தாகமும் கூட அவ்வாறே. (இயக்கங்கள் சார்ந்து, பிராணனாகிய வாயு, பத்து விதமாக பகுக்கப்படுகின்றது. வாயுவின் மேல் நோக்கிய இயக்கம் பிராணன் என்றும், கீழ்நோக்கிய இயக்கம் அபானன் என்றும், எல்லாபக்கங்களிலும் இயங்கும் தன்மை வியானன் என்றும் அழைக்கப்படுகின்றன.

மரண வேளையில் உயிர் வெளியேற உதவும் வாயு உதானன் ஆகும். உணவை ஜீரணிக்கவும், ரஸமாக மாற்றவும் உதவும் வாயு சமானன் ஆகும். வாந்தி, ஏப்பம் போன்ற இயக்கங்களுக்கான வாயு நாகன் ஆகும். கண் இமைகளை இயக்கும் வாயு கூர்மன் ஆகும். பசி மற்றும் தாகம் க்ருகலன் என்ற வாயுவாலும், கொட்டாவி தேவதத்தன் என்ற வாயுவாலும் நிகழ்கின்றன. நம் உடலின் ஆரோக்யம், தனஞ்ஜயன் என்ற வாயுவால் சீராகப் பராமரிக்கப்படுகின்றது. எனினும் எளிமை கருதி, இவை ஐந்தாகவும் பகுக்கப்பட்டதையே கண்டோம்.)

தங்கம் ஒன்றே, வளையாகவும், வங்கியாகவும், காதணியாகவும், சிலம்பாகவும், இடையணியாகவும், தான் எடுத்த உருவத்திற்கேற்ப அழைக்கப்படுகின்றது.

நீரானது, பொழியும்போது மழையாகவும், பொங்கிப் பிரவகிக்கும் போது நதியாகவும், தேங்குவதால் குளமாகவும், விழுந்தால் அருவியாகவும் அழைக்கப்படுகின்றது.

அவ்வாறே, காற்றாகிய பிராணன் ஒன்றே, தன் செயல் வேறுபாடுகளாலும், வடிவின் வேறுபாடுகளாலும், பிராணன், அபானன், வியானன், உதானன் மற்றும் சமானன் என்றவாறெல்லாம் அழைக்கப்படுகின்றது.

'*ஸ்வயமேவ வ்ருத்திபேதாத் - விக்ருதிபேதாத் ஸுவர்ண ஸலிலாதிவத் ||*' என்றது *விவேக சூடாமணி.*

**அம்ருத நாதோபநிஷத்து** பஞ்சப் ப்ராணன்களின் சஞ்சாரம், நம் தேகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் பரவியுள்ளன என்றும், அவற்றின் நிறங்கள் என்னென்ன என்றும் விவரிக்கின்றது.

பிராணன், தேகத்தின் மத்திய அல்லது ஹ்ருதய பாகத்தில் சஞ்சரிக்கின்றது. அபானன் மலத்துவாரத்திலும், சமானன் நாபியிலும், உதானன் கழுத்திலும், வியானன் உடல் முழுவதும் சஞ்சரிக்கின்றன.

இக்கருத்தின் *அம்ருத நாதோபநிஷத்து* மூலம் – '*ப்ராண ஆத்யோ ஹ்ருதி ஸ்த்தானே அபானஸ்து புனர்குதே | ஸமானோ நாபிதேச து உதான: கண்ட்டமாச்ரித: || வ்யான: ஸர்வேஷு சாங்கேஷு ஸதா வ்யோவ்ருத்ய திஷ்ட்டதி* |.

பிராணன் இரத்தம் போன்ற சிவந்த நிறமாகவும், அபானன் அதனினும் வெளுத்த சிவப்பு நிறமாகவும், சமானன் பசும்பால் போன்ற வெண்ணிறமாகவும், உதானன் புகை போன்ற வெண்ணிறமாகவும், வியானன் நெருப்பின் நிறமாகவும் உள்ளனவாம்.

நம் ஸ்தூல உடலை அன்னமய கோசம் என்று கண்டோம். பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் ஆகிய பஞ்ச வாயுக்களும், வாய், கைகள், கால்கள், எருவாய், கருவாய் ஆகிய ஐந்து கர்மேந்த்ரியங்களும் சேர்ந்தது "பிராணமய கோசம்" என்று அழைக்கப்படுகின்றது.

*'ப்ராணாத்யா: பஞ்சவாயவ: வாகாதீந்த்ரிய பஞ்சகம் ப்ராணமய: கோச:' – தத்வ போதம்*.

பிராணன் தொடங்கி ஐந்து வாயுக்களும் வாக்கு தொடங்கி ஐந்து கர்ம இந்திரியங்களும் சேர்ந்த தொகுப்பு பிராணமய கோசம் என்பது பொருள்.

*ப்ரச்ன உபநிஷத்து*, பிராணனின் ஆதாரத்தன்மை விளங்கும் வண்ணம் ஒரு உருவகக் கதையை விரிக்கின்றது.

ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், பூமி, வாக்கு, மனம், பார்வை மற்றும் கேட்கும் திறன் ஆகியவற்றை தேவர்களாக சித்தரித்து துவங்கும் இந்தக் கதையை, பிப்பலாதர் என்ற மாமுனிவர், தம் மாணாக்கரான பார்க்கவர் என்றவரிடம் கூறுவதாக ப்ரச்ன உபநிஷத்துவில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

பார்க்கவர், 'நம்மைத் தாங்கும் தேவர்கள் எத்தனைப் பேர்?

அவர்களுள், நம்மை இயக்கும் தேவர்கள் யாவர்?

அவர்களுள், முக்கியமானவர் யார்?' என்று கேட்கவே,

பிப்பலாதர், '**ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், நிலம்**, பேச்சு, மனம், பார்வை, கேட்கும் தன்மை ஆகியவையே நம்மைத் தாங்கும் தேவர்கள், அவர்களே நம்மை இயக்குகின்றனர்', என்று பதிலளித்தார்.

ஒருமுறை, இந்த தேவசக்திகள், 'நாங்கள்தான் இந்த உடம்பை ஒருங்கிணைத்துத் தாங்குகின்றோம்', என்று கூறின. பிராணன் அவற்றிடம், 'குழப்பத்தில் ஆழ்ந்து போகாதீர்கள்.

நானே, என்னை ஐந்தாகப் பிரித்துக்கொண்டு, இந்த உடம்பை ஒருங்கிணைத்துத் தாங்குகின்றேன்; இயக்கு கின்றேன் என்று கூறியது. பிராணனின் இந்தக் கூற்றை, அந்த தேவ சக்திகள் நம்பவில்லை.

பிராணன், தன் மகத்துவத்தைக் காட்டுவதற்காக, சற்றே உடலை விட்டு வெளியேறி, மீண்டும் உள்வந்தது. பிராணன் வெளியேறியதும், புலன்கள் அனைத்தும் செயலிழந்தன.

பிராணன் மீண்டும் உள்வந்ததும், புலன்கள் மீண்டும் செயல்படத் துவங்கின. தம் இயக்கத்துக்கும், ஒருங்கி ணைப்புக்கும் ஆதாரமாக விளங்குவது பிராணனே என்று அறிந்ததால், எல்லாப் புலன்களும் பிராணனைத் துதித்தன என்பது கதை.

நம் ஸ்தூல தேகத்தை நீங்கினால் பிராணன் வெறும் காற்றே அல்லவா?

நம் உடலுக்கு வெளியே பிராணனுக்கு அதன் தனித்த இயல்புகளுடனான இருப்பு இல்லையே?

பிராணனே நம் புலன்களின் இயக்கத்துக்கும், ஒருங்கிணைப்புக்கும் ஆதாரமாக இருக்கின்றது என்பதை உணர்வதற்காக செய்யப்பட்ட உருவகமே இந்தக் கதை.

பிராணனைப் பற்றி **“பிரச்ன உபநிஷத்து”** கூறும் மற்ற விவரங்களைப் பின்னர் விரிவாகக் காணலாம்.

இதே உருவகம், **“கௌஷீதகீ உபநிஷத்து”** விரிக்கும் இன்னொரு கதையிலும் காணப்படுகின்றது.

ஒரு உடலை விட்டு, பிராணனும், மற்ற இந்த்ரிய ங்களும் வெளியேறி விடுகின்றன. உடல், ஒரு ஜடத்தைப் போல செயலற்றுக் கிடக்கின்றது.

முதலில் உடலில், வாக்கு என்னும் இந்திரியம் நுழைகின்றது. ஆனாலும் உடலால் பேச முடியவில்லை.

அடுத்து, கண் என்னும் இந்திரியம் நுழைகின்றது. ஆனாலும் உடலால் பார்க்க முடியவில்லை.

பிறகு, செவி என்னும் இந்திரியம் நுழைகின்றது. ஆனாலும் உடலால் கேட்க முடியவில்லை.

அடுத்து, மனம் நுழைகின்றது. ஆனாலும் உடலால் சிந்திக்க முடியவில்லை.

இறுதியாக, பிராணன் உடலுள் நுழைந்ததும், உடலால் பேச, பார்க்க, கேட்க, சிந்திக்க முடிகின்றது.

இதுவும் உருவகமே. உடலுக்கு வெளியே பிராணனுக்கு இருப்பு இல்லாதது போல, வாக்கு, கண்கள், செவி, மனம் ஆகியனவற்றிற்கும் இருப்பு கிடையாது.

எல்லா இந்திரியங்களின் செயல்பாட்டிற்கும், பிராணன் அடிப்படை சக்தியாக விளங்குவதை வலியுறுத்தவே இந்த உருவகமும்.

எல்லா இந்திரியங்களுக்கும் ஆதாரமாக இருக்கும் சக்தியை, பிராணன் அன்னத்திலிருந்தே கிரஹிக்கின்றது. அன்னத்திலிருக்கும் சக்தியை கிரஹித்து, பிராணனே எல்லா இந்திரியங்களுக்கும் சக்தியளிக்கின்றது.

மிகவும் நுட்பமாக விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு உருவகம் **“ஐதரேய உபநிஷத்து”** என்னும் நூலில் உள்ளது.

நாம் உண்ணும் உணவாகிய அன்னத்திலிருந்தே நம் இயக்கங்களுக்கு வேண்டிய சக்தியை, நம் உடல் பெறுகின்றது என்பது ஒரு சாமான்ய உண்மை.

படைப்புக் கிரமத்தில் (வரிசையில்), நாம் படைக்கப்பட்டபின், அன்னம் படைக்கப்பட்டதாகச் சித்தரித்து, அந்தக் கணத்தை விவரிக்கின்றது *ஐதரேய உபநிஷத்து*.

'மனிதன், தனக்காகப் படைக்கப்பட்ட அன்னத்தை, முதலில் வாக்கினால் பிடிக்க முயற்சி செய்தான். அன்னத்தை, வாக்கினால் பிடிக்க முடிந்திருந்தால், அன்னம் என்று சொல்வதாலேயே திருப்தி ஏற்பட்டிருக்கும்.

அடுத்து, பார்வையால் பிடிக்க முயற்சி செய்தான்.

அன்னத்தை, கண்களால் பிடிக்க முடிந்திருந்தால், அன்னத்தைக் காண்பதாலேயே திருப்தி ஏற்பட்டிருக்கும்.

அடுத்து, மனிதன் அன்னத்தைத் தன் கேட்கும் திறனால் பிடிக்க முயற்சி செய்தான். அன்னத்தை, செவிகளால் பிடிக்க முடிந்திருந்தால், அன்னத்தைப் பற்றி கேட்பதாலேயே திருப்தி ஏற்பட்டிருக்கும்.

மீண்டும், அன்னத்தைத் தன் தொடு உணர்வால் பிடிக்க முயற்சி செய்தான். அன்னத்தை, ஸ்பரிசத்தால் பிடிக்க முடிந்திருந்தால், அன்னத்தைத் தொடுவதாலேயே திருப்தி ஏற்பட்டிருக்கும்.

எல்லாவற்றிற்கும் பின், மனிதன், அன்னத்தை அபானனால் பிடிக்க முயன்று, அதில் வெற்றியும் கண்டான்.

அபானனே உணவை கிரஹிக்கின்றது. அதனால் அபானனே நம்மைத் தாங்குகின்றது' என்றது *ஐதரேய உபநிஷத்து*.

இங்கு அபானன் எனக் குறிப்பிடப்பட்டது பிராணனின் பத்து விகாரங்களையும் தொகுத்தே. அன்னத்திலிருந்து சக்தி ரஸத்தை இந்திரியங்களினால் நேரடியாகக் கிரஹிக்க முடியாது. பிராணனே, அன்னத்தின் சக்தி ரஸத்தை இந்திரியங்களுக்கு தாங்கிக், கடத்தி, அளிக்க ஆதாரமாக விளங்குகின்றது என்பதே இதன் பொருள்.

யாக, யக்ஞ, வேள்விகளில், நம் அழைப்பிற்கிணங்கி, வந்திருந்து நம் உபசாரங்களை ஏற்கும் தேவர்களுக்கும், தேவதைகளுக்கும், அன்னமளிப்பது வழக்கமாகின்றது. அந்த அன்னம் '**ஹவிஷ்**' அல்லது அவிர்ப்பாகம் என்று அழைக்கப்படுகின்றது.

பூஜைகளிலும், ஹோமங்களிலும் நாம் கடவுளுக்கு நிவேதனம் செய்யும் அன்னம் இந்த வகைப்பட்டதே. (இத்தருணத்தில், மாற்றுக்கருத்துகளுக்கு ஆதாரம் கிடைக்கும் வரை, நம் ஆய்வில், இவை யாவும் பாவனைகள் என்றே கருதுவோம்).

ஹவிஷை, நைவேத்தியத்தை அர்ப்பணிக்கும் ஆகுதி மந்திரங்களை, **"மஹாநாராயண உபநிஷத்து"** விவரிக் கின்றது.

இவை பிராணனை அழைத்து, அன்னத்தை ஏற்க, வேண்டும் வகையிலேயே அமைந்துள்ளன. பிராணன் என்றது, அபானன், வியானன், உதானன், சமானன் ஆகிய மற்ற வாயுக்களையும் சேர்த்தே மந்திரங்களைக் காணலாம்.

அன்னத்தை அளிக்கும் முன் பிராணனிடம், **'*அம்ருதோபஸ்தரணமஸி'*** என வேண்டுகின்றோம்.

'பிராணனே, நீ அம்ருதமான, இந்த அன்னத்தைத் தாங்கும் கீழ்விரிப்பாக (அடித்தளமாக அல்லது ஆதாரமாக) ஆவாயாக' என்பது பொருள்.

அன்னத்தை அர்ப்பணிக்கும் போது, **'*சிவோ மா விசாப்ரதாஹாய*'** என வேண்டுகின்றோம்.

*'பசித்துயரம் நீங்கும் பொருட்டு, மங்கல வடிவினனாகிய என்னுள் நுழைவாயாக'* என்பது பொருள்.

அன்னம் அர்ப்பணித்த பிறகு, '***அம்ருதாபிதானமஸி*** **,** என வேண்டுகிறோம்.

*'பிராணனே, நீ அம்ருதமான அன்னத்திற்கு மேலுறை யாக, மூடியவண்ணம் இருப்பாயாக'* என்பது பொருள்.

மேலும், *'பிராணனே, இந்த ஹோமம் சிரத்தையுடன் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அன்னத்தால், (பிராணனாகிய) நீ வளர்வாயாக'* என்றும் வேண்டுகிறோம்.

பிராணனே அன்னத்தைத் ஏற்று, ரஸமாக்கி, பிரித்தளிக்கும் செயல்களுக்கு ஆதாரமாக விளங்குவதையும், பிராணனுக்கு அன்னம் ஆதார சக்தியளிப்பதையும், இவற்றிலிருந்து நாம் பகுத்தறியலாம்.

நம் இயல்பு வாழ்வில் உணரும், குறிப்பிடும் பல்வேறு பலம் – பலஹீனங்களுக்கும், செயலாற்றல் – செயலிழத்தல் ஆகியனவற்றிற்கும், பிராணனின் நிலை வேறுபாடுகளே காரணங்கள்.

எவ்வாறு?

நான் பராக்கிரமசாலி. நான் பலஹீனன். என்னால் நன்றாகப் பேச முடியும். எனக்குச் சரளமாகப் பேச இயலாது. என்னால் வேகமாக ஓட முடியும். என் வலது கால் சரியாகச் செயல்படாததால், நான் விந்தி விந்தி நடக்கின்றேன். எனக்கு விக்கல் எடுக்கின்றது. எனக்கு பசிக்கின்றது. எனக்குத் தாகமாக உள்ளது ஆகிய செயல்பாடுகள் சார்ந்த மதிப்பீடுகள் யாவும் பிராணனின் செயலால் விளைவனவே.

உடலின் உறுப்புகள், உப உறுப்புகள் யாவும் செயல்பட பிராணனே ஆதாரமாக இருப்பதால், உடலின் உறுப்புகள் செயல்படுவதும், செயலிழப்பதும் பிராணனின் பலத்தாலும், பலஹீனத்தாலும் விளைவதாக அறிகிறோம்.

கர்ம இந்திரியங்கள் ஐந்துடனும், பிராணன் பிணைந்து பிராணமய கோசமாக ஒளிர்கின்றது. அன்னமயமான நம் உடல், அதனால் முழுக்க நிரப்பப்பட்டிருக்கின்றது.

அதை உயிராக, ஆதாரமாகக் கொண்டே, அன்னமயமான நம் உடல் எல்லாக் காரியங்களிலும் ஈடுபடுகின்றது என்றது *விவேக சூடாமணி.*

'*கர்மேந்த்ரியை: பஞ்சபிரஞ்சிதோ அயம் ப்ராணோ பவேத்ப்ராணமயஸ்து கோச: | யேனாத்மவானன்ன - மயோ*

*அனுபூர்ண: ப்ரவர்த்ததே அஸௌ ஸகலக்ரியாஸு ||'* – என்பது மூலம்.

பிராணமய கோசம், கர்ம இந்திரியங்களில், வாயுவின், காற்றின், மாறுபட்ட செயல் இயல்புகளின் தொகுப்பே. காற்று, இந்திரியங்களில் தொடர்ந்து மாறுபட்டப் பண்புகளுடன் போவதும் வருவதுமாக இயங்கிக் கொண்டே இருப்பது.

இந்தக் காற்றானது, நமக்கு உள்ளும் புறமும் இருந்து இயங்குகின்றது. இது தனியே தன்னையோ, தனக்கு டையதையோ, தனக்கு வேறானதையோ அறிவதில்லை. அதாவது, பிராணனுக்கு தனியே '**அறிவு**' இல்லை.

இதற்கு பிரியமானதோ, பிரியமற்றதோ இல்லை. அதாவது, பிராணனில் எண்ணங்கள் விளைவதில்லை. பிராணனில், பிராணமய கோசத்தில், புத்தியின் வியாபகமோ, மனதின் வியாபகமோ இல்லை.

(நாம் அடுத்துக் காண இருக்கும் புத்தி, மனது ஆகியனவற்றை விளங்கிக் கொள்ளும் போது, இந்த வரிகள் விளங்கும்).

இது (பிராணமய கோசம்), தன்னுடையதென்றும் அறிவதில்லை. தனக்கு வேறானதன்றும் அறிவதில்லை.

தனக்குப் பிரியமானதென்றும், பிரியமற்றதென்றும் உணர்வதில்லை.

அதனால் இது வேறொன்றால் ஆட்டிவைக்கப் படுகின்றது என்றது விவேக சூடாமணி.

'*அபி ப்ராணமயோ வாயுவிகாரோ கந்தா ஆகந்தா வாயுவதந்தர் - பஹிரேஷ: | யஸ்மாத் கிஞ்சித் க்வாபி ந வேத்தீஷ்ட - மநிஷ்டம் ஸ்வம் வான்யம் வா கிஞ்சன நித்யம் பரதந்திர:*' – இது மூலம்.

பிராணமய கோசம், அன்னமய கோசத்தை விட நுண்ணியது என்றும், பிராணமய கோசமே அன்னமய கோசமான தேகம் இயங்குவதற்கு ஆதார சக்தியாக விளங்குகின்றது என்றும் அறிந்தோம். பிராணனுக்கு எங்கிருந்து ஆதார சக்தி விளைகின்றது?

உணவினாலேயே எல்லாப் பிராணன்களும் இயங்குகின்றன என்பதை, '***அன்னேன வாவ ஸர்வே ப்ராணா மஹீயந்தே***' என உரைக்கின்றது *தைத்திரீய உபநிஷத்து*.

அன்னமய கோசத்தின் மூலக்கூறான அன்னத்தில் இருந்தே பிராணமய கோசத்திற்கு சக்தி கிடைக்கின்றது. ஆக இரண்டும், ஒன்றுக்கொன்று ஆதாரமாக விளங்குகின்றன எனக் கொள்வோம்.

அம்ருதம் போன்ற அன்னத்தினால் ஹோமம் செய்வதாகவும், பிராணன் அதை ஏற்று, அபானன், வியானன், உதானன், சமானன் ஆகியனவற்றை வளரச் செய்யுமாறு வேண்டும் மந்திரம், **மஹா நாராயணோபநிஷத்து** என்னும் நூலில் விளங்கியதை மேலே கண்டோம்.

எலும்பு, மஜ்ஜை, நரம்பு, சதை, இரத்தம், தோல் ஆகியனவற்றால் ஆன ஸ்தூல தேகத்தின், ஸ்தூலத் தொகுப்பு **“அன்னமய கோசம்”** ஆகின்றது.

பஞ்ச வாயுக்களும், கர்மேந்திரியங்களும் சேர்ந்த தொகுப்பு பிராணமய கோசம் ஆகின்றது.

அடுத்து மனம் மற்றும் ஐந்து ஞானேந்திரியங்களின் தொகுப்பு மனோமய கோசம் என்பதையும், புத்தி மற்றும் ஐந்து ஞானேந்திரியங்களின் தொகுப்பு விஞ்ஞானமய கோசம் என்பதையும் காண்போம்.

மனம் என்றால் என்ன? புத்தி என்றால் என்ன? என்பதை ஆராயும் முன், கோசங்களை சற்றே விளங்கிக் கொள்வோம்.

நம்மை, சில ஆதாரப் பண்புகள் சார்ந்து, ஐந்து வேறுபட்ட உறைகளாக விளக்க முற்படுகின்றது வேதாந்தம்.

ஏதோ, உள்ளே ஆதாரமாக ஒரு வஸ்து இருந்து, அதைச் சுற்றி ஒன்றுக்கு மேல் ஒன்றாக நான்கு வேறுபட்ட உறைகள் இருப்பதாகப் பொருளல்ல.

நம் உடலின் ஸ்தூலப் பண்புகளை ஒரு உறையாகப் பகுத்து உணர்ந்தாற்போல், பிராணனையும், அதன் ஆதாரப் பண்புகளையும், அதன் செயல்பாடுகளையும், வேறொரு உறையாகப் பகுத்து உணர்ந்தாற்போல், ஒரே ஆதாரப் பண்புகளின் தொகுப்பாகவோ, ஒரே வகையான செயல்களின் தொகுப்பாகவோ விளங்குவனவற்றை கோசமாகப் பகுக் கின்றோம்.

நம் ஸ்தூல தேகமாகிய, தாதுக்களினால் ஆன பௌதீக உடல், அன்னத்திலிருந்து தோன்றி, அன்னத்தினால் வளர்ந்து, அன்னத்தின் மூலமாம் மண்ணில் சிதைந்து அழிவதால், **அன்னமய கோசம்** எனப்படும்.

## தன்னை அறியும் தத்துவங்கள்

உடலின் உள்ளும் புறமும் நிலைகொண்டுள்ள காற்றின் மாறுபட்ட இயக்கங்களால், தேகத்தின் எல்லா அங்கங்களும் இயங்குகின்றன. செயலாற்றும் கர்ம இந்திரியங்கள் மற்றும் பிராணன்கள் ஆகியனவற்றின் காரண காரியங்கள் ஒருங்கே பிராணமய கோசம் எனப்படும்.

உணர்ச்சிகள் மற்றும் பாவங்களின் கருவியான மனம், ஞான இந்திரியங்களின் வழி விஷயங்களை அணுகி அறிகின்றது. மனதின் விக்ஷேபங்களும், ஞான இந்திரியங்களும் ஒருங்கே மனோமய கோசமாக அறியப்படுவதையும் காணலாம்.

சரி – தவறு, நன்மை – தீமை ஆராய்ந்து, மனதில் விளையும் எண்ணங்களை செயல்படுத்துவதா, கூடாதா என நிர்ணயம் செய்வது புத்தி. (நிர்ணயம் செய்வது புத்தியாகவே இருப்பினும், செயல்படுத்துவதும், செயல்படுத்தாமல் விடுவதும் மனமே). புத்தியின் இந்த இயல்புகளும், ஞான இந்திரியங்களும் ஒருங்கே விஞ்ஞானமய கோசமாக அறியப்படுவதையும் காணலாம்.

ஆனந்தமய கோசத்தைப் பின்னர் விரிவாய் ஆராயலாம்.

இந்தக் கோசங்களை மீண்டும் கற்றறியும் முன்னே, மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் (அஹமர்த்தம்) என்றால் என்ன என்று பார்ப்போம்.

## சித்தம், மனம், அஹங்காரம்!

மனம் என்றால் என்ன?

மனம் வேறு, புத்தி வேறா?

சித்தம் என்றால்?

அஹங்காரம் என்பது ஒரு ஆணவக்குறியீடா?

சனாதன தர்மத்தின் அத்வைத வேதாந்த சாத்திரங்கள் இவற்றைப் பகுத்து விளக்குமளவிற்கு வேறு எந்த தர்மமும் விளக்குகின்றதா, தெரியவில்லை.

இவற்றை, வெகு எளிதாக விளங்கிக் கொள்ள, நாம் முதலில் ஆராயத் தொடங்கிய அனுபவங்களுக்கு மீண்டும் செல்லலாம்.

## தன்னை அறியும் தத்துவங்கள்

நம் அனுபவங்கள் வெறும் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ கந்தங்கள் மட்டும் தானா?

இல்லையே.

அவற்றை சுகமாகவோ, துக்கமாகவோ நாம் உணர்வதும் அனுபவங்களே.

உணர்வது என்றால்?

இது சுகமாக இருக்கின்றது என்னும் எண்ணம் நம் மனதில் எழுவதையே சுக உணர்வு என்கின்றோமா?

மனமா? மனம் என்றால் என்ன?

அதன் இயல்புகள் யாவை?

அதன் ஸ்வரூபம் என்ன?

அதன் லக்ஷணங்கள் யாவை?

பல நேரங்களில், மனது சந்தோஷமாக இருக்கின்றது, மனது வேதனைப்படுகின்றது என்றெல்லாம் கூறுகின்றோமே, அவை சரியான சொற் பிரயோகங்கள் தாமா?

என் மனம் இசையில் லயித்து விட்டது என்கிறோமே, நாம் சொல்ல விரும்புவதைச் சரியாகச் சொல்கிறோமா?

இந்திரியங்கள் வழி உள்வாங்கப்படும் ஒவ்வொரு விஷயமும், நமக்குள் சில எண்ணங்களை விளைக்கின்றன.

அந்த எண்ணங்கள் பலவகையானவை. அவை, அவற்றுக்குத் தொடர்புடைய பல்வேறு எண்ணங்களை விளைக்கின்றன.

விஷயங்கள் மட்டுமா எண்ணங்களை விளைக் கின்றன?

ஆதாரம் இன்னதென்று நாம் அறிய முடியாவண்ணம், தொடர்ந்து நம்முள் எண்ணங்களும், அவற்றுக்குத் தொடர் எண்ணங்களும் விளைந்தவாறே உள்ளன.

நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணமும், (கனவு காணும் போதும் கூட) நம்முள் எண்ணங்கள் எழுந்தவாறே

இருக்கின்றன. கடலில் தொடர்ந்து அலைகள் எழுவதைப்போல், இடைவெளி இன்றி நம்முள் எண்ணங்கள் எழுந்தவாறே இருக்கின்றன.

ஒரு அலை ஓய்வதற்குள், மற்றோரு அலை உருவாவதைப் போல, ஒரு எண்ணம் மறையும் முன்பே, மற்றொரு எண்ணம் உருவாகின்றது.

ஒரு அலை ஓயும் முன்னே, மீண்டும் தொடர் அலைகளால் வலுப்பெற்று மீண்டும் அலையாவதைப் போல, ஒரு எண்ணம் ஓயும் முன்னே, தொடர் எண்ணங்களால் மீண்டும் வலுப்பெறுகின்றது.

அவற்றில் சில, உள்வாங்கப்படும் விஷயங்கள் மீதான ஆய்வாகவோ, விஷயங்கள் நம்மில் விளைத்த சுக துக்கம் போன்ற உணர்வுகளாகவோ, இவற்றின் தொடர் எண்ணங்களாகவோ இருக்கின்றன.

வேறு சில, எந்தவித விஷயாதாரங்களும் இல்லாத, ஒன்றோடும் தொடர்பில்லாத ஏதாவதொரு எண்ணமாகவோ, தொடர் எண்ணங்களாகவோ தோன்றி மறைகின்றன.

கர்மேந்த்ரியங்களால் நாம் ஆற்றும் செயல்கள் யாவும், முதலில் ஒரு எண்ணமாகவே விளைந்து, பேச்சாகவோ, செயலாகவோ உருப்படுகின்றது. பசி, தாகம், அசதி, காமம் போன்ற வேட்கைகளும் நம்மில் எண்ணங்களை விளைத்த வாறே இருக்கின்றன.

வேதாந்தம், இந்த எண்ணங்களின் தொகுப்பை, ஒரு கருவியாகவே காண்கின்றது.

அகக்கருவி என்னும் பொருள்பட, அந்தக்கரணம் என்று அழைக்கப்படும் எண்ணங்கள் எதிலிருந்து விளைகின்றன?

நமக்குள் எண்ணங்கள் எழுவதை அறியும் நாம், அவை ஏதேனும் ஒரு கருவியிலிருந்தே விளைய வேண்டும். அந்தக் கருவியும் ஸ்தூலமாகவே இருக்க வேண்டும் என்றே நம்ப விரும்புகின்றோம்.

வெறும் எண்ணங்களின் தொகுப்புக்கு என்ன பலம் இருக்க முடியும்?

ஒருங்கே எண்ணங்களுக்கு எப்படி ஒரு தனி இருப்பு இருக்க முடியும் என்ற கேள்விகள் எழுகின்றன.

மனம் என்றும், புத்தி என்றும், சித்தம் என்றும், அஹமர்த்தம் என்றும் நான்கு கூறுகளாய் வேதாந்தம் பகுக்கும் நம் அகக் கருவியை சற்றே விரிப்போமா?

முதலில் சித்தம். அந்தக்கரணங்களில் ஒன்றான சித்தம், தன்முனைப்பற்ற ஒரு கருவியாகும். நமது பேராற்றல்களில் ஒன்று சித்தம். நினைவுகூர்வதும், ஏற்கனவே உள்ளப் பதிவுகளுடன், புதிய நினைவுகள், நிகழ்வுகளை ஒப்பிடுவதும், புதிய நினைவுகளை, நிகழ்வுகளைப் பதிவு செய்து கொள்வதும் நமக்கு இயல்பாகும்.

நமக்கு நிகழ்ந்த, நாம் கண்ட, கேட்ட, படித்து அறிந்த, கற்ற விஷயங்கள் யாவும் நம்முள் எங்கேனும் பதிவுகளாய் இருக்கவே வேண்டும். அதனால் தான், ஒரு விஷயம் பற்றி நாம் சிந்திக்கும் போது, அது குறித்த நம் அனுபவங்கள் யாவும், நமக்கு நினைவுக்கு வருகின்றன.

இப்படி நம் அனுபவங்களும், நினைவுகளும், ஒருங்கே சேகரிக்கப்பட்டு, வரிசைக் கிரமமாக வைக்கப்பட்டு இருக்கும் நினைவாற்றலே சித்தம்.

'***சிந்தன கர்த்ரு சித்தம்***' என்றது *தத்வபோதம்.*

பதிவுசெய்து வைத்துக் கொண்டு நினைவுகூறும் இந்த சிந்திக்கும் ஆற்றலை சித்தம் என்று அழைக்கின்றோம்.

அது இந்திரியங்களால் உள்வாங்கப்படும் விஷயங் களைப் பதிவு செய்து கொள்கின்றது. மனதில் எழும்பும் கேள்விகளைப் பதிவு செய்து கொள்கின்றது.

புத்தியின் துணை கொண்டு மனம் அறியும் பதில்களையும் பதிவு செய்து கொள்கின்றது. விஷயங்களையும், சலனங்களையும், விளக்கங்களையும், இவை சார்ந்த எண்ணங்களையும், எண்ணங்களின் விளைவுகளையும் என எல்லாவற்றையும் பதிவு செய்து கொள்கின்றது.

பதிவு செய்து கொள்வதும், மனமோ, புத்தியோ அந்தப்பதிவுகளை மீட்டெடுத்துக் கொள்ள வசதியான தளமாக விளங்குவதும் மட்டுமே சித்தத்தின் தன்முனைப்பற்ற காரியங்கள்.

இது தன் செயல்பாட்டில் ஒரு பௌதீகக் கருவியைப் போலவே செயல்பட்டாலும், அறிவியல் ஆய்வின்படி, இது ஸ்தூலமான மூளை மற்றும் நரம்பு மண்டலங்களை ஆதாரமாகக் கொண்டிருந்தாலும், பதிவு செய்து கொள்வது, தளமாக விளங்குவது ஆகியப் பண்புகள் வெறும்

எண்ணங்களாக, ஸ்தூலமாக இன்றி, நுண்ணிய வடிவில், சூக்ஷமமாகவே விளங்குகின்றன. நினைவு சார்ந்த இந்த எண்ணத் தொகுப்புகளே சித்தம்.

அஹங்காரமோ, மனமோ, புத்தியோ அவ்வாறு தன்முனைப்பற்ற கருவிகளாய் இல்லாது, தானே முனையும் கருவிகளாய் விளங்குவதை, மேலும் விரிவாய் புரிந்து கொள்ள, நமது ஒரு செயல் திறன்களை ஆராய்வோம்.

நாம் ஏதேனும் ஒரு செயலிலோ, சிந்தனையிலோ ஆழ்ந்திருக்கும் போது, நம் புலன்கள் உள்வாங்கும் விஷயங்களை கவனிக்காமல் தவறவிடுகின்றோம். நம் 'மனம்' ஆதாரமாக இருந்து புலன்களின் வழி வரும் உள்ளீடுகளை கவனிக்காவிடில், அவை பதிவாவதை நாம் கவனிப்பதே இல்லை. ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டிருக்கும் போது, மனம், கேட்கும் சப்தத்தை தவற விடுகின்றது.

காணும் காட்சிகளை, வீசும் நறுமணத்தை, உடலில் படும் ஸ்பரிசத்தை என எதையும் பதிவு செய்யத் தவறுகின்றோம். மனதை துக்கமோ, சுகமோ பாதித்திருக்கும் போது, உண்ணும் உணவின் ருசியும் கூடத் தெரிவதில்லை.

மனதின் உதவியுடனேயே, நம்மால், புலன்கள் வழி உள்வாங்கப்படும் விஷயங்களை, கிரஹித்து, உணர முடிகின்றது.

ஆக, '<u>ஞான இந்திரியங்களுக்கு ஆதாரமாக இருப்பது</u>' மனதின் பண்புகளில் ஒன்றாக இருக்கின்றது.

இந்த எண்ணங்கள், புலன்களில் இருந்து விளைவதில்லை என்பதை நாம் அனுபவத்தில் அறிகிறோம். ஆக, புலன்களுக்கு, தானாகவே விஷயங்களை அறிந்து கொள்ளும் திறனோ, உணரும் ஆற்றலோ, விஷயங்களாலான அனுபவமோ இல்லை என அறிகிறோம்.

விஷயானுபவங்கள், நம்முள் வேறெங்கோ எண்ணங் களை விளைக்கின்றன. அந்த எண்ணங்களே விஷயங்களை உணர, நமக்கு ஹேதுவாக இருக்கின்றன.

அந்த எண்ணங்கள் வேறெந்த விஷயத்திலோ, உணர்விலோ ஒன்றி, அதையேப் பற்றி நிற்கும் போது, இந்திரியங்கள் முன்னிற்கும் விஷயங்களை, (இந்திரியங்கள் உள்வாங்கியவாறே இருந்தாலும்), நாம் அறிவதில்லை.

காதுகளும், அவற்றிற்கு ஆதாரமாக மனமும் ஒருங்கே இணைந்தே சப்தத்தை கிரஹிக்கின்றன. கண்களும், அவற்றிற்கு ஆதாரமாக மனமும் ஒருங்கே இணைந்தே காட்சியை கிரஹிக்கின்றன.

தோல், நாக்கு, மூக்கு ஆகிய இந்திரியங்களும், இவ்வண்ணமே மனதுடன் ஒருங்கிணைந்து விஷயங்களை கிரஹிக்கின்றன.

நமக்குள், தொடர்ந்து புலன்கள் வழியாக விஷயங்கள் கிரஹிக்கப்பட்டு, அவை சார்ந்த எண்ணங்கள் வளர்ந்தவாறே இருக்கின்றன. நம்முள் வளரும் எண்ணங்கள், இந்திரியங்களைக் காரியமாற்றவும் தூண்டுகின்றன.

தானே உள்ளிருந்து எழும் எண்ணங்கள், புற விஷயங்களால் உள்ளே எழும் எண்ணங்கள் ஆகியனவற்றின் தொகுப்பே மனமா?

ஆகாயத்தின் ஸத்வகுணமே சப்தத்திற்கும், சப்தத்தை உள்வாங்கும் கருவியான காதுக்கும் ஆதாரமாக விளங்குவதை ஏற்கனவே கண்டோம்.

உள்வாங்கப்படும் சப்தம், மனதினாலேயே உணரப் படுகின்றது. விளங்கிக் கொள்ளப்படுகின்றது. இதே போல, வாயுவின் ஸத்வ குணமே ஸ்பரிசத்திற்கும், ஸ்பரிசத்தை உள்வாங்கும் கருவியான **'த்வக்'** எனப்படும் தோலுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

நெருப்பின் ஸத்வகுணமே ரூபத்திற்கும், ரூபத்தை உள்வாங்கும் கருவியான கண்ணிற்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

நீரின் ஸத்வகுணமே ரஸத்திற்கும், ரஸத்தை உள்வாங்கும் கருவியான நாக்கிற்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

**'ப்ருத்வி'** யான நிலத்தின் ஸத்வகுணமே கந்தத்திற்கும், கந்தத்தை உள்வாங்கும் கருவியான மூக்கிற்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

உள்வாங்கப்படும் ஸ்பரிசம், ரூபம், ரஸம் மற்றும் கந்தம் ஆகியன மனதினாலேயே உணரப்படுகின்றன, விளங்கிக் கொள்ளப்படுகின்றன.

இந்த உணர்வுகள் நம் மனதில் எண்ணங்களை விளைக்கின்றன. அந்த எண்ணங்கள், சித்தத்தின் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு ஆராயப்பட்டு, இவற்றின் மேல் எழும் விருப்பு வெறுப்புகள் புத்தியின் துணையுடன் சுகமா துக்கமா என முடிவெடுக்கப்பட்டு, அஹமர்த்தம் – மனம் கூட்டால் அனுபவிக்கப்படுகின்றன். இந்த அனுபவங்களும், மேலும் சித்தத்தில் பதிவாகின்றன.

ஐந்து ஞானக் கருவிகள் (ஞானேந்திரியங்கள்) இருக்கின்றனவே. மனம் ஏதோ ஒரு இந்திரிய விஷயத்தில் லயித்திருக்கும் போது மற்ற இந்திரியங்கள் உள்வாங்கும் விஷயங்கள் என்னவாகின்றன?

ஏக நேரத்தில் எல்லா இந்திரியங்களால் உள்வாங்கப்படும் விஷயங்களை உணரும் சக்தி உள்ளதே மனது. ஏதோ ஒரு தருணத்தில், ஏதாவது ஒரே விஷயத்தில் மனதின் முழுக்கவனமும் ஒருமுகப்படும் போது மற்ற விஷயங்களை மனம் பொருட்படுத்தாமல் விடுவதும் உண்டு.

அப்போதும் ஞானேந்திரியங்கள் விஷயங்களை உள்வாங்கியவாறே தான் இருக்கின்றன. பல நேரங்களில் ஞானேந்திரியங்கள் மனதினால் தூண்டப்பட்டும், விஷயங்களில் பிரவ்ருத்திக்கின்றன.

கண்கள் திரைப்படம் போன்ற காட்சிகளில் நிலைப்பதும், தொடர்ந்து புத்தகம் படிப்பதும் போன்ற காரியங்கள், மனதால் தூண்டப்பட்டு இந்திரியங்கள் செயல்படுவதன் உதாரணங்கள்.

உள்வாங்கும் சப்தத்தின் இயல்பு அறியாமலே காது அதை உள்வாங்குகின்றது. ஸ்பரிசத்தின் இயல்பு அறியாமலே தோலும், காட்சியின் இயல்பு அறியாமலே கண்ணும், ரஸத்தின் இயல்பு அறியாமலே நாக்கும், கந்தத்தின் இயல்பு அறியாமலே மூக்கும் விஷயங்களை உள்வாங்குகின்றன.

இந்தக் கருவிகள் விஷயங்களை தாங்கும் (பொறுத்துக் கொள்ளும்) அளவீட்டிற்கும் வரையறை இருக்கின்றது.

உடலின் ஏதோவொரு அங்கம் தீயின் மீது பட்டதும் நாம் உடனே விலகுகின்றோம். தாங்கவொண்ணா ப்ரகாசத்தைக் காண நேர்ந்தால், நாம் கண்களை அனிச்சையாக மூடிக் கொள்கின்றோம்.

ஆக நம் இந்திரியங்களாகிய கருவிகளின் தாங்கும் தன்மை என்ற வரையறை அளவீட்டை மீறும் போது உடல் அனிச்சை உணர்வை வெளிப்படுத்துகின்றது.

பசி, தாகம், தூக்கம், மைதுனம் போன்று, அனிச்சை உணர்வும் மனிதர்களுக்கும் மற்ற மிருகங்களுக்கும் பொதுவானதே. ஆக அனிச்சை உணர்வு மனதின் வியாபகம் இன்றி, உடலின் பௌதிக விளைவாகின்றது.

இந்த அனிச்சை செயல்களைத் தவிர்த்து, மற்ற எல்லா நேரங்களிலும், எல்லா விஷயங்களை உள்வாங்கும் போதும், இந்திரியங்கள் மனதை ஆதாரமாகவே கொண்டு, மனதுடன் இயைந்தே காரியமாற்றுகின்றன.

ஆக நம் ஞானேந்திரியங்களான அறிவுக்கருவிகளுக்கு மனமே தூண்டுதலாகவும், உணர்தளமாகவும், ஆதாரமாகவும் விளங்குகின்றது.

ஒருங்கிணைந்து பணிசெய்யும் ஞான இந்திரியங்களும் மனமும், ஒருங்கே மனோமய கோசம் என்று அழைக்கப்படுவதாக, *தத்வ போதம்*, '*மனஸ்ச ஞானேந்த்ரிய பஞ்சகம் மிலித்வா யோ பவதி ஸ மனோமய: கோச:*' என்றது.

இந்திரியங்கள், கருவிகளாய் இருந்து உள்வாங்கும் விஷயங்களை ஆதாரமாக இருந்து கிரஹிக்கும் கருவி மனம். அது நம் மற்ற உடல் அங்கங்களைப் போல பௌதீக, ஸ்தூல

வடிவுடன் இல்லை. வெறும் எண்ணங்களின் தொகுப்பாகவே இருக்கின்றது.

விஷயங்களால் விளையும் எண்ணங்கள் மட்டுமா? நம் கர்ம இந்திரியங்களை, ஞான இந்திரியங்களை விஷயங் களில் செலுத்துவதும், கர்ம இந்திரியங்களை செயல்களில் நடத்துவதும் மனமே.

எப்படி?

நாம் செய்யும் செயல்கள் யாவுமே, செயல்களாக பரிணமிக்கும் முன், எண்ணங்களாகவே விளங்கு கின்றனவா?

இதயம், சிறுநீரகம் போன்ற உப உறுப்புகளின் செயல்பாடுகள் நம் கட்டுப்பாடின்றி, அதாவது எண்ணங்களின் தூண்டுதலே இன்றி நிகழ்வன. இமைப்பது, கொட்டாவி விடுவது, தும்மல் போன்ற வெளிப்பாடுகளும் அவ்வாறே.

இவை யாவும் பிராணனால் நிகழ்த்தப்பெறும் செயல்கள். பிராணனில் எண்ணங்களோ, அறிவோ இல்லை என்று மேலேயே கண்டோம். இவை, மனதின் ஆதாரமோ,

மனதின் தூண்டுதலோ, மனதின் வியாபகமோ ஏதுமின்றி நிகழும் இயக்கங்களே.

அடுத்து பசி, தாகம், அசதி, காமம், ஆகிய உடலின் வேட்கைகளையும் காணலாம். நம் உடலில் நீரின் அளவு குறைந்ததும், உடல் எழும் தாகம் என்னும் வேட்கையை சார்ந்த எண்ணங்கள் மனதின் அங்கமாகின்றன.

நம் எண்ணங்கள் நம்மை நீர் தேடி, நீரின் தரமறிந்து நீரருந்தத் தூண்டுகின்றன. நமக்கு உகந்த நீர் கிடைத்ததும், நாமும் நீரருந்தி தாகம் தணிகிறோம்.

அன்னத்திலிருந்து, உடலின் இயக்கத்திற்குத் தேவையான சக்தியை, பிராணன், தனக்கும், ஸ்தூல உடலின் பிற பாகங்களுக்கும், ஏற்றுப் பகிர்ந்தளிப்பதைக் கண்டோம்.

நம் உணவுப் வழக்கங்களுக்கு ஏற்ப, நம் உடல், தனக்கு உணவு கிடைக்கும் காலப்பட்டியலுக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றது. அதற்கேற்ப, உணவு நேரங்களில், பசியாகிய வேட்கை சார்ந்த எண்ணங்கள் நம் மனதின் அங்கமாகின்றன. நாம் பசியாறும் வரை, பசி குறித்த எண்ணங்கள், தொடர் எண்ணங்கள், அவை தூண்டும்

செயல்கள் ஆகியனவை விளைகின்றன. அசதியும், ஓய்வு சார்ந்த எண்ணங்களையே மனதில் விளைக்கின்றது.

இவை யாவும் பிராணன், மனதின் துணையின்றி உடலில் விளைக்கும் வேட்கைகள் எனினும், இவ்வேட்கைகளால் எண்ணங்கள் விளைந்து, எண்ணங்கள் சில செயல்களைத் தூண்டி, அந்த செயல்கள் இவ்வேட்கைகளை நிவ்ருத்தி செய்கின்றன.

பசி, தாகம், அசதி ஆகியன பிராணனால் விளையும் இயற்கையான வேட்கைகள்.

அடுத்து, காமத்தை ஆராய்வோம்.

மனதில் எழும் இச்சை உடலை தூண்டுவதும், உடலின் வேட்கை மனதில் காமம் சார்ந்த எண்ணங்களை விளைப்பதும், அந்த எண்ணங்கள் உடலைத் தூண்டுவதும் ஆக, எது காரணம், எது காரியம் என்று அறியவொண்ணா வளையமாக, உடலும், மனதும், ஒன்றிற்கொன்று துணையாகவும், தூண்டுதலாகவும் இருக்கின்றன.

நனவிலும், கனவிலும், காம இச்சை நிறைவு பெறுவதற்கு, மனமே ஆதாரமாக இருப்பதை, பின்னர் விளக்கலாம்.

இப்போதைக்கு, காம வேட்கைக்கும், காம நிவ்ருத்திக்கும், மனம் ஆதாரமாக இருக்கின்றது என்பது விளங்குகின்றது. காம வேட்கை, பிராணனின் செயல். வேட்கை வ்ருத்தியாவது மனதின் ஆதாரத்தால். வேட்கை நிவ்ருத்தியாவது, மனது லயித்திருக்கும் நிலையில், கர்ம இந்திரியமான கருவாயின் செயலால்.

ஆக, பசியை பிராணன் விளைக்கும் போது, பசியாறலுக்கு, எண்ணங்கள், மனது ஆதாரமாகின்றது. தாகம், பிராணனால் விளைகின்றது. தாகம் தணிதலுக்கு, மனதும், எண்ண வ்ருத்திகளும் காரணமாகின்றன.

காமம், பிராணனின் விளைவாகவோ, மனதின் விளைவாகவோ நிகழ்ந்தாலும், காம வ்ருத்திக்கும், நிவ்ருத்திக்கும் எண்ணங்கள் ஆதாரமாகின்றன.

ஆக, பிராணனால் எழும் வேட்கைகளின் நிவ்ருத்திக்கு ஆதாரமாக இருப்பது, மனதின் பண்புகளில் ஒன்றாக இருக்கின்றது.

கர்மேந்திரியங்களின் செயல்கள் ஒவ்வொன்றுக்குமே மனம் ஆதாரமாக இருப்பதையும் ஆராயலாம்.

முதலில், வாக்கு அல்லது பேச்சு. வாக்கு என்பது, நம் எண்ணங்களின் சப்த வெளிப்பாடே. மனதில் எழும்பும் எண்ண அலைகளே சப்தமாக வெளிப்படும் போது பேச்சாக, வாக்காக அறியப்படுகின்றதா?

விழித்திருக்கும் ஒவ்வொரு கணமும், ஏதாவதொரு சப்தத்தின் ஆதிக்கத்திலேயே இருக்கும் நாம், '**சப்தம்**' என்றால் என்ன என்று ஆராய்ந்ததே இல்லை.

நாம் காதின் வழி உள்வாங்கி பகுத்து அறிவது மட்டுமே சப்தமா?

இல்லை, சப்தத்திற்கு, நாம் நம் புலன்களால் உணர முடியாத சூக்ஷம நிலையும் உள்ளதா?

முதலில், சாஸ்திரங்கள் நம்முள் எழும் '**சப்தம்**' பேச்சாகவோ, வாக்காகவோ வெளிப்படும் முன் அதன் நிலைகள் குறித்து கூறுவதைக் காண்போம்.

சப்தமானது, வியக்தமாகாத அதாவது இன்னும் வெளிப்படாத, இந்திரியங்களுக்குப் புலப்படாத விதை வடிவில் நம்முள் உறைகின்றது.

பிறகு அது மெல்லிய அதிர்வாக மூலாதாரத்தில், மிகவும் நுண்ணியதாக உருவெடுக்கின்றது. சற்றே திடப்படும் போது அது புத்தியால் உணரும்படியான, உருவங்களும் நிறங்களும் கொண்ட அதி சூக்ஷமமான எண்ணமாக வடிவெடுக்கின்றது.

மேலும் திடப்படும் போது அது மனதால் உணரும்படியான சூக்ஷம உருவம் கொண்ட காரியமாக, திடமான எண்ணமாக வடிவெடுக்கின்றது. மேலும் திடப்படும் போது, அதே சப்தம், ஒரு உணர்வின் வெளிப்பாடாக அர்த்தமற்ற சப்தமாகவோ அல்லது எழுத்து வடிவில், இலக்கண விதிகளுக்குக் கட்டுப்பட்டு பேச்சாகவோ வெளிப்படுகின்றது.

நம்முள் இருந்து வெளிப்படும் ஒவ்வொரு சப்தத்தையும் இவ்வாறு படிப்படியாக நாம் உணருகின்றோமா?
இல்லையெனில் ஏன்?

நம் பேச்சு பொதுவாக அர்த்தமுள்ளதாக, எழுத்துக் களாலும் பிற இலக்கண விதிகளாலும் வரைமுறைக்கு உட்பட்டதாகவே விளங்குகின்றது.

அங்ஙனம் பகுத்து உணரத்தக்கதாய் வெளிப்படும் சப்தங்களை '**வர்ணம்**' என்று அழைக்கின்றோம்.

அர்த்தமற்ற சிரிப்பு, அழுகை, தேம்பல், விசும்பல், வியப்புச் சொற்கள், அச்சக் குறிப்புகள், பதட்டத்தின் வெளிப்பாடுகள் ஆகிய சப்தங்களை '**த்வனி**' என்று அழைக்கின்றோம்.

ஆக, எழும் சப்தங்களில், எழுத்து மற்றும் இலக்கண விதிகளால் கட்டுப்படுத்தப் படும் முன்னரே, வெளிப்படும் சப்தங்கள் '**த்வனி**' ஆகின்றன. மனதும் புத்தியும் அந்த சப்தங்களை எழுத்து மற்றும் இலக்கண விதிகளால் நெறிப்படுத்தும் போது அவை '**வர்ணம்**' அல்லது வாக்கு ஆகின்றன.

'**த்வனி**' மற்றும் '**வர்ணம்**' ஆகிய சப்தங்கள், நம் பிரயத்தனத்தால், முயற்சியால் எழுப்பப்படுவன. அவற்றை ஒருங்கே '**ஆஹத சப்தங்கள்**' என்றோ '**வைகரி**' என்றோ அழைக்கின்றோம். 'ஆஹத சப்தங்கள்' முயற்சியால் விளைவன.

'**அனாஹத சப்தங்கள்**' தன் முயற்சியின்றி விளைவனவா?

## நம்முள், நம் முயற்சியின்றியும் சப்தம் விளைகின்றதா?

முதலில் சப்தத்தின் இயல்பைப் பகுப்போம். சப்தம், நாம் உணரும் வடிவில், பருவாக, ஸ்தூலமாக விளங்குவதை அறிவோம். நாம் காதுகளால் கேட்டு உணர இயலாத வடிவில் சூக்ஷுமமாகவும் சப்தம் விளங்குகின்றது. மனதில் விளையும் எண்ணங்களும், அந்த எண்ணங்களுக்கு ஆதாரமாக புத்தி உணரும் அதிர்வுகளும், அந்த அதிர்வுக்கு ஆதாரமாக விளங்கும் அவ்யக்தமான விதைகளும் கூட சப்தங்களே.

இவற்றுள், வர்ணமும் த்வனியும் காது என்ற புலனால் உள்வாங்கப்படுவது போல, எண்ணங்கள் மனம் என்ற புலனாலும், எண்ணங்களுக்கு ஆதாரமான அதிர்வுகள் புத்தி என்ற புலனாலும் உள்வாங்கி இயல்பு அறியப்படுவதைப் பின்னர் காணலாம்.

நாம் கேட்கும் எல்லா சப்தங்களும், ஆராய்ந்து பார்க்கின், காற்றில் அதிர்வுகளாகவே உருவாகி, அதிர்வுகளாகவே பயணித்து, அதிர்வுகளாகவே நம் காதுகளால் உள்வாங்கப்படுகின்றன. உலோகம் போன்ற திடப்பொருள்களில் உருவாகும் அதிர்வுகளும், சுற்றியிருக்கும் காற்றை அதிர வைத்து, சப்தமாக உருவாகின்றன.

வெளியில் காற்றின் அதிர்வுகளாய் சப்தம் உருவாவது போலவே, நம் **'வாக்'** இந்திரியத்திலும், காற்று அதிர்ந்து சப்தமாக, பேச்சாக வெளிப்படுகின்றது. அது ஸ்தூல சப்தம். சுவாசத்தால் உள்ளும் புறமும் செல்லும் காற்றை நம் **'வாக்'** இந்திரியம் அதிர்விப்பது போலவே, (நம் மூலாதாரத்தில்) பிராணன் அதிர்வது, வெளியில் கேட்காத இனிய முணுமுணுப்பாக உணரப்படுகின்றது. அது சூக்ஷம சப்தம்.

மனிதக்குரலில், நம்மால் கேட்கத் தக்கதாயுள்ள சப்தம், பேச்சாகவோ வேறு சப்தமாகவோ வெளிப்படும் முன்னர், ஆழ்நிலையில் மட்டுமே உணரும் வண்ணம் உருவாகின்றது; அது **'பரா'** என்று அழைக்கப்படுகின்றது.

இது நம் காதுகளாலோ, மனதாலோ, புத்தியாலோ உணர இயலாத வண்ணம், மிகவும் நுண்ணியதாய், அவ்யக்தமாய் – அதாவது, விதையைப் போல வளர்ந்து வெளிப்படாமல் இருக்கின்றது. இதை உணர்வு நிலை என்று குறிக்கலாம். இது நம் மூலாதாரத்தில் ஒரு உணர்வு விதை வடிவில் இருந்து எண்ணமாக உருவாகும் க்ஷணத்திற்கு முந்திய நிலை.

இந்த உணர்வு, மேலும் உருப்பெற்று, நம் புத்தியால் மட்டுமே உணரும் வண்ணம் பரம சூக்ஷம நிலைக்கு வளர்கின்றது; அது **'பச்யந்தி'** என்று அழைக்கப்படுகின்றது.

அந்த உணர்வின் நிறம், உருவம் ஆகியனவற்றை புத்தியால் 'காண' இயலும் என்பதால், பார்க்கப்படும் அல்லது பச்யந்தி சப்தம் என்று பெயர்.

அந்த உணர்வு, மேலும் திடப்படும் போது, அது நம் மனதாலும் உணரும் வண்ணம் சூக்ஷம உருவெடுக்கின்றது; அது **'மத்யமா'** என்று அழைக்கப்படுகின்றது.

நாம், நம் கனவில் கேட்கும் சப்தங்கள் இந்த வகையைச் சார்ந்தவையே.

ஆக சப்தம் **'பரா'** என்னும் விதை வடிவில் இருந்து, அதிர்ந்து, புத்தியால் நிறம் மற்றும் உருவம் புரியும் வண்ணம் **'பச்யந்தி'** யாக உணரப்பட்டு, மனதால் **'மத்யமா'** என்ற எண்ணமாக வடிவெடுத்து, செவியால் உள்வாங்கத்தக்க உணர்வுக் குறிப்பாக **'த்வனி'** யாகவோ அல்லது எழுத்து மற்றும் இலக்கண விதிகளுக்குக் கட்டுப்படும் **'வர்ணம்'** ஆகவோ வெளிப்படுகின்றது.

இவைகள் சப்தத்தின் ஐந்து நிலைகள். இவற்றில், முற்றிலும் முதிர்ந்து உணரத்தக்கதாக வெளிப்படுவதை '**வாக்கு**' அல்லது '**பேச்சு**' என்று அழைக்கின்றோம். ஆக, வாக்குக்கு ஆதாரமாக விளங்குவது, மனதின் பண்புகளில் ஒன்றாகின்றது.

வாக்கு மட்டுமல்ல, எல்லாச் செயல்களுமே, எண்ணங்களாய் விளைந்து, இந்திரியங்கள் வழி பிரவர்த்தித்த (செயல்களாய் வெளிப்பட்ட), எண்ணங்களால் தூண்டப்பெற்ற இந்திரியங்களின் காரியங்களே.

கைகளாலும், கால்களாலும் நாம் ஆற்றும் செயல்கள் யாவுமே மனதில் எண்ணமாக விளைந்து, செயல்களாய் பரிணமிப்பது நமக்கு வெளிப்படையாகத் தெரியும் உண்மையே.

காமம் கடக்க இன்பம் துய்ப்பதும் மனதை ஆதாரமாகக் கொண்ட செயலே எனப் பர்ர்த்தோம்.

உடலின் கழிவுகள் சேர்ந்ததும், மலமாகவோ, ஜலமாகவோ கழிப்பது என்னும் செயலுக்கும், பிராணன், உந்துதல் தரும் ஆதாரமாக இருக்கின்றது.

மனதில் விளையும் எண்ணங்கள் துணை புரிகின்றன. ஆக, கர்ம இந்திரியங்கள் ஆற்றும் செயல்களுக்கு ஆதாரமாக இருப்பது, மனதின் பண்புகளில் ஒன்றாகின்றது.

ஆக ஞான இந்திரியங்கள் உள்வாங்கும் விஷயங் களை ஆதாரமாக இருந்து கிரஹித்து, பகுத்து, பதிவு செய்து கொள்ள துணை நிற்பது, ஞான இந்திரியங்களைத் தூண்டி, ஒரு விஷயத்தில் நிலைபெற வைப்பது, பிராணன் விளைக்கும் வேட்கைகளின் நிவ்ருத்தி காரியங்களுக்கு ஆதாரமாக இருப்பது, கர்ம இந்த்ரியங்கள் ஆற்றும் காரியங்களுக்கு ஆதாரமாக இருப்பது ஆகிய எண்ணங்களின் தொகுப்பு மட்டுமே மனமா?

'***ஸங்கல்ப விகல்பாத்மகம் மன:***' என்றது *தத்வபோதம்*.

நம் இந்திரியங்கள், விஷயங்களை, அவை இன்னவைதான் என்ற தீர்மானமான நிர்ணயம் இல்லாமலே உள்வாங்குகின்றன. அவை நமக்கு ப்ரியமானவையா, ப்ரியமற்றவையா என்ற பேதமும் இல்லாமலே உள்வாங்கு கின்றன.

அவை இன்னதென்று அறியும் திறன் புத்தி என்று அழைக்கப்படுகின்றது என்பதை பின்னர் விவரிப்போம்.

அவை இன்னதா, வேறு வகையானதா என ஆராயும் எண்ணங்கள் மனதின் அங்கமே. விகல்பங்களை, வேற்றுமை களை குறித்து வினா எழுப்புவதும், புத்தி அறுதியிட்டுக் கூறும் முடிவுகளின் மேல், மேலும் வினா எழுப்புவதும் மனதின் இயல்புகளாகின்றன.

மனம் என்பது எண்ணங்களின் தொகுப்பே என்றாலும், இனி எளிமை கருதி, '**மனம்**' என்னும் குறியீட்டுச்சொல்லையே உபயோகிப்போம்.

இதுவரை நாம் கேள்விப்பட்டேயிராத ஒரு விஷயம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நம் சித்தத்தில் அது குறித்த பதிவுகளே இருக்காது. அந்த விஷயம் நமக்குப் பிரியமானதா, பிரியமற்றதா என்றோ, அதை நாம் அனுபவிப்பது தர்மமா, தர்மமில்லையா என்றோ புத்திக்குத் தெரியாது.

நம் மனமோ, அந்த விஷயங்கள் குறித்த எண்ணங் களே இன்றி இருக்கின்றது. இது மனதின் நிர்விகல்பமான நிலை.

அந்த விஷயத்தைக் குறித்து கேட்டோ, படித்தோ அறிந்ததும், மனம் அது குறித்த கருத்துகளை உருவாக்கிக்

கொள்கின்றது. இவை சங்கல்பங்கள் (முடிவான கருத்துகள்) என்று அழைக்கப்படுகின்றன.

கருத்துக்கள், அந்த விஷயத்தின் (நிறம், உருவம், எடை போன்ற) தன்மைகள் குறித்தும் இருக்கலாம். அந்த விஷயத்தின் (நமக்குப் பிரியமானதா, இல்லையா? என) விளைவுகள் குறித்தும் இருக்கலாம்.

அந்த விஷயத்தின் (நியாய, அநியாயம் போன்ற) அனுபவ தர்மங்கள் குறித்தும் இருக்கலாம். அந்த விஷயம், சித்தத்தில் ஏற்கனவே பதிவாகியிருக்கும் வேறெதாவது விஷயத்துடன், இயல்புகள் பொருந்தி இருக்கின்றதா என்பதை புத்தி ஆராய, மனம் மேலும் எண்ணங்களை வளர்க்கின்றது. இவை அந்த விஷயம் குறித்த கேள்வி ஞானமே.

அடுத்து, அந்த விஷயத்தை நாம் கண்டு, உபயோகித்து அனுபவிப்பதாக வைத்துக் கொள்வோம். இப்போது, மனம் அந்த விஷயத்தின் இயல்புகள் குறித்து எண்ணங்களை விளைத்த வாறே இருக்கின்றது. புத்தி அந்த எண்ணங்களில் இருந்து சில தீர்மானங்களைச் செய்து, சித்தத்தில் பதிவு செய்கின்றது.

இவ்வாறு, கிரஹிக்கப்பட்ட இயல்புகள், முன்னரே பதிவான சங்கல்பங்களுக்கு மாறானதாக இருந்தால், அந்த

விகல்பங்கள் (மாறுபட்ட சங்கல்பங்கள்) புதிய சங்கல்பங் களாகின்றன.

சித்தம் இவற்றையும் பதிந்து கொள்கின்றது. அதே நேரத்தில், மனம், அந்த விஷயத்தின் அனுபவம், பிரியமானதா, பிரியமற்றதா என்றும் உணர்கின்றது.

மனம் இவ்வாறு பிரியமாகவோ, பிரியமற்றோ அறியும் உணர்வுகளும் (எண்ணங்களும்) புத்தியால் தீர்மானிக் கப்பட்டு, சித்தத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

மனம், (அனுபவத்திற்கு முன்னமே இருந்த) சித்தத்தின் பதிவுகளின் ஆதாரத்தில், இந்த விஷய அனுபவம், தர்மமா, அதர்மமா என்பது குறித்தும் எண்ணங்களை எழுப்புகின்றது.

அவையும் புத்தியால் தீர்மானிக்கப்பட்டு, சித்தத்தில் பதிவு செய்து கொள்ளப்படுகின்றன. இந்த புதிய அனுபவங்கள், ஏற்கனவே மனம் செய்த சங்கல்பங்களுக்கு மாறாக இருப்பின், அவையும் புதுப்பிக்கப்படுகின்றன.

எந்த ஒரு விஷயமும், புலன்களுக்கு, முதன் முறையாகப் பரிச்சயம் ஆகும்வரை, மனம் அது குறித்த

எண்ணங்கள் இன்றி, சித்தம் அது குறித்த பதிவுகள் இன்றி நிர்விகல்பமாக இருக்கின்றன.

புலன்களால், தானாக இன்னதென்று அறிய முடியாத விஷயத்தை, மனம் பல்வேறு கோணங்களிலும் கேள்விகளை எழுப்பி, சித்தத்தில் உள்ளப் பதிவுகளின் துணைக் கொண்டு, புத்தியின் முடிவெடுக்கும் திறனால், தீர்மானித்து, உணர் கின்றது.

இந்த அறிவு, உணர்வு சார்ந்த தீர்மானங்களே சங்கல்பங்கள். மென்மேலும் விளையும் அனுபவங்களால் இந்த சங்கல்பங்கள் புதுப்பிக்கப் படுகின்றன. புதிய அறிவால், மனம் ஏற்கனவே இருந்த அறிவை புதுப்பித்தவாறே இருக்கின்றது.

புதிய உணர்வால், மனம் ஏற்கனவே விளைந்து பதிந்த உனர்வுகளை தெளிவுபடுத்திக் கொண்டே இருக்கின்றது.

இது ஒரு தொடர் நிகழ்வே. எக்காலத்தும் நின்று போவதில்லை. சங்கல்பம் தான் மனம். மனமே சங்கல்பம் என்றது *மஹோபநிஷத்து*.

சங்கல்பம் மனதிலேயே உள்ளது. எங்கு சங்கல்பம் உள்ளதோ, அங்கு மனம் உளதென்று அறியப்படுகின்றது. ஒரு பொழுதும், எக்காலத்தும், சங்கல்பமும் மனமும் பிரிவதில்லை.

'*ஸங்கல்பனம் மனோ வித்தி ஸங்கல்ப ஸ்தத்ர வித்யதே | யத்ர ஸங்கல்பனம் தத்ர மனோ அஸ்தீத்யவ கம்யதாம் | ஸங்கல்ப மனஸீ பின்னே ந கதாசன கேநசித்* |' என்கின்றது *மஹோபநிஷத்து*..

ஒரு உதாரணத்தைக் காண்போம்.

மன்னர்கள், **'வாள்'** கொண்டு போரிட்டார்கள் என்று அறியும் முன் நம் மனம் '**வாள்'** என்ற வஸ்து குறித்து நிர்விகல்பமாக இருந்தது.

வாள் குறித்து கற்றோ, கேட்டோ அறிந்தது மனதின் முதல் சங்கல்பத்திற்கு ஆதாரமாகின்றது. வாளை நேரில் காண்பது, கண்டறிதல் கேட்டறிதலை விட துல்லியமானதால், முதல் சங்கல்பம் புதுப்பிக்கப்படுவதற்கு ஆதாரமாகின்றது.

வாளைக் கையாள்வது, கையாளுதல் கண்டோ? கேட்டோ? அறிதலின் துல்லியமானதால், அந்தச் சங்கல்பமும் புதுப்பிக்கப்படுவதற்கு ஆதாரமாகின்றது.

வாளொன்றை நம்முடனேயே வைத்திருந்து, நாமே போட்டிகளிலோ, யுத்தங்களிலோ கலந்து கொண்டு, வெற்றி தோல்விகளை அனுபவித்தல், தாக்குதலுக்காகவோ, தற்காப்பு க்காகவோ வாளைச் சார்ந்திருத்தல் ஆகியன விளைக்கும் உணர்வுகளையும் ஆராய்வோம்.

வெற்றியால் சுகமும், தோல்வியால் துக்கமும், தாக்குதலால் வீரமும், தற்காப்பால் பாதுகாப்புணர்வும் போன்ற உணர்வுகள், மேலும் புதிய சங்கல்பங்களை உருவாக்கு கின்றன.

அவை அறிவுமயமாக மட்டுமன்றி, உணர்வுமயமாகவும் இருக்கின்றன.

ஆக, ஒரு விஷயத்தையோ, அனுபவத்தையோ, அது எத்தன்மையானது என்று எழும்பும் (எண்ணமயமான) வினாக்களும், அவற்றுக்கான விடைகளுமாக மனதுக்கு ஒரு இருப்பு வருகின்றது.

இவை அறிவுமயமான அல்லது உணர்வுமயமான எண்ணங்கள். உணர்வுகளைப் பற்றிப் பின்னர் விரிவாக ஆராயலாம்.

இப்போதைக்கு, எண்ணங்களுக்கு, அறிவு அல்லது ஞானமும், உணர்வுகளுமே ஆதாரம் என்பதை அறிவோம்.

ஆக மனது, ஞான இந்திரியங்களுக்கு ஆதாரமாகவும், பிராணனின் சில செயல்களின் விளைவுகளுக்கு ஆதார மாகவும், கர்ம இந்திரியங்களின் செயல்களுக்கு ஆதாரமாகவும் தூண்டுதலாகவும் இருக்கின்றது.

ஒவ்வொரு விஷயத்தின், அனுபவத்தின் தன்மை களைக் குறித்து 'இத்தன்மையதா, அத்தன்மையதா' என வினா வெழுப்பி, விவாதித்தவாறே இருப்பதும் மனதின் செயல் பாடுகளில் ஒன்றாகின்றது.

இவ்வாறு தொடர்ந்து எழும் எண்ணங்களெல்லாம், மனதின் மற்றோரு பரிமாணமான '**அஹமர்த்தம்**' என்ற எண்ணத் தொகுப்பை ஆதாரமாகக்கொண்டே விளைகின்றன.

நான் இன்னார் என்ற உணர்வு **"அஹந்தை"** அல்லது **"அகங்காரம்"** எனப்படுகின்றது. இது என்னுடையது என்ற உணர்வு **"மமதை"** எனப்படுகின்றது.

இந்த இரண்டு கற்பனைகளும் விளைவது மனதிலேயே. இந்த இரண்டு எண்ணங்களே, மற்ற எல்லா எண்ணங்களுக்கும் ஆதாரமாக இருக்கின்றன.

'***அஹம் கர்த்தா அஹங்காரா:***' என்றது *தத்வ போதம்*.

நான் காரியமாற்றுபவனாக இருக்கின்றேன் என்னும் எண்ணமே அஹமர்த்தம் என்பது பொருள்.

அந்தக்கரணங்களில், **'நான்'** என்ற ஸ்புரணம் (அகந்தை), அது சார்ந்தெழும் **'எனது'** உள்ளிட்ட விருத்திகளைத் தொகுத்து '***அஹம் ப்ரத்யாய***' அல்லது '***அஹமர்த்த:***' என்று அழைக்கலாம்.

வேதாந்த நூல்களில் பரவலாக அஹங்காரம் என்ற வார்த்தையையே உபயோகிப்பதைக் காணலாம்.

('அஹங்காரம்' என்ற பதம் '**அஹமர்த்தம்**' மற்றும் சித்–ஆபாஸம் ஆகியனவற்றின் தொகுப்பையே குறிப்பது பின்னர் விளங்கும்.)

நாம் **'அஹமர்த்தம்'** என்னும் வார்த்தையையே உபயோகிப்போம்.

## தன்னை அறியும் தத்துவங்கள்

கூர்ந்து கவனித்தால், நமக்கு, எந்நேரமும், நாம் இன்னார் என்ற எண்ணம் இருந்தவாறே இருப்பதை அறியலாம். நாம் மேற்கொள்ளும் ஆய்வில், மேலும் பல தத்துவங்களை அறிந்த பின் இது எளிதாய் விளங்கும். நான் கண்ணன், நான் குமரன் என்று ஒரு பெயருடன் மட்டும் நம்மை இணைத்துக் கொள்வதில்லை.

நான் அழகன், நான் சிறந்தவன், நான் மேலானவன், நான் அறிவாளி போன்ற பல பண்புகளையும் சேர்த்து, நமக்கு நாமே ஒரு நாம ரூபத் தொகுப்பை உருவகப்படுத்திக் கொள்கின்றோம்.

அந்த நாம, ரூப, குண, திறன் தொகுப்பே நாம் என்று நம்புகின்றோம். இவ்வாறு, நான் இன்னார் (ஏதோவொரு நாம ரூபத் தொகுப்பு), நான் இன்ன மாதிரியானவன் (ஏதோவொரு குண திறன் தொகுப்பு) என்ற எண்ணங்கள், நாம் விழித்தவுடன், நம்மோடு எழுகின்றது. நாம் விழித்திருக்கும் போதெல்லாம் அந்த எண்ணங்களை ஆதாரமாகக் கொண்டே மற்ற எண்ணங்கள் உருவாகின்றன.

நமக்கு நாமே ஒரு உருவகம் தந்து கொள்வது மட்டுமின்றி, நாம் நம்மைச் சுற்றி உள்ள பலவற்றுடன் ஒரு தொடர்பை, பந்தத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டே,

எண்ணங்களை வளர்க்கின்றோம். நம் நாடு, நம் மொழி, நம் இனம், நம் ஊர், நம் வீடு, நம் குடும்பம் என்றும், என் மனைவி, என் குழந்தை, என் தொழில், என் பெற்றோர் என்றும் நம்மை ஆதாரமாகக் கொண்டே எல்லாவற்றையும் அணுகுகின்றோம்.

நம் வீடு என்பது குறியீடு தானே என்னும் கேள்வி எழுகின்றதா?

மேலும் ஆய்வில் '**நான்**' என்றும், '**எனது**' என்றும் நாம் குறிப்பிடுவனவற்றின் உண்மை இயல்பு விளங்கும். '**நான் இன்னார்**' என்ற எண்ணமும், '**இது என்னுடையது**' என்ற எண்ணமும், நம்மில் எந்த நேரமும் விளங்குகின்றது என்பதை ஏற்று மேற்செல்வோம்.

ஆராய்ந்தால், '**நான் இன்னார்**' என்ற எண்ணமான அகந்தையே, '**இது என்னுடையது**' என்ற எண்ணமான மமதைக்கு மூலமாக விளங்குகின்றது.

அதுவே '**இதை நான் செய்கின்றேன்**' என்ற எண்ணத்திற்கும் மூலமாகின்றது.

'**நான்**' என நமக்கு ஒரு (நாம, ரூப, குண, திறன் சேர்ந்த) இருப்பு இருப்பதான கற்பனையே, சுற்றிலும்

உள்ளனவற்றுடன் நம்மைத் தொடர்புபடுத்தி, **'இது என்னுடையது'** என்ற கற்பனையை விளைக்கின்றது.

அந்தக் கற்பனையே, நம்மைச் சுற்றிலும் நிகழும் செயல்களில் நம்மை இணைத்துக் கொண்டு, **'நான் இந்தச் செயல் புரிகின்றேன்'** என்ற கற்பனையை விளைக்கின்றது.

அந்தக் கற்பனையின் வ்ருத்தியே, இந்தச் செயலின் விளைவால், **'நான் சுகமடைகின்றேன்'** அல்லது **'நான் துக்கப்படுகின்றேன்'** என்ற கற்பனைகளை விளைக்கின்றது.

இவை யாவும் வெறும் எண்ணங்களே. நாம் 'எனக்கு ஒரு இருப்பு உண்டு' என்று, நம் மனதோடு நம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளும் போது, நான் இந்தச் செயலை செய்கின்றேன் என்று பாவித்துக் கொள்கின்றோம்.

அதனால், *'நான் இன்பத்தை (அல்லது துன்பத்தை) அனுபவிக்கின்றேன்'* என்றும் பாவனை செய்துக் கொள் கின்றோம்.

**'நான்'** இல்லையேல், **'எனது'** இல்லை. நான் (இன்னாராக, இக்குணங்களுடன், இத்திறன்களுடன்) இருக்கின்றேன் என்ற கற்பனை முதலில் விளைகின்றது.

அது, நமக்கு புறத்தில் உள்ள ஒரு பொருளைக் கண்டவுடன் (அல்லது பொருளைப் பற்றி நினைத்தவுடன்), அந்தப் பொருளில் பரவி வியாபிக்கின்றது.

அந்த வியாபகத்தின் பிரதிபலிப்பே, விளைவே, 'இது என்னுடையது / இது என்னுடையதல்ல' என்னும் கற்பனை.

நம் இந்திரியங்கள் மீதும், நம் உடல் மீதும், **'இதுவே நான்'** அல்லது **'இவை என்னுடையவை'** என்ற அபிமானமாக விளையும் மூல எண்ணமே அஹமர்த்தம்.

இதன் ஆதாரத்தில் விளையும் அபிமானங்களே, *'நான் (இவற்றால்) செயல் புரிபவன்', 'நான் (இவற்றால்) அனுபவிப்பவன்'* ஆகிய எண்ணங்கள்.

**'நான் கர்த்தா (**காரியமாற்றுபவன்)**',**

'நான் போக்தா (அனுபவிப்பவன்)' என்று பொருள்பட, 'கர்த்தா போக்தாபிமான்யயம்' என்றது *விவேக சூடாமணி.*

இந்த அஹமர்த்தமே, நான் விழித்திருப்பவன், நான் கனவு காண்பவன் என்று கருதிக் கொள்கின்றது. ஆழ்ந்து உறங்கும் போது, அஹமர்த்தம் ஓய்ந்து, செயலிழந்து விடுகிறது.

விழித்தவுடன், நான் இதுவரை உறங்கிக் கொண்டு இருந்தேன் என கருதிக் கொள்வதும் இந்த அஹமர்த்தமே.

ஒரே அஹமர்த்தத்திற்கு, மூன்று நிலைகளிலும் ஒரே தன்மையுடன் ஆன இருப்பு இருக்கின்றதா? அவ்வாறு இல்லை.

பஞ்சபூதங்களுக்கு, மூன்றுவிதமான குணங்கள் இருப்பதாக முன்னர் பார்த்தோம்.

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களே அவை. (இவை குறித்துப் பின்னர் இன்னும் விரிவாய்ப் பார்க்கலாம்.)

சுத்த நிலையில் உள்ள பஞ்ச பூதங்களால், தன்மாத்திரைகளால், ஆனதே அஹமர்த்தம் என்பதையும் அறிவோம். நாம் விழிப்பு நிலையில் இருக்கும்போது, அஹமர்த்தத்தில் ரஜோகுணம் மேலோங்கி இருக்கிறது.

நாம் கனவுநிலையில் இருக்கும்போது, அஹமர்த்தத்தில் ஸத்வ குணம் மேலோங்கி இருக்கிறது. நாம் ஆழ்ந்த உறக்கத்தில், ஸுஷுப்தியில் இருக்கும்போது, அஹமர்த்தத்தில் தமோகுணம் மேலோங்கி இருக்கிறது.

இதையே, *விவேக சூடாமணி, 'ஸத்வாதி - குண - யோகேன சாவஸ்தா - த்ரய - மச்னுதே ||'* என உரைக்கிறது.

அஹமர்த்தத்தின் இரு இயல்புகள் கர்த்ருத்வமும், போக்யமும். இது நான், இவை என்னுடையவை, இதை நான் செய்கிறேன் எனக் கருதும் இயல்பு கர்த்ருத்வம்.

அதாவது இந்த உடலுக்கு, இந்திரியங்களுக்கு, செயல்களுக்கு, நான் சொந்தக்காரன் என்ற எண்ணம். செயல்களுக்கு நான் அதிகாரி என்ற ஆதாரத்தில், செயல்களால் விளையும் சுக துக்கங்களுக்கு நான் உரிமையாளன் என்றும் கருதுகிறது.

சுகங்களையும், துக்கங்களையும் தானே அனுபவிப் பதாகக் கருதுகிறது. இது போக்யம். ஆக, நம் அஹமர்த்தத்தின் விளைவாகவே, நாம் சுக துக்கங்களை அனுபவிப்பதாகக் கருதுகிறோம்.

விஷயங்கள் நமக்கு அனுகூலமாக, பிரியமானதாக இருப்பின், நாம் சுகம் அனுபவிப்பதாகக் கருதுகிறோம்.

விஷயங்கள் நமக்கு பிரதிகூலமாக, பிரியமற்றதாக இருப்பின், நாம் துக்கம் அனுபவிப்பதாகக் கருதுகிறோம்.

அஹமர்த்தத்தின் இயல்பாலேயே நாம் சுக துக்கங்களை அனுபவிப்பதாக உணர்கிறோம்.

இதை *விவேக சூடாமணி*யும், '*விஷயாணா - மானுகூல்யே ஸுகீ து:க்கீ விபர்யயே | ஸுகம் து:க்கஞ்ச தத்தர்ம:*' என விளக்குகிறது.

சுக துக்கங்களுடன் நம்மை தொடர்பு படுத்திக் கொள்வது **'பந்தம்'** ஆகும்.

அவ்வகையான பந்தங்களில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்வது **'மோக்ஷம்'** ஆகும்.

அஹந்தையும், மமதையும் நீங்குதல் மோக்ஷம் என்னும் பொருள்பட, '*யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்*' என்றார் திருவள்ளுவ நாயனார்.

தான் இருப்பதாக, தனக்கு ஒரு இருப்பை கற்பனை செய்து கொண்டு, தனக்கு நாம ரூப குண திறன்களை வரையறுத்துக் கொள்வது, தன்னைச் சுற்றி உள்ள எல்லாவற்றுக்கும், நாம பேதங்கள், ரூப பேதங்கள், குண பேதங்கள், திறன் பேதங்களை உரித்தாக்கி பகுப்பது, காலம்,

செயல், சம்பந்தம் ஆகியனவற்றை கற்பிப்பது என்னும் யாவும் மனதின் செயல்களே.

மனம் அழியும் போது, மற்ற எல்லாம் அழிகின்றன. மனம் எழும்போது, மற்ற எல்லாம் எழுகின்றன என்றார் ஆதிசங்கரர்.

'*தஸ்மின்விநஷ்டே ஸகலம் விநஷ்டம் விஜ்ரும்பிதே அஸ்மின் ஸகலம் விஜ்ரும்பிதே*' என்கின்றது *விவேக சூடாமணி* .

இம்மாதிரியான மனதின் ப்ரவ்ருத்திகளின் தொகுப்பே மனோமய கோசம் ஆகும்.

கண், காது, சருமம், நாக்கு, மூக்கு ஆகிய ஞான இந்திரியங்கள் ஐந்தும், அவற்றில் வியாபித்து இயங்கும், இயக்கும், மனதும், மனோமய கோசம் எனப்படுகின்றது.

இது நான், இது என்னுடையது, என்ற எண்ணம் வருவதாலேயே, விஷயங்களுக்கு பெயர், உருவம், குணங்கள், திறன்கள் ஆகியன கற்பிக்கப்படுகின்றன.

இதனாலேயே, ஒரு விஷயத்திற்கும், மற்றொரு விஷயத்திற்கும் உள்ள வேறுபாடும் கற்பிதமாகின்றது. இந்த மனோமய கோசம் மிகவும் வலிமையானது. நாம, ரூப, குணங்களைத் தோற்றுவிப்பது. பிராணமய கோசத்தில் முழுமையாக நிரம்பி விரிந்து நிற்கின்றது.

இவ்வாறு பொருள்பட, *விவேக சூடாமணி,*

'*ஜ்ஞானேந்த்ரியாணி ச மனச்ச மனோமய: ஸ்யாத கோசோ மமாஹமிதி வஸ்து விகல்பகேது: | ஸம்ஜ்ஞாதி பேத கலனோகலிதோ பலீயாம் ஸ்தத்பூர்வகோச மபிபூர்ய விஜ்ரும்பதே ய: ||*' என்று உரைத்தது.

நம் கையில் பலஹீனம் ஏற்படும்போது, நாம் நம்மை உடலாக பாவித்து, **'என் வலது கை செயலிழந்துவிட்டது'** என்று கூறுகிறோம்.

என் கை, என் தலை, என் கால்கள் என்று நம்மை நம் உடலாக பாவித்துப் பேசுவதைப் போல, பல நேரங்களில் நாம் நம்மை, நம் மனமாக பாவித்தும் பேசுகின்றோம். செயல் படுகின்றோம்.

நம்மை மனதோடு சம்பந்தப்படுத்திக் கொள்கின்றோமா?

நாம் மனமே என்று பாவித்துக் கொள்கின்றோமா?

நாம் **'என் கை'** என்று சொல்லும்போது, நம் உடலின் இயல்புகளே நம் மொத்தப் பண்புகள் என்பது போலப் பேசுகின்றோம். அதேபோல, நம்மை மனமாக பாவனை செய்து கொள்ளும் போது, நம் மனதின் இயல்புகளே, நம் மொத்தப் பண்புகள் என பாவித்துக் கொள்கின்றோம்.

அப்போது மனதின் விகாரங்களை, நாம் அனுபவிப்பதாகவும் பாவனை செய்து கொள்கின்றோம்.

சுகம், துக்கம், மோகம், இச்சை, காமம், குரோதம், விறுப்பு (இராகம்), வெறுப்பு (துவேஷம்) போன்ற உணர்வுகளையே மனதின் விகாரங்கள் என்றோம்.

நாம் சுகப்படுவதாகவோ, துக்கப்படுவதாகவோ உணர்தல் (எண்ணுதல்), மனோமய கோசத்தினால் தான்.

நான் உயர்ந்தவன் (அல்லது தாழ்ந்தவன்) என்ற எண்ணங்களும் அவ்வாறே. மனதின் சில இயல்புகளைப் பார்த்தோம்.

மேலும் சில ஆதார தத்துவங்களைக் கண்டபின் மீண்டும் தொடர்ந்து ஆராய்வோம்.

**புத்தி!**

மனம் ஒரு நிலையில் இல்லாமல், எப்பொழுதும் சஞ்சலப்படும் இயல்பை உடையது. புலன்கள்வழி உள்வாங்கப்படும் விஷயத்தை பரிசீலித்து, விசாரித்து அதன் இயல்புகள் குறித்து சந்தேகம் எழுப்புவது அதன் தொழில். எழும் ஒவ்வொரு புதிய எண்ணங்களின் ஒவ்வொரு பரிமாணத்தையும் கூட இவ்வாறே, பரிசீலித்து, விசாரித்து, அதன் இயல்புகளை சந்தேகிப்பதும் மனமே.

இது கருப்பா பச்சையா, இது உண்மையா பொய்யா, இதைச் செய்யலாமா கூடாதா, இது தர்மமா, அதர்மமா என, மனதின் சந்தேகங்களுக்கு எல்லையே இல்லை.

மனதின் இயல்பு சந்தேகம் என்றால், புத்தியின் இயல்பு நிச்சயம் அல்லது தீர்மானம் ஆகும்.

'***நிஸ்சயாத்மிகா புத்தி*** என்றது *தத்வ போதம்*.

பால் அருந்துகின்றோம் என்று வைத்துக் கொள்வோம். நான் இருக்கின்றேன், நான் இந்தப் பாலை அருந்துகிறேன் என்ற கற்பனை அஹமர்த்தம். பாலை கையாண்டு உடலுக்கு ஊட்டியது கர்மேந்திரியமான கை(கள்).

பாலை ருசித்து, ரஸத்தை உள்வாங்கியது ஞானேந்திரியமான நாக்கு. பாலின் சுவையை, நாம் முன்னரே அறிந்த சுவைகளுடன் ஒப்பிட ஆதாரமாக நினைவுகளை தன்னகத்தே கொண்டது சித்தம்.

பாலை அருந்தத் தூண்டியதும், கையின் செயல்களுக்கு ஆதாரமாக இருந்ததும், நாக்கு உள்வாங்கிய ரஸத்தை ஆதாரமாக இருந்து கிரஹித்து விசாரித்ததும் மனமே.

பாலை அருந்தலாம் என்ற முடிவெடுத்ததும், பாற்சுவையின் தரமுரைத்ததும் புத்தி. பால் அருந்துவது நமக்குச் சுகமாக (அல்லது துக்கமாக) இருந்ததா என விசாரித்தது மனம். அது சுக அனுபவமா, துக்க அனுபவமா என நிச்சயப்படுத்தியது புத்தி.

ஆக, நிச்சயமற்ற நிலையில் விசாரித்தவாறே இருப்பது மனம். நிச்சயிக்கின்றது புத்தி. நிச்சயிக்க உதவுகின்றன

சித்தத்தின் பதிவுகள்; மூன்று நிலைகளிலும், '**நான்**' என்னும் ஆதாரமாக இருப்பது அஹமர்த்தம்.

தத்வ போதம், மனதிற்கு தேவதையாக சந்திரனையும், அஹங்காரத்திற்கு தேவதையாக உருத்திரனையும், சித்தத்திற்கு தேவதையாக வாஸுதேவனையும், புத்திக்கு தேவதையாக ப்ரஹ்மாவையும் குறிப்பிடுகின்றது.

பதஞ்சலி முனிவர் அருளிய யோக சூத்திரம், தன் சமாதி பாதத்தில், மனதை காற்றின் அம்சமாகவும், புத்தியை நெருப்பின் அம்சமாகவும், சித்தத்தை நீரின் அம்சமாகவும், அஹங்காரத்தை ப்ருதிவியின் அம்சமாகவும் குறிப்பிடுகின்றது. (ஆகாசத்தின் அம்சம் எதுவோ?) நாம் மீண்டும் புத்தியை சற்றே ஆராயலாம்.

மனதில் எழும் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பது '**புத்தி**' என்றோம். இங்கு குறிப்பிடும் சந்தேகம், நம்பிக்கை யின்மை அல்ல, நிச்சயமின்மை.

இது நீலமா, கருப்பா என்று ஒரு பொருளின் நிறம் குறித்து வருவதைப் போன்ற, நிச்சயமற்ற நிலை.

நாம் உணரும் ஒவ்வொரு விஷயமும், புலன்களால் உள்வாங்கப்பட்டு, சித்தத்தின் பதிவுகளுடன் ஒப்புநோக்கப்பட்டு, மனதால் ஆராயப்பட்டு, புத்தியால் நிச்சயிக்கப்படுகின்றது.

இவை யாவும், பல நேரங்களில், கண நேரத்தில் நடந்து விடுவதால், நாம் படிப்படியாகப் புரிந்து கொள்வதில்லை. மேலும், இது நாள் வரை, நமக்கு, புலன்கள், சித்தம், மனது, புத்தி மற்றும் அஹமர்த்தம் ஆகியன என்னவென்றோ, அவற்றின் தனித்தனி இயல்புகள் யாவையென்றோ தெரியாது.

பலர், தம்முள் எந்த நேரமும் பல்வேறு எண்ணங்கள் தொடர்ந்து எழுந்தவாறே இருக்கின்றன என்பதையும் கூட கவனிப்பதில்லை.

மனதில் எண்ணங்களாக எழும் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பது **புத்தி** என்றோம். நம் மனது ஏதோவொரு எண்ணத்திலேயே (இசை போன்ற புலன் அனுபவங்களிலோ, கோபம் போன்ற உணர்வுகளிலோ) லயித்துவிடும் போது, நம் புத்திக்கு சுவாதீனம் இருப்பதில்லை.

மனதில் எண்ணங்கள் எழாத போது, புத்தி தீர்த்து வைக்க சந்தேகங்கள் இருப்பதில்லையோ. அது மட்டுமல்ல, புலன்களின் செயல்பாட்டிற்கு மனம் ஆதாரமாக இருப்பதைப்

போல, புத்தியின் செயல்பாட்டிற்கும் மனம் ஆதாரமாக விளங்குகின்றதா? இது உண்மை போலவே தெரியும் தர்க்கம். உண்மையா என்பதை நாம் ஆய்வில் அறியலாம்.

விஷய அனுபவங்கள் காரணமாகவும், உணர்வுகள் காரணமாகவும், மனதில் எண்ண அலைகள் தோன்றுகின்றன. மனதில் தோன்றும் ஆசைகளே, புலன்கள் வழி, செயல்களாக உருவெடுக்கின்றன. ஆனால், மனதில் தோன்றும் எல்லா ஆசைகளும் செயலாக்கம் பெறுகின்றனவா?

இல்லை.

எந்த ஆசைகள் சுக அனுபவத்தைக் கொடுப்பவை, எந்த ஆசைகள் துக்க அனுபவத்தைக் கொடுப்பவை என நிர்ணயித்து, எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யாது தள்ளலாம் என்று நம் மனதுக்கு உரைப்பது நம் புத்தியே.

பல நேரங்களில், புத்தியின் முடிவை மனம் ஏற்று வழிநடப்பதில்லை. தன் ஆசை தனக்குத் துக்கத்தையே தரலாம் என்பதை அறிந்தும், மனம் புலன்கள்வழி காரியங்களை நிகழ்த்துகின்றது.

ஒரு நீரிழிவு நோயாளி, இனிப்பைத் தள்ள வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்தியதும், அதை அவருடைய சித்தம் பதிந்து கொள்கின்றது. அவருடைய மனம், இனிப்பை உண்ணலாமா என்னும் வினாவை முன் வைக்கும் போதெல்லாம், அவருடைய புத்தி, இனிப்பு உடலுக்கு தீங்கு விளைக்கும் என்றே நிர்ணயிக்கும்.

புத்தி மனதைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால், அவருக்கு இனிப்பு சாப்பிட வேண்டும் என்ற எண்ணமே மீண்டும் உதிக்கக் கூடாதே?

ஆனால் யதார்த்தத்தில், இனிப்பு சாப்பிட வேண்டும் என்ற ஆசை அவரை அலைக்கழிக்கின்றது. சில நேரங்களில், ஆசையை அடக்க முடியாமல், புத்தியை மீறி, இனிப்பைச் சுவைக்கவும் செய்கின்றார்.

ஆக, புத்தியின் நிர்ணயம், விருப்பு வெறுப்பற்ற, வழிகாட்டல் மட்டுமே. ஒவ்வொரு ஆசையையும், (சித்தத்தி லிருக்கும் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு) இது சுக அனுபவம் தருமா, இது துக்க அனுபவம் தருமா? என்று ஆராய்ந்து வழிகாட்டுவது மட்டுமே புத்தியின் செயல்.

மனமானது புத்தியின் முடிவை ஏற்று, ஒரு காரியத்தை செய்வதும் நிகழ்கின்றது. புத்தியின் முடிவைப் புறந்தள்ளி, ஒரு காரியத்தை செய்வதும் நிகழ்கின்றது.

(எந்தெந்த சுக துக்கங்களை அடையும் பொருட்டு) எந்தெந்தச் செயல்களைச் செய்யலாம் என்று நிர்ணயித்து வழிகாட்டுவது, இந்த மனம், புத்தி, சித்தம் அடங்கிய தொகுப்பே.

அதே போல், '**இது சுகம்**' என்றும், '**இது துக்கம்**' என்றும் நாம் இவற்றினாலேயே அறிந்து கொள்கின்றோம்.

*(மீண்டும் ஒருமுறை தெளிவு படுத்திக் கொள்ளுவோம். உடலில் வலி ஏற்பட்டாலும் கூட, மனமே அதன் துக்கத்தை அனுபவிக்கின்றது. உடல் கருவியாக மட்டுமே விளங்கு கின்றது).*

இந்திரியங்கள் நேரடியாக விஷயங்களுடன் சம்பந்தப்பட்டு செயல்களில் ஈடுபட்டாலும், நாம் உணர்வது அல்லது அனுபவிப்பது மனம், புத்தி, அஹங்காரத் தொகுப் பிலேயே. இவையே நாம் விஷயங்களை அனுபவிக்க உதவுகின்றன.

நம் பிரதிபிம்பமாக, நம் ரூபமாகவே நம்மால் கருதப் படுகின்றன. அல்லது நாம், பல நேரங்களில், நம்மை இவற்றின் பிரதிபிம்பமாக, இவற்றின் ரூபமாகக் கருதிக் கொள்கின்றோம்.

ஞானேந்திரியங்கள் வழியான மனதின் வ்ருத்தி, மனோமய கோசம் என்று அழைக்கப்பட்டாற் போல், ஞானேந்திரியங்கள் வழியான புத்தியின் வ்ருத்தி, விஞ்ஞானமய கோசம் என்று அழைக்கப்படுகின்றது.

வாசனைகள், என்பது நாம் அனுபவிக்க வேண்டிய சுக துக்கங்களுக்கான கணக்குப் புத்தகப் பதிவுகளாக நம்முள் தங்கியுள்ளன. நாம் சுகமோ துக்கமோ அடைவதற்கு என்ன காரியங்கள் நிகழ வேண்டுமோ, அவ்வகையான காரியங்கள் குறித்த எண்ணங்கள் நம் மனதில் ஆசைகளாக விளை கின்றன.

புத்தி, இந்த எண்ணங்களில் எவை சுகம், எவை துக்கம், எவை தர்மம், எவை அதர்மம், எவை சாத்தியம், எவை அசாத்தியம், போன்ற தீர்மானமான முடிவுகளை அறிவிக் கின்றது.

இந்த முடிவுகளில், மனம் எதை விழைகின்றதோ, அந்த முடிவை குறித்த கட்டளைகளை, புத்தியே இந்திரியங்களுக்கு ஆணையிடுகின்றது.

நிகழ்ச்சிகள் நிறைவேறியதும், இந்தக் காரியத்தினால் நாம் அடைந்தது சுகம் அல்லது துக்கம் எனவும் புத்தியே அறிவிக்கின்றது. மனம் இந்த முடிவுகளை ஏற்று, சுகமோ, துக்கமோ படுகின்றது.

இவ்வாறான புத்தி மற்றும் ஐந்து ஞானேந் திரியங்களின் ஒருங்கிணைந்த வ்ருத்தியே விஞ்ஞானமய கோசம் எனும் பொருளில் *தத்வ போதம்*, '*புத்திஞானேந்த்ரிய பஞ்சகம் மிலித்வா யோ பவதி ஸ விஜ்ஞானமய: கோச:*' என்கின்றது.

நாம், நம்மை அறிவிற் சிறந்தவர்களாகவோ, சாதுர்யம் உள்ளவர்களாகவோ, சாமார்த்திய சாலிகளாகவோ, காரியங் களுக்கு கர்த்தாவாகவோ, பாண்டித்யம் உள்ளவர் களாகவோ, பக்தியுள்ளவர்களாகவோ, இவற்றில் எதற்கேனும் எதிர்மறை யாகவோ கருதுகின்றோம்.

இவைகள்யாவும், விஞ்ஞானமய கோசத்தின் தர்மங்கள்.

## தன்னை அறியும் தத்துவங்கள்

*விவேகசூடாமணி* என்னும் தன் பிரகரணத்தில், ஆதிசங்கரர், மனம், சித்தம், புத்தி, அஹமர்த்தம், இவை நான்கையும் ஒருங்கே பின்வருமாறு தொகுத்துரைக்கின்றார்.

தான் ஆற்றும் செயலுக்குத் தகுந்தவாறு, ஒரே அகக்கருவி, மனம் என்றும், புத்தி என்றும், சித்தம் என்றும், அஹமர்த்தம் என்றும் வேறு வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

ஒரு பொருள், இத்தன்மையுடையதா அல்லது வேறு தன்மையுடையதா என சந்தேகிக்கும் போது, அந்த உட்கருவியை **'மனம்'** என்று அழைக்கிறோம்.

அந்தப் பொருள், இந்தத் தன்மையுடையது தான் என்று நிச்சயிக்கும் போது, அந்த உட்கருவியை **'புத்தி'** என்று அழைக்கிறோம்.

அதே உட்கருவி, இந்த உடல் உள்ளிட்ட எதிலும், நான் என்றோ, என்னுடையது என்றோ அபிமானம் வைக்கும் போது, அந்த உட்கருவியை **'அஹமர்த்தம்'** அல்லது **'அஹங்காரம்'** என்று அழைக்கிறோம்.

நாம் பிரியப்பட்ட பொருளை, தொடர்ந்து சிந்தித்து, நினைவில் இருத்தும் போது, அந்த உட்கருவியை '**சித்தம்**' என்று அழைக்கிறோம்.

'*நிகத்யதே அந்த:கரணம் மனோதீ - ரஹங்க்ருதிச் - சித்தமிதி ஸ்வவ்ருத்திபி: | மனஸ்து ஸங்கல்ப - விகல்பனாதிபிர் - புத்தி: பதார்த்தாத்யவஸாய - தர்மத: || அத்ராபிமானா - தஹமித்யஹங்க்ருதி: | ஸ்வார்த்தானுஸந்தானகுணேன சித்தம் ||*'.

புலன்களை விட, புலன்களுக்கு ஆதாரமான சூக்ஷும பூதங்கள், வலிமை வாய்ந்தவை. இந்த சூக்ஷும பூதங்களை விட, மனம் வலிமை வாய்ந்தது. மனதைவிட புத்தி வலிமை வாய்ந்தது என்கின்றது *கட உபநிஷத்து*.

'*இந்த்ரியேப்ய: பராஹ்யர்த்தா: அர்த்தேப்யச்ச பரம் மன: | மனஸஸ்து பரா புத்தி:*'

புலன்கள், விஷயங்களால் ஈர்க்கப்படுவதால், விஷயங்கள், புலன்களைவிட வலியனவாம். புலன்கள் விஷயங்களை அறிவதற்கு மனமே ஆதாரமாக இருப்பதால், மனம், விஷயங்களை விட வலியதாம்.

மனம், தன்னால் நிச்சயிக்க முடியாத எல்லா விஷயங்களையும், புத்தியைச் சார்ந்தே நிர்ணயம் செய்வதால், புத்தி மனதை விட வலியதாம்.

(புத்தி மனதை விட வலியது என்றால், மனம் புத்திக்கு அடங்கியது என்றோ, மனம் புத்திக்குக் கட்டுப்பட்டது என்றோ அர்த்தமல்ல. மனம், புத்திக்கு கட்டுப்படாமல், புத்தியின் முடிவுகளைப் புறந்தள்ளி, தான் ஆசைப்பட்டதைச் செய்யும் என்று முன்பே கண்டோம்).

இதுவரை நாம் கண்டனவற்றைத் தொகுப்போமா?

எலும்பு, மஜ்ஜை, நரம்பு, சதை, இரத்தம், தோல் ஆகியனவற்றால் ஆன நம் பௌதீக உடல் **“அன்னமய கோசம்”** ஆகும்.

வாய், கைகள், கால்கள், எருவாய் மற்றும் கருவாய் ஆகிய ஐந்து செயற்கருவிகளும் **“கர்ம இந்திரியங்கள்”** ஆகும்.

பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் ஆகிய ஐந்து வாயுதத்துவங்களும் **“பஞ்ச பிராணன்கள்”** ஆகும்.

ஐந்து கர்ம இந்த்ரியங்களும், ஐந்து பிராணன்களும் சேர்ந்து **"பிராணமய கோசம்"** ஆகும்.

காது, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐந்து அறிவுக்கருவிகளும் "**ஞான இந்திரியங்கள்**" ஆகும்.

நான் என்னும் எண்ணம் **"அஹமர்த்தம்"** ஆகும்.

பதிவுகளின் தொகுப்பு **"சித்தம்"** ஆகும்.

நிச்சயமற்ற எண்ணங்கள் **"மனம்"** ஆகும்.

நிர்ணயம் **"புத்தி"** ஆகும்.

மனம், புத்தி, சித்தம், அஹமர்த்தம் ஆகிய நான்கு கூறுகளும் **"அந்தக்கரணங்கள்"** ஆகும்.

மனமும், ஞான இந்திரியங்களும் சேர்ந்து **"மனோமய கோசம்"** ஆகும்.

புத்தியும், ஞான இந்திரியங்களும் சேர்ந்து **"விஞ்ஞானமய கோசம்"** ஆகும்.

## ஸ்தூல, சூக்ஷ்ம தேகங்கள்!

கோசங்கள் நான்கைக் கண்டோம். கோசங்கள் அல்லது உறைகள் என்றதால், இவை ஐந்தும் நம்மை மூடியிருக்கின்றன என்றோ, இவை ஒன்றுக்குள் ஒன்றாக புதைந்திருக்கின்றன என்றோ பொருளல்ல.

நாம் நம்மை பௌதிக உடல் என்று கருதிக் கொள்ளும் காலத்தில் அன்னமய கோசமும், அவற்றின் இயக்கத்தில் பிராணமய கோசமும் நமக்கு உறையாகின்றன.

நாம் நம்மை மனதின் இயல்புகளோடு பொருத்திக் கொள்ளும் போது மனோமய கோசமும், புத்தியின் இயல்புகளோடு பொருத்திக் கொள்ளும் போது விஞ்ஞானமய கோசமும் நமக்கு உறையாகின்றன.

இந்தப் பாவனைகள் ஏதுமில்லாத நிலையில், நாம் ஆனந்தமய கோசமாகவே விளங்குகின்றோம் என்கின்றது *ஆத்ம போதம்*.

'***பஞ்சகோசாதியோகேன ததன்மய இவ ஸ்தித:***' என்னும் மூலத்திற்கு, நாம் பஞ்ச கோசங்களில்

ஒவ்வொன்றோடும் இயைபடையும் போது, அதன் மயமாக ஆகிவிடுகின்றோம் என்று பொருள்.

இவற்றை மேலும் ஆராயும்போது, விளங்கிக் கொள்வோம்.

யதார்த்தத்தில், நம் தேகம் அல்லது சரீரம், ஐந்து கோசங்களால் ஆனது என்பது வேதாந்தத்தின் ஒரு பார்வை.

(*விளக்கப்படாமல் விடுபட்ட ஆனந்தமய கோசம் பற்றி பின்னர் பார்க்கலாம்*).

நம் தேகத்தை வேறு வேறு இயல்புகளால் பகுத்து மூன்று (ஐந்து) சரீரங்களாகவும் விளக்குகின்றது வேதாந்தம்.

நம் பௌதீக தேகத்தை ஸ்தூல தேகம் என்று அழைத்தோம். திடத் தன்மையுடன் விளங்கும் நம் தேகம், ஸ்தூலமாக விளங்குவதால் அது ஸ்தூல சரீரம் எனப்படுவதையும் கண்டோம்.

ஸ்தூலமாக விளங்கும் இந்த தேகத்தில், சூக்ஷமமாக இதுவரை நாம் கண்ட தன்மைகள் அடங்கியுள்ளனவே.

அவைகள் தனியே ஒரு தேகமாய், உருவமற்ற நிலையில், சூக்ஷ்மமாக, நம் ஸ்தூல தேகத்தில் விளங்குகின்றனவா?

வேதாந்தம், அன்னமய கோசத்தை **“ஸ்தூல சரீரம்”** என்று குறிக்கின்றது.

பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் ஆகியனவற்றை ஒருங்கே **“சூக்ஷ்ம சரீரம்”** என்றும் குறிக்கின்றது.

பஞ்ச பூதங்கள், பஞ்சீகரணம் ஆன ஸ்தூல நிலையில் நம் ஸ்தூல தேகத்திற்கு மூலப்பொருட்களாகின்றன என்னும் பொருள்பட, *விவேக சூடாமணி, 'ப்ரஸ்பராம்சைர் - மிலிதானி பூத்வா ஸ்தூலானி ச ஸ்தூல - சரீர ஹேத்வ:'* என்றது கண்டோம்.

அதாவது நம் ஸ்தூல சரீரம், பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனதே.

நமக்கு, நாம் காணும் இந்த பௌதீக உடல் மட்டுமன்றி, இதனோடு இயைந்து கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய உடலும் இருக்கின்றது. அந்த நுண்ணிய அல்லது சூக்ஷ்மமான

உடல், பஞ்சீகரணம் செய்யப்படாத நிலையில் உள்ள பஞ்ச பூதங்களால் ஆனது என்று *விவேக சூடாமணி* உரைத்ததும் கண்டோம்.

'*நபோ நபஸ்வத்தஹனாம்பு - பூமய: சூக்ஷ்மாணி பூதானி பவந்தி* – என்றது மூலம்.

**'வாசனைகள்'** என்று அழைக்கப்படும் எண்ணப் பதிவுகளையும், அவற்றுக்கு ஆதாரமான கர்மங்களின் விளைவே நாம் பெற்ற இந்த சரீரம்.

இந்தக் கர்மங்களுக்கான பலன்களான சுக துக்கங்களை அனுபவிப்பதே, இந்தச் சரீரத்தின் காரணம்.

மேலும் கர்மங்களைச் செய்து, கர்மங்களைச் சேர்த்துக் கொள்வதே நம் இயல்பு.

இந்தக் கர்மங்கள் யாவுமே நம்முள், விதைகளாக, பீஜங்களாக, இன்னும் வ்ருத்தியாகாத அவ்யக்த நிலையில் சேர்ந்து கொள்கின்றன.

நாம் ஆய்வின் துவக்கத்தில் கண்ட '***ஸத்கர்ம ஜன்யம் சுக து:க்காதி போகாயதனம் சரீரம்***' என்ற *தத்வ போத* வாக்கியத்தை மீண்டும் பார்க்கலாம்.

முன் பிறவிகளில் செய்த நல்வினைகளின் பயனாக அடையப்படுவதே மனித வடிவம் தாங்கிய இந்த உடல்.

முந்தைய பிறவிகளில் செய்த பாவங்களின் பலனாக துக்கங்களையும், புண்ணியங்களின் பலனாக சுகங்களையும் அனுபவிக்கும் நிலைக்களனாக பயன்படுகின்றது எனவும், ***தத்வபோதம்*** சொல்வது இப்போது நமக்கு முழுவதும் விளங்கும்.

சூக்ஷம சரீரமும், நாம் முற்பிறவிகளில் செய்த புண்ணியங்களின் விளைவாகவே தோன்றுகின்றது.

புண்ணிய பாவ வாசனைகளால், நாம் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களை நுகர்வதற்கு கருவியாகத் தோன்றுகின்றது.

'***ஸத்கர்ம ஜன்யம் சுக து:க்காதி போகஸாதனம்***' என்றது *தத்வ போதம்*.

ஸ்தூல சரீரம் <u>களமாகவும்,</u> சூக்ஷும சரீரம் <u>கருவியாகவும்</u> குறிப்பிடப்படும் நுட்பத்தை கவனிக்கலாம்.

சூக்ஷும தேகத்தில் அவ்யக்தமாக விளங்கும் வாசனைகள் வியக்தமாவதாலேயே அனுபவங்கள் நிகழ்வ தால் அதைக் கருவி என்றது விளங்குகின்றது.

யதார்த்தத்தில் நம் ஸ்தூல தேகம் அனுபவங்களுக்கு உள்ளாவது போலவே, நமக்கு சூக்ஷும தேக அனுபவங்களும் விளைவது பின்னர் விளங்கும்.

ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன்கள் ஐந்து, மனது, புத்தி ஆகிய பதினேழு கலைகளுடன் (கதிர்களுடன்) கூடியிருக்கும் நுண்ணுடலே சூக்ஷும சரீரம் என்பதை, *தத்வ போதம்*,

'*பஞ்ச ஞானேந்த்ரியாணி பஞ்ச கர்மேந்த்ரியாணி பஞ்சப்ராணாதய: மனஸ்சைகம் புத்திஸ்சைகா ஏவம் ஸப்ததசா கலாபி: ஸஹ யத்திஷ்டதி தத் ஸூக்ஷ்ம சரீரம்*' என்கின்றது.

'*பஞ்சப்ராண மனோபுத்தி தசேந்த்ரிய ஸமன்விதம் | அபஞ்சீக்ருத பூதோத்தம் ஸூஷ்மாங்கம் போகஸாதனம் ||*' என்கின்றது *ஆத்ம போதம்*.

ஐந்து வகை பிராணன்கள், மனம், புத்தி, பத்து இந்திரியங்கள் ஆகியன ஒருங்கிணைந்ததும், பஞ்சீகரணம் செய்யப்படாத ஐந்து பூதங்களில் இருந்து தோன்றியதுமான இந்த சூக்ஷம சரீரம், நாம் அனுபவிப்பதற்கான, துய்ப்பதற்கான கருவியாகும் என்று பொருள்.

*தத்வ போதம், ஆத்ம போதம்* ஆகிய இரண்டு நூல்களிலுமே, ஆதிசங்கரர், ஸ்தூல சரீரத்தை போகாயதனம் (அனுபவிப்பதற்கான களம்) என்றும் சூக்ஷம சரீரத்தை போகஸாதனம் (அனுபவிப்பதற்கான கருவி) என்றும் குறிப்பிடுகின்றார்.

தனது *விவேக சூடாமணி* என்னும் நூலில் அவர் '*வாகாதி பஞ்ச ச்ரவனாதி பஞ்ச ப்ராணாதி பஞ்சா ப்ரமுகானி பஞ்ச | புத்த்யாத்யவித்யாபி ச காமகர்மணீ புர்யஷ்டகம் ஸூக்ஷம சரீரமாஹு: ||*' என்று எட்டு வேறு அங்கங்களாகப் பகுக்கின்றார்.

வாக்கு முதலான ஐந்து கர்ம இந்திரியங்கள், காது முதலான ஐந்து ஞான இந்திரியங்கள், பிராணன் முதலான ஐந்து பிராணன்கள், ஆகாசம் முதலான ஐந்து பூதங்கள், மனம் முதலான நான்கு அந்தக்கரணங்கள், அவித்யை எனப்படும் அறியாமை, இச்சை எனப்படும் விருப்பம், மற்றும், நம்

செயல்களாகிய கர்மம் ஆகிய எட்டும் சூக்ஷம சரீரத்தின் அங்கங்கள் என்பது பொருள்.

உடல் தன் வெளி உறுப்புகள் வழியாக, உடலுக்கு வெளியில் உணரும் விஷயங்களின் இயல்புகளை, உடலுக்குள் உள்ள ஸ்தூல, சூக்ஷம உறுப்புகள் வழி நமக்கு அறிவிக்கும் கூடாக இந்த நுண்ணுடல் விளங்குகின்றது.

'*ஸவாஸனம் கர்மபலானு பாவகம் ஸ்வாஜ்ஞானதோஸ் அனாதிருபாதிராத்மன:*' என்கின்றது *விவேக சூடாமணி*.

முற்பிறவியின் வாசனைகளுடன் தோன்றியது, நம் கர்மத்தின் பயனை அனுபவிக்கும் விதமாக நம்மைத் தூண்டுவது, தன்னை அறியாதது, அதனால், அதற்கு அதனுடன் எப்பொழுது தொடர்பு ஏற்பட்டதென்றே அறியாதது – என்று பொருள்.

'*ஸ்தூல தேகத்தை அனுபவங்களுக்கு ஆட்படுத்தும் கருவியாக இருக்கும் சூக்ஷம தேகம், ஸ்தூல தேக சம்பந்தம் இல்லாதபோது, தனக்கென்று இருப்பை அறிவதில்லை. அதனால், அது தன்னை அறிவதில்லை.*

ஸ்தூல தேக சம்பந்தம் ஏற்படும் போது மட்டுமே, அது காலம் இடம் ஆகிய பரிமாணங்களுக்கு உட்படுவதால், தன் உற்பத்தி அல்லது சிருஷ்டி அதற்கே தெரியாது.

ஸ்தூல தேக சம்பந்தம் ஏற்படும் பொழுதில், நாம், நம் கர்மத்தின் பலன்களை அனுபவிக்கும் விதமாக நம்மைத் தூண்டுகின்றது. தேகத்தை விட்டு உயிர் பிரியும் போது, சூக்ஷும சரீரம், வாசனைகளை விதை வடிவாகச் சுமந்து கொண்டு நீங்குகின்றது.

மீண்டும் பிறப்பெடுக்கும் போது, மற்றொரு ஸ்தூல சரீரத்தை அடைகின்றது' என்பதே நல்ல வாதமாகத் தோன்றுகின்றது.

மேலும் ஆய்வில் விளங்கினால் புரிந்து கொள்வோம்.

மனதில், எப்போதும் எண்ணங்கள் தோன்றியவாறே இருக்கின்றன. இந்த எண்ணங்கள் நம்மைச் செயல்படத் தூண்டுகின்றன. இந்த எண்ணங்கள், அடிப்படையில், முற்பிறவிகளில் நாம் செய்த கர்மங்களின் வாசனையால் உருவாகின்றன.

நாம், நம் முற்பிறவிகளில் செய்த பாவ புண்ணியங்களுக்கான பலனை அனுபவிக்க வேண்டுமே. அதற்கு வகை செய்யும் வண்ணமே எண்ணங்கள் உதிக்கின்றன.

அந்த எண்ணங்களில், இப்பிறவியில் நாம் தேடிக் கொண்ட அனுபவங்கள், வளர்த்துக் கொண்ட குணங்களின் பாதிப்பும் இருக்கும்.

ஆனாலும், பழைய வாசனைகளை அனுசரித்தே மனதில் எண்ணங்கள் தோன்றுகின்றன.

ஆக, நம்மை, புதிதாக காரியங்கள் செய்யத் தூண்டும் எண்ணங்களுக்கு ஆதாரமான வாசனைகளின் தொகுப்பு, நம் சூக்ஷம சரீரத்தில் தான் இருக்க வேண்டும்.

நாம் நம் சூக்ஷம சரீரத்தை எப்போதாவது உணர்கின்றோமா? ஆம், அது நம் சூக்ஷம நிலை என்று அறியாமல் உணர்கின்றோம்.

இதைப் புரிந்து கொள்ள, நாம் கனவு காணும் நிமிடங்களில் நம் அனுபவத்தைச் சற்றே ஆராய்வோம்.

## கனவு, நனவு, உறக்கம்!

வேதாந்தத்தின் ஆதாரத் தத்துவங்களை விளங்கிக் கொள்ளவும், நம் இருப்பை முழுதுமாக தர்க்க ரீதியாக விளங்கிக் கொள்ளவும், 'நாம்' இருக்கும் மூன்று வேறுபட்ட 'நிலை'களைப் புரிந்து கொள்வது இன்றியமையாததாகின்றது.

இந்த ஆய்வை மேற்கொள்ளும் இந்தத் தருணத்தில் நாம் இருக்கும் நிலை **'விழிப்பு நிலை'** ஆகும்.

அனுபவங்களை, நாம் ஸ்தூலமாக உணரத்தக்க வகையில் உலகை ஐம்புலன்களால் உய்த்து அறியும், பருவான நிலை இது.

இதை விரிவாக அறிவதற்கு முன், நாம் விழித்திருக்கும் நனவு நிலை போலவே, நாம் கனவு காணும் கனவு நிலையையும் ஒரு தனித்த நிலையாக, நம் அனுபவங்க ளிலிருந்தே அறிய முயற்சிப்போம்.

நாம், கனவு காணும் போது என்ன நிகழ்கின்றது?

கனவில், நாம் இதுவரை கண்ட, கேட்டவைகள் தவிர்த்து, இதுவரை கண்டேயிராத, கேள்விப்பட்டேயிராத

இடங்களையும், உயிர்களையும், உருவங்களையும் காண் கிறோம்.

பல சுக துக்க அனுபவங்களையும் அடைவதாக உணர்கின்றோம்.

கனவில் பல சப்தங்களைக் கேட்கிறோம். அவை நம் ஸ்தூலக் கருவிகளான காதுகளால் அச்சமயத்தில் உள்வாங்கப் படும் சப்தங்கள் அல்லவே. நாம் உறங்கிக் கொண்டிருக்கும் இடத்தில், நம்மைச் சுற்றி விளையும் சப்தங்கள் அல்லவே.

ஸ்தூலக் கண்களை மூடிக் கொண்டிருந்தாலும், பல இடங்களையும், பல உருவங்களையும் காண்கிறோம்.

நாம், நம் படுக்கையை விட்டு அசையாமல் இருந்தாலும், பல இடங்களுக்குப் பயணம் செய்வதாகவோ, வேறு இடங்களில் இருப்பதாகவும், நடப்பதாகவும், ஓடுவதாகவும் உணர்கின்றோம்.

அதாவது, கனவு நிலையில், நம் ஸ்தூல ஞான இந்திரியங்களின் கோளகங்கள் (உறுப்புகள்) ஒய்ந்து இருக்கும் போதும், நம்மால் (ஏதோவொரு சப்தத்தைக்) கேட்க முடிகின்றது.

நம்மால் (ஏதோவொரு உருவத்தைக்) காண முடிகின்றது. சுகந்தத்தை நுகர்வது போலவும், உணவை ருசிப்பது போலவும், எதையாவது ஸ்பரிசித்து உணர்வது போலவும் உணர்கின்றோம்.

அப்படியானால், நம் கனவு நிலையில், ஸ்தூலமாக உள்ள ஞான இந்திரியங்கள் காரியமாற்றாது ஓய்ந்திருக்கும் போதும், அந்த இந்திரியங்களின் சூக்ஷும குணங்கள் விழித்திருக்கவே வேண்டும்.

அதேப்போல், கனவு நிலையில், நம் ஸ்தூல கர்ம இந்திரியங்கள் ஓய்ந்து இருக்கும் போதும், நாம் பேசுவதாகவோ, பயணிப்பது போலவோ, பொருட்களை கையாள்வது போலவோ, மலஜலம் கழிப்பது போலவோ, புணர்வது போலவோ உணர்கின்றோம். அப்படியானால், நம் கனவு நிலையில், ஸ்தூலமாக உள்ள கர்ம இந்திரியங்கள் காரியமாற்றாது ஓய்ந்திருக்கும் போதும், அந்த இந்திரிய ங்களின் சூக்ஷும குணங்கள் விழித்திருக்கவே வேண்டும்.

ஆக, கனவு நிலையில், ஸ்தூல சரீரம் உறங்கும் போதும், நம் சூக்ஷும சரீரம் விழித்தவாறு இருக்கின்றது.

நம் ஸ்தூல சரீரத்தில் அடிபட்டு, வலியுடன் உறங்கப் போவதாகவும், உறங்கும் போது, கனவு காண்பதாகவும் வைத்துக் கொள்வோம்.

கனவில் வலியின் தாக்கமே இன்றி காரியமாற்றுவது சாத்தியமாகின்றது. ஸ்தூல சரீரத்தின் வலியை நாம் உணர்வதில்லை.

(உறக்கத்திலேயும் கூட ஸ்தூல தேகத்தின் அசௌ கரியங்களை நாம் உணர்வதில்லை எனினும், கனவு நிலையை மட்டும் கவனிப்போம்).

விழித்த மறுகணமே, ஸ்தூல சரீரத்தின் மீது நமக்கு அபிமானம் ஏற்படுகின்றது. வலியை அனுபவிக்கத் தொடங்கு கின்றோம். அதேப்போல், நல்ல ஆரோக்கியத்துடன் உறங்கப் போய், கனவு காணுவதாக வைத்துக் கொள்வோம்.

கனவில் அடிபட்டு, கையையோ காலையோ இழந்து துடிக்கும் நாம், விழித்த மறுகணம், ஸ்தூல சரீர அபிமானத்தால் கவலை நீங்கப் பெறுகின்றோம்.

நாம் கனவு நிலையில் சிறிதும் ஸ்தூல சரீர அபிமானமில்லாமல் இருக்கிறோம்.

சூக்ஷும உருவில், தனித்தன்மையுடன் நமக்குள்ளேயே ஒளிர்கிறோம் என்றது *விவேக சூடாமணி*.

'*ஸ்வப்னோ பவத்யஸ்ய விபக்த்யவஸ்தா ஸ்வமாத்ர சேஷேண விபாதி யத்ர |*' – இது மூலம். கனவு நிலையை மேலும் விவரிக்கின்றது *விவேக சூடாமணி*.

நம் மனம், நாம் விழிப்பு நிலையில் கண்ட, கேட்ட, அனுபவித்த நிகழ்வுகளின் வாசனைகளால் (மற்றப் பிறவி வாசனைகளும் சேர்த்து) ஒரு உலகத்தைப் படைக்கின்றது.

(மனம், புத்தி, அஹமர்த்தம் உள்ளிட்ட ரூபங்கள் கொண்ட) நம் புத்தி, தன் விழிப்பு நிலை வாசனைகளுடன் ஒளிர்கின்றது. கனவிலும், 'நான்', 'எனது' என்ற அஹங்காரத்தின் குணங்கள் விரிகின்றன.

இந்த விளக்கத்தின் மூலம் – '*ஸ்வப்னே து புத்தி: ஸ்வயமேவ ஜாக்ரத் - காலீன - நானாவித - வாஸனாபி: | கர்த்ராதிபாவம் ப்ரதிபத்ய ராஜதே*'.

நாம் கனவு காணும் நிலையில் நம்மை, '***சூக்ஷுமசரீராபிமானீ***' என்றழைக்கிறார் ஆதிசங்கரர் தம் ***தத்வ போதம்*** எனும் நூலில்.

அதனால், அங்கும் சுக துக்கங்களும், அனுபவங்களும் நிகழ்கின்றன. வெளிப்புலன்கள், ஸ்தூல தேகத்துடன் ஓய்ந்து விடுகின்றன. என்றாலும், அவற்றின் உட்புலன்கள், சூக்ஷுமமாக இயங்கியவாறே இருக்கின்றன.

அதனாலேயே, கனவிலும், நனவைப் போல, பேசுவதாகவும், கேட்பதாகவும், ஸ்பரிசிப்பதாகவும், ருசிப்ப தாகவும், நடப்பதாகவும், நுகர்வதாகவும், கழிப்பதாகவும், இன்பம் துய்ப்பதாகவும் உணர்கிறோம்.

கனவு நிலையில், சில அபூர்வமான சந்தர்ப்பங்களில், உட்புலன்கள் வெளிப்புலன்களை இயக்குவதும் நிகழ்கின்றது.

பேசுவது போல கனவு காண்பவர், உறக்கத்தினிடை பேசுவதும், மலஜலம் கழிப்பது போல கனவு காண்பவர், யதார்த்தத்தில் மலஜலம் கழித்திருப்பதும், ஏன், இன்பம் அனுபவிப்பதாகக் கனவு காண்பவருக்கு உறக்கத்தில் விந்துஸ்லிகிதம் ஆகிவிடுவதும் கூட நாம் காணும் ஒன்றே.

கனவில் மனதின் இருப்பும், சூக்ஷுமப் புலன்களின் செயல்பாடும் புறப்புலன்களைத் தூண்டிச் செயல்பட வைக்கின்றன. புத்தி க்ஷீணமாயிருப்பதால், காண்பது கனவா,

நனவா? எனத் தெரியாமல் நாம் இருக்கிறோம். செயல் படுகிறோம்.

கனவில், புத்தி ஓய்ந்திருந்தால், நாம் கனவில் காணும் நண்பரை, நண்பர் என்று உணர மாட்டோமே?

நனவுலகத்தில் இல்லாது கனவுலகில் இருக்கின்றோம் என்ற ஒரு அறிவைத் தவிர மற்றவை (திடமாக இல்லாமல், க்ஷீணமாகவேனும்) தெரிகின்றதே.

இந்திரியங்களின் இந்தச் செயலாற்றல் தவிர்த்து, அந்தக்கரணங்களின் செயலாற்றலையும் உணர்கிறோம்.

சிந்திப்பதாகவோ, குழம்புவதாகவோ, கோபப் படுவதாகவோ, அச்சப்படுவதாகவோ, விரகத்திலிருப்பதாகவோ என பல உணர்வுகளை அனுபவிக்கின்றோம்.

பிறர் நம்மைத் தாக்குவதாகவோ, நாம் பிறரைத் தாக்குவதாகவோ கூட கனவு காண்கிறோம்.

நாம் காணும் கனவில் வரும் உலகமும், உருவங்களும், நாம் இது வரை கண்டும் கேட்டுமிராத உலகமாகவும், உருவங்களாகவும் கூட இருக்கின்றது.

அது நம் சூக்ஷமத்தில், அவ்யக்தமாக, வ்ருத்தியடையாத விதையாக இருக்கும், ஏதோவொரு பிறவியின் வாசனையே.

நமக்கு மிகவும் பரிச்சயமானது நனவு நிலை அல்லது விழிப்பு நிலை. இதுவரை சற்றே விரிவாய்ப் பார்த்தது கனவு நிலை. என்ன நிகழ்கின்றது என்றே தெரிந்து கொள்ள முடியாத, ஆனால், விழித்ததும் (அதுவரை) ஆனந்தமாக இருந்தோம் என்று மட்டும் அறிய முடியும் நிலை, கனவுகளற்ற ஆழ்ந்த உறக்க நிலை.

நாம் வாழ்நாள் முழுதும், இந்த மூன்று நிலைகளிலேயே மாறி மாறி இருந்து வருகிறோம்.

இந்த மூன்று நிலைகளையும், "அவஸ்தைகள்" என்று அழைப்போம்.

நனவு நிலை, ***ஜாக்ரத அவஸ்தை*** என்றும், கனவு நிலை, ***ஸ்வப்ன அவஸ்தை*** என்றும், ஆழ்ந்த உறக்க நிலை, ***ஸுஷுப்தி அவஸ்தை*** என்றும் அழைக்கப்படுகின்றது.

இவை மூன்றையும், நாம், நம் அனுபவமாக உணர்வதால், இவற்றை ஆதாரமாகக் கொண்டு பல தத்துவங்களை ஆராயலாம். உறக்க நிலையை கவனிப்போம்.

நாம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தாலொழிய, நம் ஸ்தூல சரீரம் அல்லது நம் பௌதீக உடலோடு தொடர்பு படுத்திக் கொள்வதில்லை.

கனவு வந்தாலொழிய, சூக்ஷ்ம சரீரத்துடனும் தொடர்புபடுத்திக் கொள்வதில்லை.

கனவில்லாத ஆழ்ந்த உறக்கத்தில், நாம் தொடர்புபடுத்திக் கொண்டு விளங்கும் சரீரம் ஒன்று உண்டு. அது ஸ்தூல சரீரத்திற்கும், சூக்ஷ்ம சரீரத்திற்கும் காரண மாத்திரமாக விளங்குவதால், **"காரண சரீரம்"** எனப்படுகின்றது.

ஸ்தூல சரீரமும், சூக்ஷ்ம சரீரமும் செயலோய்ந்த போது வெளிப்படும் காரண சரீரமே **"ஆனந்தமய கோசம்"** என்பதை, அவஸ்தைகள் குறித்து ஆராய்ந்த பிறகு, விரிவாகக் காண்போம்.

நாம் தினமும் ஆழ்ந்து உறங்குகின்றோமே, அந்த அனுபவம் குறித்து சற்றே விசாரித்து அறிவோம்.

ஆழ்ந்து உறங்கும் போது நமக்கு உடல் இருக்கும் ஸ்மரணை இருக்கின்றதா?

எண்ணங்கள் எழுகின்றனவா?

மனதிற்கு இருப்பு இருக்கின்றதா?

புத்திக்கு இருப்பு இருக்கின்றதா?

அதாவது, நம் புத்தி அல்லது மனதின் செயல்பாடு இருப்பதாக உணர்கின்றோமா?

விழித்தவுடன், அதுவரை நன்றாக உறங்கினோம் என உணர்கின்றோமே, உறங்கும் போது அதை உணர்ந்தவாறே உறங்குகின்றோமா?

நாம் உறங்கும் போது, நம் உடல் இருப்பதாகவோ, உடலுக்கு வெளியே உலகம் இருப்பதாகவோ, உள்ளே மனம், புத்தி ஆகிய அந்தக்கரணங்கள் இருப்பதாகவோ உணர்வ தில்லை.

ஆழ்ந்த உறக்கத்தில், நாம் இருப்பதோ, உலகம் இருப்பதோ நமக்குத் தெரிவதில்லை. ஆக '***ஸுஷுப்தி அவஸ்தை***' அல்லது ஆழ்ந்த உறக்கத்தில், நம் மனதிற்கும் இருப்பு இல்லை; உலகுக்கும் இருப்பு இல்லை.

நாம் தூங்கும்போது, நம் புலன்கள் அனைத்தும் நம் தலைமைப் புலனான மனதில் ஒடுங்குகின்றன.

அப்போது நாம் கேட்பதில்லை, பார்ப்பதில்லை, முகர்வதில்லை, ருசிப்பதில்லை, ஸ்பரிசிப்பதில்லை, உணர்வ தில்லை, பேசுவதில்லை, ஏற்பதில்லை, மகிழ்வதில்லை, வெளி விடுவதில்லை, நகர்வதுமில்லை.

நம் உள் உறுப்புகளின் இயல்பான செயல்பாடுகளும், சுவாசமும் மட்டுமே நிகழ்கின்றன.

ஆழ்ந்து உறங்கும் நேரத்திலும், பிராணன் செயல்பட்டவாறே இருக்கின்றது. சமானன் என்ற பிராணனே, உள்மூச்சு, வெளிமூச்சு இரண்டையும் சமமாக நடத்துகின்றது என்கின்றது **ப்ரச்ன உபநிஷத்து.**

சரி, விழித்து எழும் அந்தக் கணத்தை கவனித்து இருக்கின்றோமா?

முழு அறியாமையுடன், நாம் யார், எங்கிருக்கிறோம் என்று கூடத் தெரியாமல் தான் விழிக்கின்றோம்.

உடல் விழித்து எழும்போதே, உடன் எழுவது மனதின் ஒரு பரிமாணமான அஹமர்த்தம். **'நான்'** எழுந்து, அதைத் தொடர்ந்து எனது, என்னை, எனக்கு, என்னுடைய, என்னால், என்னிடத்து, என்னுள், என்னிடம் என எல்லாம் எழுகின்றன.

**'நான் இருக்கின்றேன்'** என்றும், 'நான் (உலகத்தில்) இருக்கின்றேன்' என்றும், **'என் பெயர் இன்னது'** என்றும் எண்ணங்கள் விரிய விரிய, நமக்கு ஒரு இருப்பு வருகின்றது.

மனதின் ஒவ்வொரு பரிமாணமும் விழிக்க விழிக்க, முந்தின இரவு நின்ற இடத்திலிருந்து, நினைவுகள் தொடர்கின்றன. அஹமர்த்தம் விழித்து, மனம் விழித்து, குணங்கள் விழித்து, புத்தி விழித்து, சித்தம் விழிக்கின்றது.

இவை யாவும் ஒரு கணத்தின் மிகச்சிறு கூற்றிலேயே நிகழ்ந்து விடுகின்றன. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து முழுதுமான விழிப்பு நிலையை அடையும் இந்த சில விநாடிகளைக் கூர்ந்து கவனித்து, விசாரம் செய்வது ஸ்ரீ இரமண மகரிஷிகளால் பரிந்துரைக்கப்பட்டது.

விழிப்பு நிலையை விரிப்போமா?

## தன்னை அறியும் தத்துவங்கள்

நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணமும், உடல் இருப்பதை அறிந்தவாறே இருக்கிறோம்.

சிந்தித்தவாறே இருப்பதால் மனம் இருப்பதையும், நிச்சயிப்பதால் புத்தி இருப்பதையும் அறிகிறோம். உடல், மனது மற்றும் புத்தியின் துணையால், நமக்கு வெளியே ஒரு உலகம் இருப்பதையும் அறிவோம்.

ஒவ்வொரு கணமும் இதையே ஆராய்ந்து கொண்டிருப்பதில்லை. எனினும், நம் உடல், இந்திரியங்கள், மனம், புத்தி ஆகியனவற்றிற்கு இருப்பு இருப்பதை அறிந்தவாறே இருக்கின்றோம்.

இவற்றில் எதன் மீது நம் கவனத்தை செலுத்தினாலும், இவை இருப்பதை, இருந்து கொண்டே இருப்பதை அறிய முடிகின்றது. நம் எண்ணங்கள், குணங்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றையும் அறிவோமாயினும், கவனிப்பதில்லை.

கவனிக்காவிடிலும், அவை எல்லாவற்றிற்கும் இருப்பு இருப்பதை அறிந்தவாறே இருக்கிறோம்.

இவ்வாறு உடல், மனம், புத்தி, உலகம், உணர்வுகள், குணங்கள் மற்றும் எண்ணங்களை அறிந்தவாறே இருக்கும் நிலையே '***ஜாக்ரத அவஸ்தை***' ஆகும்.

'***அவஸ்தா ஜாகரஸ்தஸ்ய ஸ்தூலார்த்தானுபவோ யத:***' என்பது *விவேக சூடாமணி*.

எந்த நிலையில் (நமக்கு) ஸ்தூலமான பொருட்களின் அனுபவம் ஏற்படுகின்றதோ, அந்த நிலை ஜாக்ரத அவஸ்தை எனப்படுகின்றது என்பது பொருள்.

'*ச்ரோதாதி ஞானேந்த்ரியை: சப்தாதி விஷயைஸ்ச ஜ்ஞாயதே இதி யத் ஸா ஜாக்ரதவஸ்தா*' என்கின்றது *தத்வ போதம்*.

விழிப்பு நிலையில், நம் ஞானேந்திரியங்களான காது சப்தத்தையும், சருமம் ஸ்பரிசத்தையும், கண்கள் ரூபத்தையும், நாக்கு ரஸத்தையும், மூக்கு கந்தத்தையும் கிரஹித்து, உள்தருகின்றன என்பது பொருள்.

ஞான இந்த்ரியங்கள் மட்டுமல்ல, கர்ம இந்திரியங்களும், பஞ்ச பிராணன்களும், அந்தக் கரணங்களும், விழித்துக் காரியமாற்றியவாறே இருக்கின்றன.

நம் ஸ்தூல சரீரம் மட்டுமின்றி, சூக்ஷம சரீரம் மற்றும் காரண சரீரம் ஆகியனவும் விழித்தேயிருக்கின்றன.

ஆனாலும், நாம் ஸ்தூல சரீரத்தின் மீது மட்டுமே முழு அபிமானம் கொண்டவர்களாக இருக்கின்றோம். ஆகவே, நமக்கு நம் ஸ்தூல சரீரம் மட்டுமே விளங்கியவாறே இருக்கின்றது.

நமக்கு நம் சூக்ஷம, காரண சரீரங்கள் குறித்த ஸ்மரணை இருப்பதில்லை. விழிப்பு நிலையில் நம்மை, '***ஸ்தூலசரீராபிமானீ***' என்றழைக்கிறார் ஆதிசங்கரர் தம் *தத்வ போதம்* என்னும் நூலில்.

முழுமையாக விழித்தும், எல்லாச் செயல்பாடுகளுடனும் நாம் விளங்கும் இந்த நிலையில், நமக்கு '**விச்வன்**' அல்லது '**வைசுவானரன்**' என்று பெயர்.

நமது முதல் பரிமாணமாக, நாம் ஸ்தூல சரீரத்தை அபிமானித்திருக்கும் விழிப்பு நிலையை, *மாண்டூக்ய உபநிஷத்து, ந்ருஸிம்ஹ உத்தரதாபினீ உபநிஷத்து* ஆகிய நூல்கள் விளக்குகின்றன.

(இந்த நிலையில்) நம் உணர்வுகள் யாவும் புறமுகமாக, வெளி நோக்கி, அதாவது வெளி விஷயங்களைப் பற்றியே இருக்கின்றன.

நாம் ஏழு அங்கங்களும், பத்தொன்பது வாய்களும் கொண்ட வைசுவானரனாய், விழிப்பு நிலையில், புறவுலகை அனுபவிக்கிறோம் என்னும் பொருள்பட, *மாண்டூக்ய உபநிஷத்து*,

'*ஜாகரிதஸ்தானோ பஹிஷ்ப்ரஜ்ஞ: ஸப்தாங்க ஏகோனவிம்ஸதிமுக: ஸ்தூலபுக் வைச்வானர: ப்ரதம: பாத:*' என்கின்றது.

விச்வனின் ஏழு அங்கங்கள் யாவன?

உபநிஷத்துகளில், இருவேறு விளக்கங்கள் காணப் படுகின்றன.

ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

ஜாக்ரத அவஸ்தையில் விச்வனாக விளங்கும் நமக்கு, தலை, கண்கள், பிராணன், நடுவுடல், (சிறுநீரகம்) உள்ளிட்ட உப உறுப்புகள் மற்றும் கால்கள் ஆகியன ஏழு அங்கங்களா

கின்றன என்று, ***மாண்டூக்ய உபநிஷத்து*** உரையில் குறிப்பிடுகின்றார் சுவாமி ஆசுதோஷானந்தர்.

இவைகள் முறையே **சொர்க்கம், சூரியன், காற்று, வெளி, தண்ணீர்**, மற்றும் **நிலம்** ஆகியனவற்றின் குறியீடுகளே என்றும் கூறுகிறார்.

ஆனால், 'அண்ணா', ***முண்டக உபநிஷத்து*** – இரண்டாம் முண்டகத்திற்கான விரிவுரையில், தரும் விளக்கம் பின் வருமாறு:

அக்னி – தலை, சூரியனும் சந்திரனும் – கண்கள், திசைகள் – காதுகள், வேதங்கள் – வாக்கு, வாயு – பிராணன், ஆகாசம் – ஹ்ருதயம் மற்றும், நிலம் – கால்கள் ஆக ஏழு அங்கங்களாம்.

ஐந்து கர்ம இந்திரியங்களும், ஐந்து ஞான இந்திரியங்களும், ஐந்து பிராணன்களும், நான்கு அந்தக் கரணங்களுமே பத்தொன்பது வாய்களாக உருவகப் படுத்தப்பட்டன.

வைசுவானரனாக நாம் விளங்கும்போது, அதாவது ஜாக்ரத அவஸ்தையில் நாம் ஸ்தூல சரீரத்தை அபிமானித்து இருக்கும் போது, பஞ்ச பூதங்களுக்கும் இருப்பு இருக்கின்றது.

(உலகம் தவிர்த்து நாம் அனுபவிக்க வேறு சில உலகங்களும் உள்ளதால்) சொர்க்கத்திற்கு இருப்பு இருக்கின்றது. சூரியனுக்கு இருப்பு இருக்கின்றது. சந்திரனுக்கும் இருப்பு இருக்கின்றது. இவை, விளங்காவிடினும், ஏற்று மேற்செல்வோம்.

ஆக, நாம் பருவான, ஸ்தூலமான விஷயங்களை, ஏழு அங்கங்கள், பத்தொன்பது கருவிகள் வழி அனுபவிக்கும் நிலை விழிப்பு நிலை.

உறக்கத்தில் ஆழ்வதற்கு முன்னோ, உறக்கத்தினி டையிலோ, விழிப்பதற்கு முன்னோ, நம் திட்டமிடலோ, கட்டுப்பாடோ இன்றி, நாம் கனவு காண்கிறோம்.

ஆழ்ந்து உறங்கும் நிலையும் இல்லாது, விழித்திருக்கும் நிலையும் இல்லாது, நாம் கனவு கண்டவாறிருக்கும் இந்த நிலையை நாம் கனவு நிலை என்றோ, '**ஸ்வப்ன அவஸ்தை**' என்றோ அழைக்கலாம்.

கனவில் நாம் ஒரு பார்வையாளனாகவோ, பாத்திரமாகவோ இருப்பதை உணர்ந்தவாறேதான் நாம் கனவு காண்கிறோம். அதாவது கனவு நிலையில் நமக்கு '**நான்**' என்ற இருப்பு இருந்தவாறே இருக்கின்றது.

கனவில், நமக்கு, நம் ஸ்தூல உடலைப் பற்றிய உணர்வு இல்லை.

(உணர்வு இல்லாவிடிலும், ஸ்தூல உடல் தன் ஆதார இயக்கங்களில் ஈடுபட்டவாறே தான் இருக்கின்றது. அதாவது, உடலின் உள் உறுப்புகளும், பிராணனும், சுவாசமும் என ஆதார இயக்கங்கள் நிகழ்ந்தவாறே இருக்கின்றது.)

நாம், நம் மனதின் உதவியுடன், ஒரு புதிய உலகைப் படைத்துக் கொள்கின்றோம். கனவிலிருந்து விழிக்கும் வரை, அந்த உலகையே உண்மையாகக் கருதியவாறு (வேறொரு உலகம் இருக்கும் ப்ரக்ஞையே இன்றி), நாம் அந்த உலகில் வாழ்கிறோம்.

விழித்திருக்கும் போது, நாம் காணும் புற உலகம் நமக்கு உண்மையானதாகத் தெரிகின்றது. அது போலவே, கனவு காணும் போது, நமக்கு கனவில் காணும் உலகமே உண்மையானதாகத் தெரிகின்றது.

கனவில் நம் ஸ்தூல உடலுக்கு இருப்பு இல்லை, புற உலகத்திற்கு இருப்பு இல்லை, மனதிற்கு இருப்பு இருக்கின்றது.

சுகமாகவோ, துக்கமாகவோ இருப்பதாக உணர்கின் றோமே புத்திக்கு இருப்பு இருக்கின்றது.

கனவுகளிலும் பல விஷயங்களை, நிர்ணயம் செய்து கொள்கின்றோமே, சித்தத்திற்கு இருப்பு இருக்கின்றது. நாம், நம் பள்ளிக் கட்டிடத்தில் நண்பர்களுடன் இருப்பதாக உணர்கின்றோமே, அஹங்காரத்திற்கும் இருப்பு இருக்கின்றது.

செயலாற்றுவது (அல்லது செயல்களை பார்ப்பது) நாம் என்று உணர்கின்றோமே, முழுவதும் மனோமயமான, கனவு காணும், இந்த நிலையை '***ஸ்வப்ன அவஸ்தை***' என்று அழைக்கிறோம்.

கனவு நிலையில், நம் மகிமையை, நாமே அனுபவிக்கிறோம். அதாவது, மனதால் நாம் உருவாக்கிய உலகையும், மற்ற நிகழ்வுகளையும் அனுபவிக்கிறோம்.

நாம் விழிப்பு நிலையில் கண்டனவற்றை மீண்டும் காண்கிறோம். கேட்டனவற்றை மீண்டும் கேட்கிறோம்.

பல்வேறு இடங்களிலும், திசைகளிலும் அனுபவித்தனவற்றை, மீண்டும் அனுபவிக்கிறோம்.

கண்டவை, காணாதவை, கேட்டவை, கேளாதவை, அனுபவித்தவை, அனுபவிக்காதவை, உண்மையானவை, உண்மையற்றவை ஆகிய எல்லாமே, நாமேயாகி, அனைத்தையும் அனுபவிக்கிறோம் என்கின்றது ***ப்ரச்ன உபநிஷத்து***.

'*அத்ரைஷ தேவ: ஸ்வப்னே மஹிமானமனுபவதி | யத் த்ருஷ்ட்டம் த்ருஷ்ட்டமனுபச்யதி: ச்ருதம் ச்ருதமேவார்த்தம் அனுச்ருணோதி தேசதிகந்தரைச்ச ப்ரத்யனுபூதம் புன: புன: ப்ரத்யனுபவதி: த்ருஷ்ட்டம் சாத்ருஷ்ட்டம் சச்ருதம் சாச்ருதம் சானுபூதம் சானனுபூதம் ச ஸச்சாஸச்ச ஸர்வம் பச்யதி ஸர்வ:பச்யதி ||*'

விழிப்பு நிலையில் நாம் இருக்கும்போது அறிந்த வற்றைக் கொண்டே கனவில் நாம் ஒரு உலகத்தைப் படைக்கின்றோம்.

இந்த அறிவு, இந்தப் பிறப்பில் நாம் அடைந்த அறிவு மட்டுமா என்றால், இல்லை. பல பிறவிகளில் நாம் சேர்த்த

வாசனைகளைக் கொண்டும்தான் நாம் கனவுலகத்தைப் படைக்கின்றோம்.

'*வாஸனயா நித்ராஸமயே ய: ப்ரபஞ்ச: ப்ரீதயதே ஸா ஸ்வப்னவஸ்தா*' என்கின்றது *தத்வ போதம்*.

விழிப்பு நிலை நம் முதல் பரிமாணம் எனில், கனவு நிலை நம் இரண்டாம் பரிமாணம். விழிப்பு நிலையில் **"விச்வன்"** என்று அழைக்கப்படும் நாம் கனவு நிலையில் 'தைஜஸன்' என்று அழைக்கப்படுகின்றோம்.

நமது கனவு நிலையில், நமக்கு சூக்ஷம சரீரத்தின்மீது மட்டுமே அபிமானம் இருப்பதால், *தத்வபோதம்* நம்மை '***ஸூக்ஷம சரீராபிமானீ***' என்றும் அழைக்கின்றது.

புற உலக அனுபவங்களில், நாம் விஷயங்களைக் கண்டுணர, நமக்கு புற ஒளி (சூரியன், சந்திரன், மின் விளக்குகள்) உதவுகின்றது.

கனவுலகம் எதனால் ஒளிர்கின்றது?

கனவில் நாம் காணும் காட்சிகளைக் ஒளிர வைப்பது எது?

புற ஒளியின் துணை ஏதுமின்றி நாம் காணும் காட்சிகளில் பிரதிபலிப்பது எந்த ஒளி?

**“தைஜஸன்”** அல்லது ஒளிமயமானவன் என்று நம்மை அழைப்பது ஏன்?

*விவேக சூடாமணி*, நாம் சூக்ஷம சரீரமாக 'ஒளிர்கின்றோம்' என்றது இதைத் தானா?

மேலும், ஆய்வில் விளங்கிக் கொள்வோம்.

நாம் கனவு நிலையில் உள்முகமான உணர்வுகளை மட்டுமே அறிகின்றோம். விழிப்பு நிலையில் பருவான விஷயங்களாக நாம் சுகித்தனவற்றை, கனவு நிலையில் நுண்மையாகச் சுகிக்கின்றோம்.

மாண்டுக்ய உபநிஷத்து மற்றும் **ந்ருஸிம்ஹ உத்தரதாபினீ உபநிஷத்து** ஆகியன, நாம் விச்வனாக விளங்கிய பருவத்தில் நம்மில் ஏழு அங்கங்கள், பத்தொன்பது வாய்கள் விளங்கியதாக உரைத்தன.

கனவு நிலையிலும் கூட, இவைகள் யாவும் (சூக்ஷம நிலையில்) இயங்கியவாறே தான் இருக்கின்றன.

அதனாலேயே, விழிப்பு நிலையில் உள்ள அனைத்தையும், நாம் படைக்கும் கனவு உலகத்தில் நம்மால் உணர முடிகின்றது.

ஆக, நம் இரண்டாவது பரிமாணமானது, தைஜஸன் என்ற பெயரில், ஏழு அங்கங்களுடனும், பத்தொன்பது வாய்களுடனும், கனவு நிலையில், மனோமயமான, நம் மனதால் படைக்கப்பட்ட உலகை அனுபவிக்கின்றது.

*'ஸ்வப்ன:ஸ்தானோ அந்த:ப்ரஜ்ஞ: ஸப்தாங்க ஏகோனவிம்ஸதிமுக: ப்ரவிவிக்த்புக் தைஜஸோ த்விதீய: பாத: ||'* என்றது *மாண்டூக்ய உபநிஷத்து.*

மீண்டும் உறக்க நிலையை ஆராய்வோம்.

நமக்கு விழிப்பு நிலையில் பல அனுபவங்கள் ஏற்படுகின்றன. கனவு நிலையிலும் பல அனுபவங்கள் ஏற்படுகின்றன. உறக்க நிலையிலோ, எந்த அனுபவமும் நிகழ்வதாக நாம் அறிவதில்லை. நாம் எதையும் உணர்வதும் இல்லை. அந்த நிலை, அறியாமை அல்லது அஞ்ஞான நிலையே.

அந்த நிலையில், நாம் ஸ்தூல சரீரத்துடனோ, சூக்ஷும சரீரத்துடனோ நம்மை அபிமானித்துக் கொள்ளாமல் இருக்கின்றோம்.

ஸ்தூல சூக்ஷும சரீரங்களுடன் அபிமானமின்றி இருக்கும் இந்நிலையில், நாம் '***காரண சரீரம்***' என்ற தேகத்துடன் விளங்குவதாகவும், இது நம் மூன்றாவது பரிமாணம் என்றும் உரைக்கின்றது *மாண்டூக்ய உபநிஷத்து*.

இந்நிலையில் நாம் '***ப்ராஜ்ஞன்***' என்று அழைக்கப் படுகின்றோம். ஆதிசங்கரரின் *தத்வ போதம்*, உறக்க நிலையில் உள்ள நம்மை, '***காரண சரீராபிமானீ***' என்றும் அழைக்கின்றது.

நம் ஸ்தூல உடல் ஓய்ந்து விடுவதால், நாம் பருவான விஷயங்களை அனுபவிப்பதில்லை. நம் சூக்ஷும உடல் ஓய்ந்து விடுவதால், நாம் நுண்ணிய விஷயங்களை அனுபவிப் பதில்லை.

ஆகவே, உறக்கம் முற்றிலும் அனுபவமற்ற ஒரு நிலை அல்லது, முற்றிலும் அனுபவங்கள் ஒடுங்கிய நிலையாகும். சூக்ஷும உடலுடன், மனம், புத்தி ஆகியன ஓய்ந்து விடுவதால்,

நாம் அனுபவிக்கின்றோமா என்பது கூட நமக்குத் தெரியாத அஞ்ஞான நிலையாகின்றது உறக்கம்.

விழித்தவுடன், நம் பெயர், வாழும் இடம், உறவுகள் தொடங்கி, முந்தைய இரவு உறங்கும் வரை இருந்த நினைவுகள் யாவும் தொடர்வதால், அவை யாவும் ஒடுங்கிய விதை வடிவில், நம்மில் எங்கேயோ (சித்தத்தில்?) அடங்கியே இருந்திருக்க வேண்டும்.

அவ்வாறு, தோன்றாநிலையில், பீஜமாக, அவ்யக்தமாக நம் அனுபவங்கள் யாவும் ஒடுங்கும் நிலை, நம் உறக்க நிலை.

நாம் ஆழ்ந்து உறங்கும் போது, நம் புலன்கள் யாவும், மனத்தில் ஒடுங்குகின்றன. அப்போது நாம் சப்தங்களைக் கேட்பதில்லை. காட்சிகளைக் காண்பதில்லை.

கந்தத்தை முகர்வதில்லை. ரஸங்களை சுவைப்ப தில்லை. ஸ்பரிசங்களை உணர்வதில்லை. பேசுவதில்லை. ஏற்பதில்லை. மகிழ்வதில்லை. வெளிவிடுவதில்லை. நகர்வ தில்லை.

உடலில், பிராண சக்திகள் மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது **கார்க்கியர்** என்ற மாணவரின்

கேள்விக்கு, பிப்பலாதர் என்ற ஆசாரியரின் பதிலாக, *ப்ரச்ன உபநிஷத்த* விளக்கும் உரை.

'*தத் ஸர்வம் பரே தேவே மனஸ்யேகீபவதி | தேன தர்ஹ்யேஷ புருஷோ ந ச்ருணோதி ந பச்யதி ந ஜிக்ரதி ந ரஸயதே ந ஸ்பருசதே நீபிவததே நாதத்தே நானந்தயதே ந விஸ்ருஜதே நேயாயதே*' - இது மூலம்.

அதாவது, புலன்கள் முழுதும் ஓய்ந்து விட்டாலும், உடலில் பிராணன்களின் செயல்பாட்டால், உள் உறுப்புகள் யாவும் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இதயம் மற்றும் இரத்த ஓட்ட உறுப்புகள், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் போன்ற இரத்த சுத்திகரிப்பு உறுப்புகள், நுரையீரல் உள்ளிட்ட சுவாச உறுப்புகள், உணவு செரிமான உறுப்புகள் போன்ற, புலன்களைச் சாராத, பிராணன்களைச் சார்ந்த உறுப்புகள் யாவும், செயல்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன.

நம்மால் எதுவுமே அறியப்படாத நிலை, ஆனந்தமான நிலை, நாம் உறக்கத்தை மட்டுமே அனுபவிக்கும் நிலை, அப்படி உறக்கத்தை அனுபவிப்பதைக் கூட அறியாத, உணராத நிலை "ஸுஷுப்தி அவஸ்தை" ஆகும்.

இதையே, '*அஹம் கிமபி ஜானாமி ஸுகேன மயா நித்ரானுபூயத இதி ஸுஷுப்த்யவஸ்தா*' என்றுரைத்தது *தத்வ போதம்*.

இந்த நிலையில், நமக்கு ஆசைகளோ, கனவுகளோ இல்லை என்கின்றது *மாண்டூக்ய உபநிஷத்து*.

ஜாக்ரத அவஸ்தையில், நம் அனுபவங்களுக்குக் காரணம் நம் ஆசைகளே. ஸ்வப்ன அவஸ்தையில், நம் அனுபவங்களுக்குக் காரணம், நம் கனவுகளே.

ஆழ்ந்து உறங்கும், ஸுஷுப்தி அவஸ்தையில், அனுபவங்கள் ஏதுமின்றி, இதுவரை அடைந்த அனுபவங் களின் உணர்வுகள் யாவும் திரண்டு அவ்யக்தமாக, திரளாக இருக்கின்றது.

அதனாலேயே, உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கோ, உறக்கத்திலிருந்து கனவு நிலைக்கோ செல்லும் போது, அந்த அனுபவங்கள் தொடர்ந்து விரிகின்றன.

ஆக உறக்க நிலை, நம் மற்ற இரண்டு நிலைகளுக்கும் வாசலாக இருக்கின்றது.

நாம் (காரண சரீரமாக, ஆனந்தமய கோசமாக) ஆனந்த வடிவாக, ப்ராஜ்ஞனாக, ஆனந்தத்தையே அனுபவிக்கிறோம்.

இதுவே, **ப்ராஜ்ஞன்** என அறியப்படும், நம் மூன்றாவது பரிமாணம்.

இவை, *மாண்டூக்ய உபநிஷத்து* மற்றும் ***ந்ருஸிம்ஹ உத்தரதாபினீ உபநிஷத்து*** ஆகியனவற்றின் கருத்துச்சாரம்.

'*யத்ர ஸுப்தோ ந கஞ்சன காமம் காமயதே ந கஞ்சன ஸ்வப்னம் பச்யதி தத் ஸுஷுப்தம் | ஸுஷுப்தஸ்தான ஏகீபூத: ப்ரஜ்ஞானகன ஏவானந்தமயோ ஹ்யானந்தபுக் சேதோமுக: ப்ராஜ்ஞஸ்த்ருதீய: பாத: ||*' - இது மூலம்.

ஆழ்ந்த உறக்கத்தில், புலன்களும், ஸ்தூல உடலும், சூக்ஷும உடலும், அந்தக்கரணங்களும், ஓய்ந்திருக்கும் போதும் நம்மில் ஏதோ ஒன்று விழித்திருக்கவே வேண்டும். அதனாலேயே நாம் ஒருபுறமாகப் படுத்திருந்து உடலின் இரத்த ஓட்டம் தடைபட்டால், புரண்டு படுக்கின்றோம்.

பலர் உறங்கிக் கொண்டிருக்கும் கூட்டத்திலும், நம்மை யாரேனும் பெயரிட்டு அழைத்து எழுப்பினால், எழுந்து கொள்கின்றோம். கடிகாரத்தில் எழுப்பு மணியடித்தால், எழுந்து

கொள்கின்றோம். விழித்திருப்பது யாரென்று, எதுவென்று பிறகு பார்ப்போம்.

நாம், நம்மைப்பற்றி மிகவும் நன்றாக அறிந்த, நம்முடைய மூன்று நிலைகளையே **'அவஸ்தைகள்'** என்று அழைக்கிறோம். நம் வாழ்வின் எல்லாக் கணங்களுமே, இந்த மூன்று அவஸ்தைகளுக்குள் அடங்கி விடுகின்றனவா? இவை தவிர்த்து வேறு நிலைகள் உள்ளனவா? ஆய்வில் அறிவோம்.

## காரண தேகம், ஆனந்தமய கோசம்!

ஆழ்ந்து கவனித்தால், விழிப்பு நிலை, கனவு நிலை ஆகிய இரண்டுமே, நம் மனதின், எண்ணங்களின் வ்ருத்தியே.

நாம் காணும் கனவுகளுக்கு ஏதேனும் அர்த்தங்களோ, பின் விளைவுகளோ, பலன்களோ இருக்கின்றனவா எனப் பார்த்தால், இல்லை எனவே தெரிகின்றது.

கனவில் நாம் காணும் உலகங்கள் யாவற்றையும், மனதே படைக்கின்றது. கனவு காணும் போது, அந்த

உலகமும், அதில் வரும் உருவங்களும், அதில் நிகழும் நிகழ்ச்சிகளும், நமக்கு நிஜம் போலவே இருக்கின்றன.

விழித்து எழுந்ததுமே, அவை ஏதும் நிஜமல்ல எனத் தெளிவாகின்றது. (கனவு காணும் தருணத்தில், அது கனவு என நாம் அறிவதில்லை. விழித்து, புற உலகை அறிந்தவுடன், அதுவரை நாம் கண்டதெல்லாம் கனவு என அறிகின்றோம்).

இதைப் போலவே, விழிப்பு நிலையில் நாம் காணும் உலகமும் மனதாலேயே தோற்றுவிக்கப்படுகின்றது. இவை யாவும் மனதின் (வ்ருத்திகள் அல்லது) விளையாட்டுகளே என்கிறார் ஆதிசங்கரர்.

'*ஸ்வப்னே அர்த்த - சூன்யே ஸ்ருஜதி ஸ்வஸக்த்யா போக்த்ராதி விச்வம் மன ஏவ ஸர்வம் | ததைவ ஜாக்ரத்யபி நோ விசேஷஸ் - தத் ஸர்வ - மேதன் மனஸோ விஜ்ரும்பணம் ||*' - இது *விவேக சூடாமணி* மூலம்.

நாம் ஸ்தூல சரீரத்தை அபிமானித்து, விழிப்புணர்வுடன் இருப்பது, ஜாக்ரத அவஸ்தை, சூக்ஷும சரீரத்தை அபிமானித்து, கனவு காண்பது, ஸ்வப்ன அவஸ்தை, காரண சரீரமாக, உறங்கிக் கொண்டிருப்பது, ஸுஷுப்தி அவஸ்தை.

ஸ்தூல, சூக்ஷும சரீரங்களை விரிவாய் அறிந்தோம்.

காரண சரீரம் யாதெனப் பார்ப்போம்.

அன்னமய கோசமாக விளங்கும் பருவுடலே ஸ்தூல சரீரம். ப்ராணமய, மனோமய, விஞ்ஞானமய கோசங்களின் தொகுப்பே சூக்ஷும சரீரம். இவையிரண்டிற்கும் காரண மாத்திரமாக விளங்குவதே காரண சரீரம்.

உறங்கும் போது, உடலுக்கும், மனதுக்கும் இருப்பு இல்லாதபோது, நாம் சார்ந்திருப்பது, நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்வது, தொடர்புபடுத்திக் கொள்வது காரண சரீரத்துடனேயே.

அந்த ஸ்தூல சரீரத்தால் படைக்கப்படும், அனுபவிக் கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, நனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை.

அதேப்போல், சூக்ஷும சரீரத்தால் படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, கனவுலகின்

எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப் படுவதில்லை. ஆக, '**நான்**' தோன்றுவதில்லை.

'**நான்**' எங்கிருந்து அல்லது எதிலிருந்து தோன்றுகிறது?

பிறகு பார்ப்போம்.

காரண சரீரத்தை விளக்க முடியமா?

அது இந்தத் தன்மையுடையது அல்லது அந்தத் தன்மையுடையது என்று வார்த்தைகளால் விளக்க முடியாது.

அது நிலையானதாகவும் இல்லாமல், நிலையற்ற தாகவும் இல்லாமல் ஒரு நிலையில் உள்ளதாக, வார்த்தைகளில் விவரிக்க முடியாதது என, தத்வ போதம், அதை '***அநிர்வாச்யானாத்***' என அழைத்தது.

நாம் அறிந்தவைகள் யாவுமே, இத்தன்மையது என வார்த்தைகளால் வர்ணிக்கப்பட்டவையே.

நிலையானவையா, நிலையற்றவையா? என ஆய்ந்து, நிலையறிவிக்கப்பட்டவையே.

இதுவரை தோன்றாத ஒன்றே, வெளிப்படாத ஒன்றே, வார்த்தைகளால் வர்ணிக்கப்படாததாக இருக்கக் கூடும்.

நிலையானதா, நிலையற்றதா? என அறிய முடியாததாக இருக்கக்கூடும். அவ்வாறு தோன்றாநிலையில், வெளிப்படாத நிலையில், விதை வடிவாக, பீஜமாக இருக்கும் நிலையை, ஏற்கனவே **'அவ்யக்தம்'** என்று அழைத்தோம்.

காரண சரீரம் அவ்யக்தமாக இருக்கின்றது.

நாம் உறக்கத்தில் ஆழும் போது என்ன நிகழ்கின்றது?

அதுவரை விழிப்பு நிலையில் ஸ்தூல சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும், பீஜமாக, அவ்யக்தமாக ஒடுங்குகின்றன.

அதுவரை கனவு நிலையில் சூக்ஷ்ம சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும், பீஜமாக, அவ்யக்தமாக ஒடுங்கு கின்றன.

அனுபவங்கள் யாவும், தோன்றாநிலையிலேயே இருக்கின்றன. ஸ்தூல தேகத்துக்கும், சூக்ஷ்ம தேகத்துக்கும் இருக்கும் எல்லா உணர்வுகளும் ஒடுங்கிய நிலை.

மனம், புத்தி, சித்தம், அஹமர்த்தம் ஆகிய எல்லாமே விதை வடிவில், பீஜமாக ஒடுங்கிய நிலை உறக்கம் ஆகும்.

இதை *விவேக சூடாமணி*, '*ஸர்வப்ரகார - ப்ரமிதி - ப்ரசாந்திர் - பீஜாத்மனா அவஸ்திதி - ரேவ புத்தே: | ஸுஷுப்தி:*' எனப் ப்ரமாணம் செய்கின்றது.

நாம் உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது, நாம் காரண சரீரத்தை விடுத்து, ஸ்தூல சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

உடனே, அதுவரை, பீஜங்களாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து விரிவடைகின்றன. வ்யக்தமாகின்றன.

நாம் உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண சரீரத்தை விடுத்து, சூக்ஷ்ம சரீரத்தை அபிமானிக்கின்றோம். அப்போதும், அதுவரை பீஜங்களாக நம்மில் ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து விரிவடைகின்றன. வ்யக்தமாகின்றன.

உறக்கத்தில், அனுபவங்கள் யாவும், அவ்யக்தமாகவே விளங்குகின்றன.

விதையாக இருக்கும் காரண சரீரத்திலிருந்து, ஸ்தூல மற்றும் சூக்ஷும சரீரங்கள் விரிவதால், தத்வபோதம், '***சரீரத்வயஸ்ய காரணமாத்ரம்***' என்றது.

இதனாலேயே, உறக்கத்திலிருந்து விழித்தவுடன், உறங்குவதற்கு முன் நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. பல நேரங்களில், கனவு அனுபவங்கள் விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

உறங்கி, நனவில் விழிக்கும் போது விடுபட்ட இடத்திலிருந்து தொடர்வது போல, ஒரு கனவுக்கும் மற்றொரு கனவுக்கும் தொடர்பு இருப்பதில்லையே?

நனவில் நிகழ்வன நினைவில் இருப்பதைப் போல, கனவுகள் நினைவில் நிலைப்பதில்லையே?

கனவுகளைப் பற்றி மேலும் ஆராயும்போது அறியலாம்.

நாம், எப்பொழுதெல்லாம், காரண சரீரத்துடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம், எவ்வித அனுபவமும் இன்றி, ஏதும் அறியா நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதுப்போல) இருக்கின்றோம். இந்த நிலை

அறியாமை நிலை அல்லது அவித்யை நிலை என, *தத்வ போதம்* இதை, '***அவித்யாரூபம்***' என்றழைக்கின்றது.

உறங்கும் நேரங்கள் தவிர்த்து, நாம் காரண தேகத்துடன் சம்பந்தப்படும் தருணங்கள் உள்ளனவா?

ஆராய்வோம்.

அதற்கு முன், நம் அனுபவங்கள் யாவும், ஸுஷுப்தி அவஸ்தையில் அறியாமையிலேயே ஒடுங்குவதாகக் கண்டோம். அறியாமையிலிருப்பதால், எதையுமே உணராத நிலையில் இருப்பதால், நாம் முக்காலத்தும் மாறாத உண்மையையும் அறியாமல் இருக்கின்றோம்.

நம்மிடம் மாற்றத்தை உண்டு செய்யும் எதையும் உள்வாங்காது இருப்பதால், மாறுதல் இல்லாதிருக்கின்றோம்.

'*ஸத்ஸ்வரூபாஜ்ஞானம் நிர்விகல்பரூபம் யதஸ்தி தத்காரண சரீரம்*' என்றது *தத்வ போதம்*.

விகல்பம் அல்லது மாற்றம், காலம் மற்றும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே விளைகிறது. உறக்கத்தில், நாம் காலம், இடம் ஆகியனவற்றை உணராதே இருக்கின்றோம்.

காரண சரீரம், இடம், காலம் ஆகியவை அறியாத நிலையில் (அறியாமையில்) நம்மோடு சம்பந்தப்படுகின்றது.

அதனால், காரண சரீரம், மாறுதல் அடையாததாக உள்ளது. அதற்கு, முன்பிருந்த நிலையும் இல்லை, பிறகிருக்கும் நிலையும் இல்லை.

ஆக, அது காலத்தால் பாதிக்கப்படுவதில்லை.

இடம் என்பது, தன்மை, முன்னிலை, படர்க்கையாம். காரண சரீரம், அறிவதற்கு வகையில்லாததால், தனக்கு முன்னிலையோ, படர்க்கையோ அறிவதில்லை.

ஆக அது இடத்தால் பாதிக்கப்படுவதில்லை. ஆக காரண **சரீரம் நிர்விகல்பரூபம்** அல்லது மாறுதலில்லாதது என்றோம்.

பஞ்சபூதங்களின் ஸத்வ குணங்கள், தனித்தனியே வியஷ்டியாக, ஒவ்வொரு ஞான இந்திரியத்திற்கும் ஆதாரமாக இருந்ததைக் கண்டோம்.

காரண சரீரமானது, தன்மாத்திரைகளின், ஸத்வ குணங்களின், சமஷ்டியால், தொகுப்பால், உருவானது.

**'மலினஸத்வம்'** என்றார் ஆதிசங்கரர். களங்கப்பட்ட, நீர்த்த ஸத்வம் என்று பொருள்.

நாம் உறங்கும் போது ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருக்கின்றோம் என்று உணர்வதில்லையே தவிர, விழித்தவுடன், நாம் அதுவரை ஆனந்தமாக உறங்கினோம் என்று உணரவே செய்கிறோம்.

சரி, நாம் உறங்கும் போது ஆனந்தமாக இருந்தோம். அதாவது, எப்போதெல்லாம், ஸ்தூல சூக்ஷும தேகங்களை விடுத்து, காரண சரீரத்தை அபிமானிக்கின்றோமோ, அப்போதெல்லாம் ஆனந்தமாக இருக்கின்றோம்.

உறங்கும் போது ஸ்தூல சரீரமும், சூக்ஷும சரீரமும், செயல்படாது ஓய்ந்து விடுகின்றன. உடனே நாம் ஆனந்தமயமாகின்றோம்.

உறக்கம் – ஆனந்தம் என்று பொருள் கொள்ள வேண்டாம். நம், நித்திய அனுபவங்களில், உறக்கம் ஒன்றே, ஆனந்தத்திற்கு வெகு அருகண்மையில் வரும் அனுபவ மாகின்றது.

உறங்கும் போது வரும் ஆனந்தம் எதன் ஆதாரத்தில் விளைகின்றது என்று தெரிந்து கொண்டால், அதை மீண்டும், மீண்டும் அடையலாமே. முடிந்தால் அதிலேயே நிரந்தரமாக, லயித்திருக்கலாமே.

உறக்கத்தில் மட்டும் இல்லாது, விழிப்பு நிலையிலும் நாம் காரண சரீரத்தை அபிமானிக்கின்றோமா?

முற்றிலும், புறவுலகத் தொடர்பை நீங்கி, காரண சரீரமாக நாம் விளங்கும் கணங்கள், விழிப்பு நிலையிலும் உள்ளன.

அவைகள் யாவை?

அவற்றின் உண்மை லக்ஷணம் என்ன என்பதைச் சற்று நேரத்தில் பார்க்கலாம்.

அதற்கு முன், உறக்கத்தில் நாம், அஞ்ஞானத்தில் லயித்தவாறே, ஆனந்தமாய் இருந்தோம் என்ற அடிப்படை உண்மையை இடையறாது நினைவில் கொள்வோம்.

*விவேக சூடாமணி*, '*ஸுஷுப்தி - ரேதஸ்ய விபக்த்ய - வஸ்தா ப்ரலீன - ஸர்வேந்த்ரிய - புத்தி- வ்ருத்தி:*' என்கின்றது.

உறக்கத்தில் எல்லா இந்திரியங்களும் ஒடுங்கி விடுகின்றன. புத்தியின் வ்ருத்தியும் ஒடுங்கி விடுகின்றது. நாம் முழு அறியாமையில் இருக்கின்றோம்.

ஆக, உறக்கத்தில் காரண சரீரத்தை முழு அறியாமையில் அபிமானித்து இருக்கிறோம் என்று பொருள்.

உறக்கத்தில், அறியாமையில் காரண சரீரத்துடன் நமக்கு ஏற்படும் தொடர்பு, விழித்தபின், சில நொடிகளுக்கே நிலைக்கின்றது.

ஆகவே, உறக்கத்தால் விளைந்த ஆனந்தத்தின் இருப்பும், நேரமாக, ஆக நீர்த்துவிடுகின்றது. நாம் மீண்டும் உறங்க விழைகிறோம்.

முழுவதும் விழிப்பு நிலையில் இருக்கும் போது, சில நேரங்களில், நாம், (இந்த அனுபவத்தின் தன்மை அறியாமலேயே) காரண சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

இந்த நிலைகள், **ப்ரியம், மோதம், ப்ரமோதம்** என மூன்று நிலைகளாகின்றன. நமக்குப் பிடித்த, நாம் ஆசைப்படும் பொருளைக் காண்பதால் ஏற்படும் மகிழ்ச்சி '**ப்ரியம்**' எனப்படும்.

அந்தப் பொருள் நம் கைக்கு கிடைப்பதால், நமக்கு உடையதாவதால் ஏற்படும் மகிழ்ச்சி, '**மோதம்**' எனப்படும்.

அந்தப் பொருளை நாம் அனுபவிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி '**ப்ரமோதம்**' எனப்படும்.

இந்த மூன்று நிலைகளிலும், மனம் அடங்குகின்றது. ஆனந்தம் வ்ருத்தியாகின்றது என்பதை அறிவோம்.

நாம் காரண சரீரத்தை அபிமானிப்பதாலேயே அந்த ஆனந்தம் விளைந்தது என்பது இப்பொழுது விளங்கும். ஆனாலும், இந்த ஆனந்தமும், அஞ்ஞானத்தில், அறியாமையில் விளைந்த ஆனந்தமே.

ஏனெனில், அந்தச் சில கணங்கள், நாம், நம் புத்தி நிலை கொண்டுள்ள சூக்ஷ்ம தேகத்தின் தொடர்பில்லாமல் தான் இருக்கின்றோம். காரண சரீரத்தையே முழுதும் அபிமானித்து இருக்கின்றோம்.

அதாவது, அறியாமையிலேயே இருக்கின்றோம். ஆகவே, இந்த ஆனந்தமும் நிலைப்பதில்லை.

எண்ணங்களற்று, உணர்வு மாத்திரமாக இருக்கும் நிலையே ஆனந்தம். எதையேனும் அடைய விரும்பும் எண்ணம் நம் மனதில் எழுந்து, எண்ணம் செயலாகி, அடைய விரும்புவதை அடைந்தவுடன், உணர்வு மாத்திரமாகின்றோம்.

எண்ணங்களற்று, உணர்வு மாத்திரமானதும், ஆனந்தத்தில் திளைக்கின்றோம். ஆனந்தமயமாகின்றோம்.

மீண்டும் எண்ணம் எழ, மனம் ப்ரவ்ருத்தியாகி, ஆனந்தத்தை மறக்கின்றோம். நாம் விழிப்பு நிலையிலும், கனவு நிலையிலும் காரண சரீரத்தை அபிமானித்தும், அறியாமையிலேயும் இருக்கின்றோம்.

அந்த ஆனந்தம், அனுபவிக்கப்படும் கணங்களில் மட்டும், புத்திக்கு வியாபகமில்லாமல் போய்விடுகின்றது. உறக்க நிலையிலோ, புத்திக்கு இருப்பே இல்லாததால், அது முழு அவித்யா நிலை அல்லது அறியாமை நிலை.

அறியாமையால் களங்கப்பட்ட ஸத்வ குணங்களின் சமஷ்டியால் ஆனது. ப்ரியம், மோதம், ப்ரமோதம் ஆகியவற்றின் வ்ருத்தியால் ஆனது.

ஆனந்தமயமானது, இந்தக் காரண சரீரமே **“ஆனந்தமய கோசம்”** எனப்படும்.

'*ஏவமேவ காரணசரீரபூதாவித்யாஸ்த மலினஸத்வம் பிரியாதிவ்ருத்தி ஸஹிதம் ஸத் ஆனந்தமய: கோச:*' என்றது *தத்வ போதம்*.

இந்த ஆனந்தமய கோசம், நம் ஆனந்தவடிவமாக, ஆனந்தத்தை பிரதிபலித்தவாறு, ஆனந்தத்தின் பிரதிபிம்பமாக விளங்குகின்றது. அந்த பிரதிபிம்பம் வியாபித்த உருவமாக இருக்கின்றது.இதுவும் அவித்தையிலிருந்து தோன்றியது.

அவித்தையின் வேறொரு பரிமாணமாகவும் கூறலாம். நமக்குப் பிரியமான பொருள்களைக் காணும் போது விளையும் ப்ரியம், அடையும் போது விளையும் மோதம், அனுபவிக்கும் போது விளையும் ப்ரமோதம் ஆகிய குணங்களை உடையது.

நாம் செய்த நற்செயல்களின் விளைவை, புண்ணியங்களின் பயனை அனுபவிக்கும் போது, இது ஒளிர்கின்றது. நாம் ஆனந்த வடிவாகவே இருக்கும் போது காரண சரீரத்தை தரிக்கின்றோம்.

தன்னை அறியும் தத்துவங்கள்

நாம், எந்த முயற்சியோ, பிரயத்தனமோ இல்லாமலேயே ஆனந்தத்தை அனுபவிக்கின்றோம் என்றது *விவேக சூடாமணி.*

'*ஆனந்தப்ரதிபிம்ப - சும்பித - தனுர் - வ்ருத்திஸ்தமோ - ஜ்ரும்பிதா ஸ்யாதானந்தமய: ப்ரியாதிகுணக: ஸ்வேஷ்டார்த்த - லாபோதய: | புண்யாஸ்யானுபவே விபாதி க்ருதினோ - மானந்தரூப: ஸ்வயம் பூத்வா நந்ததி யத்ர ஸாது தனுப்ருன் - மாத்ர: ப்ரயத்தனம் விநா ||*' - இது மூலம்.

இதுவரை நமக்கு அனுபவங்களாகின்ற ஐந்து விஷயங்கள், பஞ்ச பூதங்கள், அவற்றின் ஸ்தூல, சூக்ஷம நிலைகள், குணங்கள், ஐந்து ஞான இந்திரியங்கள், ஐந்து கர்ம இந்திரியங்கள், ஐந்து (பத்து) பிராணன்கள், மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், பஞ்ச கோசங்கள், நான்கு அந்தக்கரணங்கள் ஆகியனவற்றைக் கண்டோம்.

ஒவ்வொரு தத்துவத்தின் அறிமுகத்துடன், அடிப்படை மட்டுமே விளக்கப்பட்டுள்ளது. முழுதும் விசாரித்து அறிய இந்த அடைப்படையாவது தேவை என்பதால் இங்கு இவ்வளவு விரிவாக அறிமுகம் செய்யப்பட்டன.

ஓம் தத் சத்!

# தன்னை அறியும் தத்துவங்கள்!



தான் இருப்பதாக, தனக்கு ஒரு இருப்பை கற்பனை செய்து கொண்டு, தனக்கு நாம ரூப குண திறன்களை வரையறுத்துக் கொள்வது, தன்னைச் சுற்றி உள்ள எல்லாவற்றுக்கும், நாம பேதங்கள், ரூப பேதங்கள், குண பேதங்கள், திறன் பேதங்களை உரித்தாக்கி பகுப்பது, காலம், செயல், சம்பந்தம் ஆகியனவற்றை கற்பிப்பது என்னும் யாவும் மனதின் செயல்களே.

மனம் அழியும் போது, மற்ற எல்லாம் அழிகின்றன. மனம் எழும்போது, மற்ற எல்லாம் எழுகின்றன என்றார் ஆதிசங்கரர்.